Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 233
ஞாயிற்றுக்கிழமை
17 ஜூலை 2022
ஆடி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16+08
விலை: 60/=

## தேசிய 'பாஸ்' நேற்றே 'பெயில்'!

கொழும்பு, ஜூலை 17
வாராந்தம் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக நேற்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்டம் சாத்தியமானதன்று. அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 15 ➤

## எரிபொருள் அட்டை நடைமுறை தொடரும்

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17
எரிபொருளுக்கு தேசிய ரீதியிலான 'பாஸ்' வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், யாழ். மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளஎரிபொருள்அட்டை நடைமுறைதொடர்ந்தும் முன்னெடுக் 15 ➤

## யாழ்ப்பாணம் நகரத்தில் 10 இலட்சம் ரூபா வழிப்பறி

யாழ்ப்பாணம், ஜூலை 17
யாழ்ப்பாணம் நகரில் உள்ள கோட்டை முனியப்பர் ஆலயம் முன்பாக ஒருவரிடமிருந்து 10 இலட்சம் ரூபா பறித்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் 15 ➤

### பொலிஸார் விரட்டல்

## தப்பியோடிய டிப்பரால் ஏழு பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 17
மணலைக் கடத்திச்சென்றதாகச் சந்தேகிக்கப்படும் டிப்பரை பருத்தித்துறை பொலிஸார் துரத்திச் சென்ற 15 ➤

### வரிசைகளில் நின்று பயனில்லை

## எரிபொருளுக்கு இனிமேல் தேசிய ரீதியிலான 'பாஸ்'

### புதிய இணையத்தளத்தை அறிமுகப்படுத்தி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17
எரிபொருளை சிரமமின்றி பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக தேசிய ரீதியிலான 'பாஸ்' நடைமுறை மின்சக்தி எரிசக்தி அமைச்சால் உருவாக்கப்பட்டுள்ளது. 15 ➤

### ஜனாதிபதித் தெரிவு

## நான்கு முனைகளில் கடுமையான போட்டி

கொழும்பு, ஜூலை 17
புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறும் தேர்தலில், கட்சித் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை களமிறக்குவதற்கு தேசிய மக்கள் சக்தி முடிவெடுத்துள்ளது. இதனால் ஜனாதிபதி தெரிவுக்கு போட்டியிடுபவர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்து பலமுனைப் போட்டிக்களமாக மாறியுள்ளது. 15 ➤

## துரித நிவாரணம் ரணில் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 17
பொருளாதார அழுத்தத்தில் உள்ள மக்களின் சுமையைக் குறைக்கும் வகையில் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய 15 ➤

## படைகளுக்கு அதிகாரங்கள்

### ரணில் முடிவு

கொழும்பு, ஜூலை 17
நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு தேவையான 15 ➤




"எப்பவும் எங்கட ஆக்கள் கடைசி மட்டும் முடிவு சொல்லாமல் இழுத்தடிக்கிறதில கெட்டிக்காரர் பாருங்கோ..."

## 'நான் நடுநிலைமை!'

### விக்னேஸ்வரன் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 17
புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் நடுநிலை வகிப்பதென்ற நிலைப்பாட்டில் தற்போதுவரை உள்ளேன். ஜனாதிபதி வேட்பாளர்கள் எம்முடன் கலந்துரையாடி எமது 15 ➤

## கடைசி நேரத்திலேயே நாம் தீர்மானிப்போம்

### கூறுகிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 17
புதிய ஜனாதிபதியாக யாரைத் தெரிவு செய்வது என்பது தொடர்பில் இறுதி சமயத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் 15 ➤




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரமுனவில் பிளவு

- பீரிஸை பதவிநீக்கத் தீர்மானம்
- டலஸ் ஆதரவு அணி தனிவழி?
- ரணிலின் பெரும்பான்மை கேள்விக்குறி

கொழும்பு, ஜூலை 17

**பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்து, ஜி.எல்.பீரிஸை நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரத்தில் தகவல்கள் கசிந்துள்ளன. இந்தப் பதவிநீக்கம் உறுதியானால் பெரமுனவில் தற்போது அரசல்புரசலாக ஏற்பட்டுள்ள பிளவு மேலும் அதிகரிக்கும்.**

கோத்தாபய ராஜபக்ச பதவி விலகியதை அடுத்து, அடுத்த ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வேட்புமனுக்கள் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு மறுநாள் 20ஆம் திகதி வாக்கெடுப்பும் இடம்பெறவுள்ளது. பொதுஜன பெரமுனவின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப்படவுள்ளார். 'பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக ரணில் களமிறக்கப்படுவார். அவரை பெரமுன ஆதரிக்கும்' என்று பெரமுனவின் செயலர் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், காரியவசத்தின் தகவல்களை மறுத்த, பொதுஜன பெரமுனவின் மூத்த ஆளுமையும், வெளிவிவகார அமைச்சரும், பெரமுனவின் தவிசாளருமான ஜி.எல்.பீரிஸ், 'பெரமுனவின் சார்பில் டலஸும் போட்டியிடப்போகின்றார். டலஸ் பெரமுனவில் உள்ளதால் அவரைத்தான் ஆதரிப்போம்' என்று தெரிவித்தார்.

இந்த முரண்பட்ட தகவல்களால் பெரமுனவுக்குள் விரிசல் விழுந்தமை நேற்றுமுன்தினம் இரவு உறுதியானது.

இந்த நிலையில், கட்சியின் முடிவுக்கு முரணாகச் செயற்படுகின்றமையால் கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து பீரிஸை நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ரணிலை ஆதரிக்கும் பெரமுனவின் அணியினர் அறிவித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

இதேவேளை, ரணிலை ஆதரிப்பதாக அறிக்கை வெளியிட்டமைக்காக பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசத்திடம் விளக்கம் கோரி பெரமுனவின் தவிசாளர் பீரிஸ் கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்வாறு பெரமுனவுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதால், ரணிலின் பெரும்பான்மைப் பலம் இல்லாதுபோகும் நிலையும் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-14-இ)

# நாட்டை மீட்டெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் ஈடுபாடு!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17

நாட்டை தற்போதைய நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கான திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடும் ஒவ்வொருவருடனும் கலந்துரையாடப்படும். இதில் நாம் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவோம் என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஆளும்கட்சியில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் ஒவ்வொருவருடனும் நாம் கலந்தாலோசிப்போம். சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு டலஸ் அழகப்பெரும சம்மதித்தால் மாத்திரமே அவரை பரிசீலிப்போம் -என்றார். (ம)

# சிவில்போரை நோக்கி தள்ளுகின்றார் ரணில்

## முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 17

பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள், நாட்டை சிவில் போர் நோக்கித் தள்ளிவிடும் ஆபத்து உள்ளது என்று முன்னிலை சோசலிசக்கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முன்னிலை சோசலிசக்கட்சியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

குறைந்தது இரண்டு நாள்களுக்காகவது ஜனாதிபதியாக பதவிக்கு வர வேண்டும் என்ற சிறுபிள்ளைத்தனமான எதிர்பார்ப்புடன் ரணில் பதில் ஜனாதிபதிப் பதவியை கட்டிப்பிடித்துக்கொண்டார். கோத்தாபய ராஜபக்ச பதவி விலகி ரணில் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரவில்லை.

ரணில் விக்கிரமசிங்க செல்லும் பாதை எங்கு போய் முடியும் என்பதை இலங்கை மக்கள் முடிவு செய்வார்கள். ரணில் விக்கிரமசிங்க செல்ல நினைக்கும் பாதை காலம் தாழ்ந்து விட்டது. ரணில் தன்னைப் புதுப்பித்துக்கொள்ளவில்லை. தற்போதைய காலம் 83ஆம் ஆண்டு போல் மக்களைக் கொன்ற காலம் என அவர் நினைத்துக்கொண்டிருக்கின்றார். இல்லை இது 2022ஆம் ஆண்டில் இருக்கும் இலங்கை.

தற்போது அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட வேண்டும் என்ற விடயத்தை ரணில் முற்றாக மீறியுள்ளார். அவரை ஜனாதிபதியாக எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. தமது பாதுகாப்புக்காக ரணிலை வைத்துக்கொள்ள வேண்டும் என்று பொதுஜன பெரமுன நினைத்துக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் மக்கள் ஆணைக்கு தலை வணங்குவதன் மூலம் பாதுகாப்பு இருக்கும் என்பதை நாங்கள் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூறவிரும்புகின்றோம் -என்றார். (ம-14-இ)



# ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுதலை?

## அனைத்து சாத்தியங்களையும் ஆராயுமாறு ரணில் உத்தரவு

கொழும்பு, ஜூலை 17

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலையை துரிதப்படுத்த வேண்டும் என்று பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் கோரிக்கைகளுக்கு அமைய, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார். (ம-ய)

# வாக்களிக்காமல் இருப்பதற்கு சுதந்திரக் கட்சி பரிசீலனை!

கொழும்பு, ஜூலை 17

ஜனாதிபதித் தேர்தலின்போது எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்காமல் இருக்க தீர்மானிக்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதித் தெரிவு இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் எவரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக சுதந்திரக் கட்சியின் உயர்மட்டக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போதே எந்தவொரு வேட்பாளர்ரையும் ஆதரிக்காமல் விடுவது என்று சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.

எனினும், முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன, வாக்கெடுப்பைப் புறக்கணிக்காமல் அனைவரும் கலந்துரையாடி ஏகமனதாக ஒருவரை தெரிவு செய்வதே சிறந்தது என சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னதாக, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தெரிவின் களமிறங்குவார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ரணில் பதவி விலகாவிடின் குழப்பம் தொடரும்

## மக்கள் எழுச்சி கட்சியின் தலைவர் தெரிவிப்பு

கொடிகாமம், ஜூலை 17

பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க பதவி விலகாவிட்டால் நாட்டில் தொடர்ந்தும் குழப்பகரமான சூழலே நிலவும் என மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள் ஜெயந்திரன் தெரிவித்துள்ளார்.

கொக்குவிலில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய கோத்தாபய ராஜபக்ச மற்றும் ரணில் விக்கிரமசிங்க இருவரும் பதவி துறக்க வேண்டும் எனக்கோரி மக்கள் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். கோத்தாபய பதவி விலகினாலும், ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். அவர் ஜனாதிபதியாகும் கனவோடு காய்நகர்த்தல்களை மேற்கொள்கிறார். ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தால் நாட்டின் நிலைமை இன்னமும் மோசமாகி தொடர் குழப்பநிலையே உருவாகும். நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு சீர்செய்யப் போகிறோம் என்ற திட்டமொழிவை வழங்குபவர்களையே நாடாளுமன்றம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டும் -என்றார். (சு-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைக்கு இனியும் என் சேவை தொடரும்

## முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 17

இலங்கை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பின்னரும் நாட்டுக்குத் தொடர்ந்தும் சேவையாற்றுவேன்- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாசிக்கப்பட்ட அவரது பதவி விலகல் கடிதத்திலேயே கோத்தாபய இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: ஜனாதிபதியாகப் பதவியேற்ற 3 மாதங்களுக்குள் கொரோனாத் தொற்று உலகம் முழுவதையும் பாதித்தது. அந்த நேரத்தில் இலங்கையைத் தொற்று நோயிலிருந்து பாதுகாக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் திருப்தியாகவுள்ளது. 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் பொது முடக்கங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலம், நாடு அந்நியச் செலாவணியை இழந்தது. இதனாலேயே ஏற்கனவே பாதிக்கப்பட்ட பொருளாதாரம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (ம-14.இ)

# ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட வேண்டாம்

## உடனடியாகப் பதவி விலகுமாறு ரணிலுக்கு வலுக்கிறது எதிர்ப்பு

**கொழும்பு, ஜூலை 17**

**நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி ஜனாதிபதி பதவிக்காக வேட்பு மனுக்கள் கோரப்படும்போது, மனுத்தாக்கல் செய்ய வேண்டாம். மக்கள் ஆணையற்ற அரசாங்கத்தை உருவாக்க எத்தனிக்க வேண்டாம் என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி ரணில் உடனடியாகப் பதவி விலகவேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தை அடக்குமுறைக்கும் வன்முறைகளுக்கும் பயன்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அந்த அடக்குமுறைகளுக்கு ரணில் எப்போதும் துணை போகக்கூடாது.

மக்கள் ஆணையற்ற அரசாங்கத்துக்கு நற்பெயரை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ரணில் ஈடுபடக்கூடாது.

நாட்டிலிருந்து தப்பிச்சென்ற இழிவான ஜனாதிபதியாலேயே ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்- என்றுள்ளது. (ம)

# ஓய்வுபெற்ற ஜனாதிபதிக்குரிய வரப்பிரசாதங்கள் கோத்தாவுக்கும்!

கொழும்பு, ஜூலை 17

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உரிய காலத்துக்கு முன்னர் பதவி விலகியிருந்தாலும், ஓய்வுபெற்ற ஜனாதிபதிக்கான வரப்பிரசாதங்களை அவர் பெறுவார் என ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயதிஸ்ஸ டி கொஸ்தா தெரிவித்துள்ளார்.

1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஜனாதிபதியின் உரிமை சட்டத்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமையை முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் அவருக்குப் பின்னர் அவரது மனைவியும் அனுபவிப்பர் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# பாக்லே – சபாநாயகர் உயர்மட்டப் பேச்சு!

கொழும்பு, ஜூலை 17

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இருவரும் நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது தற்போதைய முக்கியமான தருணத்தில் ஜனநாயகம் மற்றும் அரசமைப்புக் கட்டமைப்பை நிலைநிறுத்துவதில் நாடாளுமன்றம் ஆற்றுகின்ற பங்களிப்பை இந்தியத் தூதுவர் பாராட்டினார்.

அத்துடன் இலங்கையில் ஜனநாயகம், உறுதித்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்தும் உறுதுணையாக இருக்கும் என்றும் இந்தியத் தூதுவர் சபாநாயகரிடம் தெரிவித்தார். (ம-14.இ)



# பாரசீக வளைகுடா நிதி மையத்துடன் ராஜபக்சக்களுக்கு வலுவான உறவு!

கொழும்பு, ஜூலை 17

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது நாட்டை விட்டு வெளியேற முயற்சித்தபோது, ஐக்கிய அரபு இராச்சியத்தை தனது விருப்பமான இடமாகத் தேர்ந்தெடுத்தமை பாரசீக வளைகுடா நிதி மையத்துடன், ராஜபக்சக்களுக்கு உள்ள உறவுகளை கோடிட்டுக் காட்டுகின்றது என்று சர்வதேச புலனாய்வுச் செய்தியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

முன்னதாக, சர்வதேச புலனாய்வு செய்தியாளர்களின் கூட்டமைப்பு, கடல்சார் நிதி தொடர்பான பண்டோரா ஆவணங்களில் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களின் சொத்துக்களையும் வெளிப்படுத்தியிருந்தது.

ராஜபக்ச குடும்பத்தின் நிருபமா ராஜபக்சவும் அவரது கணவர் தொழிலதிபர் திருக்குமார் நடேசனும் இரகசிய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளை பயன்படுத்தி 18 மில்லியன் டொலருக்கும் அதிகமான சொத்துக்களையும், லண்டன் மற்றும் சிட்னியில் கலைப்படைப்புகள் மற்றும் சொகுசு சொத்துக்களை வைத்திருந்தனர் என்பதை பண்டோரா ஆவணங்கள் வெளிப்படுத்தின.

2019ஆம் ஆண்டு நிலைவரப்படி நடேசன் தம்பதியரின் இரண்டு பிள்ளைகள் டுபாயில் வசிப்பவர்கள் என்பதை ஐக்கிய அரபு இராச்சிய குடியுரிமை அடையாள அட்டை மற்றும் பிற பதிவுகள் உறுதிப்படுத்தின.

2016ஆம் ஆண்டு நடேசன் தனது நிறுவனங்களில் ஒன்றின் வங்கிக் கணக்கைத் திறப்பதற்கான விண்ணப்பத்தில் டுபாய் முகவரியை தனது வசிப்பிடமாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் கடந்த ஒக்ரோபரில் தம்பதியரின் கடல்சார் சொத்துக்கள் பற்றிய பண்டோரா ஆவணங்கள் வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய, தனது அரசாங்கம் இது தொடர்பில் விசாரணை நடத்தும் என்று அறிவித்தார்.

எனினும் அது தொடர்பில் உரிய தகவல்கள் பின்னர் வெளியாகவில்லை. கோத்தாபயவின் இந்த உதாசீனப் போக்கு, அவர் தற்போது விருப்பமான இடமாக ஐக்கிய அரபு இராச்சியத்தை தெரிவுசெய்தமைக்கும், இந்த வர்த்தகங்களுக்கும், தொடர்புகள் இருப்பதை உறுதிப்படுத்துகின்றதாகவே அமைகின்றது என்று சர்வதேச புலனாய்வு செய்தியாளர்களின் கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

கந்தகாடு

# மறுவாழ்வு நிலைய மோதல் சபாநாயகரிடம் அறிக்கை!


கொழும்பு, ஜூலை 17

கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் கடந்த மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற மோதல்கள் தொடர்பான அறிக்கை நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட நான்கு இராணுவ மற்றும் விமானப்படை சிப்பாய்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். உடற்கூற்றுப் பரிசோதனையின் போது, கூர்மையற்ற ஆயுதங்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் இந்த மரணம் ஏற்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவின்றித் தவிக்கும் 9 லட்சம் குடும்பங்கள்!



**கொழும்பு, ஜூலை 17**

**நாட்டில் சராசரியாக 9 இலட்சம் குடும்பங்கள் தங்களது அன்றாட உணவைப் பெற்றுக்கொள்ளக்கூட வழியில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் உள்ள 17 இலட்சம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் 9 இலட்சம் குடும்பங்கள் ஒரு வேளை உணவு அல்லது இரண்டு வேளை உணவு உண்ணும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளி விவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் உள்ள 9 இலட்சத்து 35 ஆயிரம் சிறுதொழில் நிறுவனங்களில் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தில் உள்ளன. இந்த வர்த்தக நிறுவனங்களில் 30 இலட்சத்துக்கும் அதிகமானோர் பணிபுரிகின்றனர். மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் ஊழியர்களின் சம்பளம் வழங்குவதில் உள்ள சிரமம் காரணமாக இந்த நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## 1000 மெ.தொன் சீன அரிசி இலங்கைக்கு கையளிப்பு!

கொழும்பு, ஜூலை 17

பாடசாலை சத்துணவுத் திட்டத்துக்காக, இலங்கைக்கு இரண்டாவது கட்டமாக ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை சீனா வழங்கியுள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு, பாடசாலை மதிய உணவுத் திட்டத்துக்காக 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி வழங்கப்படும் என்று சீனா கூறியிருந்தது.

கடந்த ஜூன் 28ஆம் திகதி ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு சீனா வழங்கியிருந்த நிலையில் தற்போது மேலும் ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை வழங்கியுள்ளது. (எ-இ)



## சிலிண்டர் விநியோகத்தில் குழப்பம் என போராட்டம்!

கொழும்பு, ஜூலை 17

நுவரெலியா நகரப் பகுதியில் நேற்று லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்ட நிலையில், அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இரு நாள்களாக எரிவாயு சிலிண்டரைப் பெற பெரும் எண்ணிக்கையான மக்கள் காத்திருந்த நிலையில் கூப்பன் வைத்திருப்பவர்களுக்கே சிலிண்டர் விநியோகிக்கப்பட்டதால் மக்கள் போராட்டம் நடத்தினர்.

இந்த விடயத்தில் நுவரெலியா பொலிஸார் தலையிட்டு அங்கு அமைதியை ஏற்படுத்தினர். (எ-இ)

## எரிபொருள் வரிசையில் மற்றுமொரு உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 17

எரிபொருள் வரிசையில் காத்திருந்த மற்றுமொரு நபர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கெக்கிராவ அவுக்கணைப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதான ஓட்டோச் சாரதியே உயிரிழந்தவராவர். குறித்த நபர் அநுராதபுரம் கெக்கிராவ - இபலோகம ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் பெறக்காத்திருந்தபோதே குறித்த நபர் உயிரிழந்தார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-இ)



## பேசாலை மக்களுக்கு எரிவாயு விநியோகம்!

மன்னார்; ஜூலை 17

மன்னார் பேசாலையில் மிக நீண்ட நாள்களுக்குப் பின்னர் நேற்று லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. மக்கள் வரிசைகளில் காத்திருந்து எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொண்டனர்.

நாட்டில் எரிவாயு சிலிண்டருக்குத் தட்டுப்பாட்டு ஏற்பட்டுள்ள நிலையில், பேசாலையில் நீண்ட காலமாக எரிவாயு சிலிண்டர் விநியோகம் நடக்கவில்லை. அதனால் மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்திருந்தனர்.

இரு தினங்களுக்கு முன்னர் மன்னார் நகரப் பகுதியில் எரிவாயு சிலிண்டர் விநியோகம் நடைபெற்றிருந்த நிலையில், பேசாலை மக்கள் ஏ-14 வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர். தங்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

நேற்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேரடியாக பேசாலையில் மக்களுக்கு எரிவாயு சிலிண்டர்களை விநியோகித்தது. பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட அட்டையில் பதிவு செய்யப்பட்டு 550 பேருக்கு எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன. ஆயினும் ஏராளமான மக்கள் வரிசையில் காத்திருந்தனர். (எ-60)

# ஜனாதிபதி வேட்பாளராக சஜித் ஐ. மக்கள் கூட்டணியும் சம்மதம்!



கொழும்பு, ஜூலை 17

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்படவுள்ள நிலையில், இந்தத் தேர்தலில் சஜித் [illegible] தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் சஜித்தைக் களமிறக்கும் முடிவை எடுத்தது. இது ஐக்கிய மக்கள் கூட்டணியின் நேற்றைய நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் [illegible]க்கப்பட்டது. இதன்போதே சஜித் களமிறங்குவதற்கு ஐக்கிய மக்கள் கூட்டணியும் சம்மதம் தெரிவித்தது.

சஜித்தை ஜனாதிபதியாக்குவதற்கு, இதர கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பான கலந்துரையாடல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற எரிபொருள் வழங்கவேண்டும்

## கிளி. மாவட்டச் செயலருக்குக் கடிதம்

**கிளிநொச்சி, ஜூலை 17**
**கிளிநொச்சி மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுவதற்கு எரிபொருள் வழங்கவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலர்கள், தவிசாளர்கள் மாவட்டச் செயலருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.**

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது,

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால் கிளிநொச்சி மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகத்தைப் பிரதேசசபைகள், பிரதேச செயலகங்கள் மேற்கொள்வது வழமை. கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரிவுகளுக்குட்பட்ட கிராம மக்களுக்கு அந்தந்த பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

அத்துடன் மருத்துவமனைகள், பாடசாலைகளுக்கும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் மாவட்டத்தின் குடிதண்ணீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது. இந்த நிலையில் எரிபொருள் கிடைத்தால் மட்டுமே குடிதண்ணீர் விநியோகத்தை பிரதேசசபைகள், பிரதேச செயலகங்கள் தடையின்றி மேற்கொள்ள முடியும்- என்றுள்ளது. (ம-14,13)

# அரச மாளிகைகளின் சேதங்களை மதிப்பிட ஆரம்பித்தது அரசாங்கம்

## சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 17
ஜனாதிபதி மாளிகை உட்பட கொழும்பு நகரில் உள்ள அரச மாளிகைகளில் போராட்டக்காரர்களால் சேதப்படுத்தப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் தொடர்பிலான கணக்காய்வை ஆரம்பிப்பது தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரிமாளிகையில் தொல்லியல் பெறுமதியான பல சொத்துக்கள் அழிந்து போயுள்ளன என்று தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் அண்மையில் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த அழிவுகள் சம்பந்தமாக திணைக்களம் அண்மையில் விசாரணைகளை ஆரம்பித்தது. இந்த செயல்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. (ஏ-இ)

# எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வேண்டும்!

## எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 17
எதிர்வரும் நாள்களில் எரிபொருள் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவப் பாதுகாப்பு போடப்பட வேண்டும் என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் நாள்களில் எரிபொருள் வரும் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் விநியோகப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆனால் கூப்பன்களை விநியோகிக்க இராணுவம் இல்லை. இராணுவமே கூப்பன்களை வழங்கியது. இப்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து இராணுவம் அகற்றப்பட்டுள்ளது. எனவே மீண்டும் இராணுவத்தினரே வந்து தாம் வழங்கிய கூப்பனுக்கு எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் எரிபொருள் விநியோகத்தின்போது பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

மேல் மாகாணத்தில் 320 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன. 180 தாங்கிகள் எரிபொருள் மட்டுமே கிடைக்கும் என எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் கிடைக்காது - என்றார். (ம)



# 40,000 தொன் டீசல் வந்தது

கொழும்பு, ஜூலை 17
40 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் அடங்கிய கப்பலொன்று நேற்று சனிக்கிழமை காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உடனடியாக டீசல் விநியோகிக்கப்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை இன்னுமொரு டீசல் கப்பலும் வரவுள்ளது.

அத்துடன் நாளை 18 ஆம் திகதி முதல் நாளைமறுதினம் 19ஆம் திகதிக்குள் பெற்றோல் கப்பல் ஒன்றும் வரவுள்ளது.

இந்த 3 எரிபொருள் கப்பல்களுக்கும் ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார். (ம-14,இ)

# முருங்கன் ஐ.ஓ.சி. நிலையத்திலும் எரிபொருள் அட்டைக்கு எரிபொருள்

மன்னார், ஜூலை 17
மன்னார் முருங்கன் ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் அட்டைக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குகளின் அடிப்படையில் நானாட்டான், மடு, மாந்தை மேற்கு, முசலி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 17 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நானாட்டான், முசலி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 9 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கு எரிபொருள் அட்டையில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு நேற்று சனிக்கிழமை எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

அத்துடன் இன்று ஞாயிற்றுக்கிழமை நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள கற்கடந்த குளம், இலந்தமோட்டை மற்றும் உமனகரி ஆகிய பிரிவுகளுக்கும் மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பழைப்பெருமாள்கட்டு, காத்தான்குளம் மற்றும் வட்டக்கண்டல் பிரிவுக்கும் மடு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மாளுவராயக் கட்டையடம்பன், பண்ணவெட்டுவான் ஆகிய பிரிவுகளுக்கும் எரிபொருள் விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-14,60)



திருகோணமலை - மூதூர் பிரதேச செயலர் பிரிவில், 'நேஷன்' என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு அந்தப் பொறிமுறையூடாக எரிபொருள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது. (ம)

# டீசலைப் பதுக்கிய சந்தேகநபர் கைது!

முல்லைத்தீவு, ஜூலை 17
முள்ளியவளை பகுதியில் வீட்டில் டீசலைப் பதுக்கிய குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட பெருங்குற்றப்பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொண்ட சோதனை நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து 830 லீற்றர் டீசல், 30 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டன. (ம-19)



# எரிபொருள் நிலையங்களில் மருத்துவர்கள்; சிகிச்சை பெறுவதற்கு நோயாளிகள் சிரமம்

சாவகச்சேரி, ஜூலை 17
எரிபொருள் பெறுவதற்கு மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்கள் எரிபொருள் நிலையங்களில் நீண்ட நேரம் செலவிடுவதால், நோயாளர்கள் உரிய நேரத்தில் சிகிச்சை பெற முடியாதுள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. சுகாதாரப் பணியாளர்கள் சரியான பொறிமுறை இல்லாமல் நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருக்கச் செய்யப்படுவதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால், சரியான எரிபொருள் பொறிமுறையொன்றை விரைந்து ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொருத்தமான தீர்மானம் எடுப்பார் யாருமில்லையா?

எரிபொருள் நெருக்கடியால் மக்கள் அனுபவிக்கும் நெருக்கடி ஒருபுறம் என்றால், நாளொரு திட்டமும் பொழுதொரு பொறிமுறையும் என அரசாங்கம் வெளியிடும் அறிவிப்புக்களால் மக்கள் இன்னமும் சிக்கலுக்குள் அமிழ்ந்துபோகின்றார்கள். எரிபொருள் நெருக்கடி மெல்லப் புகையத் தொடங்கியபோதே- சில மாதங்களுக்கு முன்னரே- எரிபொருளைப் பகிர்ந்தளிக்கும் பொறிமுறை ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்ற வேண்டுகோள்களும் எழுந்திருந்தன. ஆனால், அவற்றை நாட்டிலுள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உட்பட எவரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. விளைவு? எரிபொருள் நெருக்கடி உச்சம் பெற்றதால், மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை தோன்றியது.

அரசாங்கமும்சரி, அரச அதிகாரிகளும்சரி வெள்ளம் தலைக்கு போகும் வரையில் வாளாவிருந்துவிட்டு, அதன் பின்னரே அணை கட்ட முயன்றதால் இதுவரையில் எரிபொருள் விநியோகத்துக்கான பொறிமுறை ஒன்றை சீராக நடைமுறைப்படுத்த முடியவில்லை. பங்கீட்டு அட்டைக்கு வழங்கும் முறை ஓரளவு சீரடையத் தொடங்கியபோது, திடுதிடுப்பென 'எரிபொருளுக்கான தேசிய பாஸ்' என்ற நோக்கில் இணையம் மூலம் பதிவு செய்யும் நடைமுறை ஒன்றை மின்சக்தி, எரிசக்தி அமைச்சு நேற்று அறிமுகப் படுத்தியது. இனிமேல் இந்த இணையவழியில் மக்கள் முன்பதிவு செய்தால், வரிசையில் காத்திருக்காமல் வாராந்தம் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ளலாம் என அரசாங்கம் அந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தது. ஆனால், அதிக பயனாளர்களின் வருகையைத் தாங்கும் தன்மையோடு அந்த இணையத்தளம் வடிவமைக்கப்படாமையால், அறிமுகப்படுத்தப்பட்ட சில மணித்தியாலங்களிலேயே குறித்த இணையத்தளம் செயலிழந்து விட்டது. இனி அது எப்போது வழமைக்கு வரும் என்பது தெரியவில்லை.


புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள விநியோக நடைமுறை நாட்டு மக்களை சலிப்புக்குள்ளாகியிருக்கின்றது. ஏனெனில் இதுவரை அரசாங்கத்தால் எரிபொருள் விநியோகத்துக்கென பல நடைமுறைகள் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், எதுவும் உருப்படியாகச் செயற்பாட்டுக்கு வந்து பயனளிக்கவில்லை. ஒரு அறிவிப்பு வந்து மக்கள் அதற்குரிய பதிவுகளை மேற்கொண்டு முடிக்க முன்னரே இன்னொரு அறிவிப்பு என்று அரசாங்கமும் அதிகாரிகளும் குட்டையைக் குழப்பியபடியேயுள்ளனர். எரிபொருள் விநியோக அட்டை பெறுவதற்காக கிராம அலுவலரிடம் குடும்ப அட்டையைக் கொடுத்து விட்டு, அதைப் பெறுவதற்காக வாரக் கணக்காக அலைந்து கொண்டிருப்பவர்கள் ஏராளம்.

எரிபொருள் விநியோக அட்டை, மஞ்சள் அட்டை, ஊதா அட்டை, ரோக்கன், இணையப் படிவம் என்று மக்கள் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்த நிலையில்தான் இப்போது எரிசக்தி அமைச்சால் இணைய முன்பதிவு என்ற இன்னொரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இப்போது எந்த நடைமுறையின் கீழ் எரிபொருள் வழங்கப்படும் என்று தெரியாது திணறிப்போயுள்ள மக்கள், செயலிழந்துள்ள எரிசக்தி அமைச்சின் இணைய முன்பதிவு நடைமுறை எப்போது இயங்க ஆரம்பிக்கும், பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று 'போன் மீது விழிவைத்துக்' காத்திருக்கின்றனர்.

நாட்டில் இப்போதுள்ள நெருக்கடியில், மக்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நகர்த்தப் பெரும்பாடு படவேண்டியிருக்கின்றது. நாளாந்த உழைப்புக்காகவும், அத்தியாவசிய தேவைக்காகவுமே மக்கள் எரிபொருளுக்காக, நேரத்தையும் சிரமத்தையும் பாராமல் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். இப்போது இந்த வரிசைக்கு மேலதிகமாக பதிவுகளுக்கென்று மக்களின் நேரத்தின் பெரும்பகுதி செலவாகுகின்றது. தினம் தினம் மாற்றமடையும் அறிவிப்புக்களும், நடைமுறைகளும் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் தாக்கத்தைச் செலுத்தும் என்பதை மறுத்துவிட முடியாது. அதிகாரிகள் இந்த விடயத்தைப் புரிந்துகொண்டு, இனியாவது ஒரு விடயத்தைத் தீர ஆராய்ந்து தீர்மானித்து நடைமுறைப்படுத்த முயலவேண்டும். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று நடைமுறைப்படுத்தி விட்டுப் பின்னர் அவற்றில் ஒவ்வொரு திருத்தமாகச் செய்து கொண்டிருப்பது மக்களுக்கு விசனத்தையே ஏற்படுத்தும். அவ்வாறு மக்கள் மத்தியில் அதிகரிக்கும் குழப்பங்களே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோதல்களாக மாறுகின்றன. முட்டாள்தன முடிவுகளால் மக்களை வதைத்த காலம் ராஜபக்சக்களோடு தொலையட்டும். இனியாவது மக்களைக் குழப்பத்துக்கு உள்ளாக்காத சரியான, பொருத்தமான தீர்மானங்களை எடுங்கள். அப்படி பொருத்தமான தீர்மானங்களை எடுத்தாலே நாட்டில் இருக்கும் பெரும்பாலான பிரச்சினைகள் பாதியளவு குறைந்துவிடும்.

### நாளொரு நல்வார்த்தை

"தன்னை அதிக புத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடம் உள்ள மிகப் பெரிய பலவீனம்"
– சிம்மன்ஸ்



# ஜனாதிபதியாக மைத்திரி: சு.க.வினர் தீவிரமுனைப்பு



**கொழும்பு, ஜூலை 17**

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அடுத்த ஜனாதிபதியாக நியமிப்பது தொடர்பில் சுதந்திரக் கட்சியினருக்கும், பெரமுனவின் கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ள குழுவினருக்கும் இடையில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த சில நாள்களுக்கு முன்னர் பல வெளிநாட்டுத் தூதுவர்கள் முன்னாள் ஜனாதிபதியைச் சந்தித்து, தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து அரசியல் உறுதித்தன்மையை மீட்பதற்காக செயற்படுவதாக உறுதியளித்துள்ளனர். அத்துடன், மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், அதற்கு தங்களது அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே பொதுஜன பெரமுனவின் ராஜபக்சவுக்கு எதிரான குழுவும் எதிர்க்கட்சியின் ஒரு குழுவும் முன்னாள் ஜனாதிபதியை மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் என்றும் அதற்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளோம் எனவும் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சஜித்துடன் பேச்சு நடத்தவும் அவர்கள் தயாராகி வருகின்றனர். (ம)

# அரசமைப்பின் பிரகாரமே ரணில் பதில் ஜனாதிபதி

## *குழப்பமடைவதில் அர்த்தமில்லை ஐ.தே.க. செயலாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 17

அரசமைப்பின் பிரகாரமே ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்காக யாரும் குழப்பமடைவதில் எந்த அர்த்தமும் இல்லை என ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக கடமையை ஏற்றுள்ள நிலையில் அதுதொடர்பில் தெரிவிக்கப்படும் விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அரசமைப்பின் பிரகாரமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படவேண்டும். அதில் ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார். நாட்டில் ஜனாதிபதி இல்லாத நிலையில் பிரதமர் ரணில், பதில் ஜனாதிபதியாகச் செயற்படுவது அரசமைப்பின் பிரகாரமாகும்.


அதனால் ரணில் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதற்கு மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி அல்லது வேறு எந்த தரப்பினரும் குழப்பமடைவதில் எந்த பிரச்சினையும் இல்லை. எவரும் பிரதமராகப் பொறுப்பேற்க முன்வராத நிலையிலேயே ரணில் அந்தப் பதவியைப் பொறுப்பேற்றார் -என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

**நாளை**

**18.07.2022**
**திங்கட்கிழமை**
**ஆடி 02**

சுபநேரம் : 12.00 - 01.30
ராகுகாலம்: 7.30 - 9.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பல திருட்டுக்களில் ஈடுபட்டவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 17

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இரண்டு மோட்டார்கள் மீட்கப்பட்டன. அத்துடன் வட்டுக்கோட்டையில் இரு வர்த்தக நிலையங்களை உடைத்தும் அவர் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்தது. மேலதிக விசாரணைகளின் பின்னர் இளைஞரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-14-27)

## ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் இருவர் கைது!

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் இருவர் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டனர் என்று முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த பகுதியை சோதனையிட்டபோது இளைஞர் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். இளைஞர் இருவரையும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது, ஒரு கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கள்ளப்பாடு வடக்கைச் சேர்ந்த 23 வயதான இளைஞரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ம-14-19)

# கடும்காற்று வீசுவதால் வாழைச்செய்கை சேதம்

## எரிபொருள் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட நிலையில் மற்றொரு இடர்பாடு என்று விவசாயிகள் கவலை

**முல்லைத்தீவு, ஜூலை 17**

**கடும் காற்று வீசுவதால் முல்லைத்தீவுப் பகுதியில் வாழ்வாதாரத்துக்காக மேற்கொள்ளப்பட்ட வாழைச்செய்கை முற்றாக சேதமடைந்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் ஒருவாறு உருவாக்கி பராமரிக்கப்பட்ட வாழைகள் தற்போது காற்றால் பெரும் அழிவைச் சந்தித்துள்ளமையானது தமது வாழ்வாதாரத்துக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பு என்று முல்லைத்தீவு விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



குறிப்பாக, விசுவமடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வாழைச்செய்கை பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது. இந்த அழிவுகள் தொடர்பில் விவசாயிகள் தெரிவித்ததாவது:-

வருடாவருடம் இந்த அழிவுகள் எம்மை ஆட்கொள்கின்றன.

இது தொடர்பாக விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைத் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தும் போது திணைக்கள அதிகாரிகள் குறித்த பகுதிக்கு வருகைதந்து அழிவை மதிப்பீடு செய்கின்றனர். அதற்கான இழப்பீட்டுத்தொகை ஒரு போதும் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. மற்றைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு ஏற்பட்ட அழிவு பாரதூரமானது. ஏனெனில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக எரிபொருளை அதிக விலையில் கொள்வனவு செய்து நாளாந்தம் தண்ணீர் பாய்ச்சி இந்த வாழைகளை உருவாக்கினோம். இவை அனைத்தையும் அதிகாரிகள் கவனத்திற்கொண்டு எமக்கு சரியானதொரு இழப்பீட்டை பெற்றுத்தர வேண்டும் -என்றனர். (ம-14-113)

அத்துமீறிய மீன்பிடி

## 11 தமிழக மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

யாழ்ப்பாணம், ஜூலை 17

காரைநகர் மற்றும் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 11 தமிழக மீனவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை விதித்து விடுதலைசெய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட மேற்படி தமிழக மீனவர்கள், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களின் வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே அடுத்த 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்த 18 மாத சிறைத்தண்டனை விதித்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

எனினும், குறித்த மீனவர்கள் மீன்பிடிக்காகப் பயன்படுத்திய அவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை அரச உடைமையாக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ம-14-26-27)

## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஜூலை 17

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேல் மற்றும் வடமேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவு மழை பெய்யக்கூடும். அத்துடன் காற்றானது வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கி.மீ. வேகத்திலும், தென்மேற்கு திசையில் 30-40 கி.மீ வேகத்திலும், புத்தளத்தில் இருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பரப்புகளிலும் மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் புத்தளத்தில் இருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும், மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

எனவே மின்னல் தாக்கம், கடற்கொந்தளிப்பு போன்றவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் -என்றுள்ளது. (ய-இ)

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 17

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிக்கையிட்டுள்ளது.

ஜூலை மாதத்தின் இரண்டாவது வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகர்ப் பெறுதிக் கணக்கீட்டிலேயே, டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி மேலும் சரிவடைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. டொலருக்கான நிகர்ப் பெறுமதி மட்டுமல்லாமல், யூரோ, ஸ்ரேலிங் பவுண், யென் மற்றும் இந்திய ரூபாவுக்கான இலங்கை ரூபாவின் நிகர்ப் பெறுமதிகளும் சரிந்துள்ளன.




நாட்டில் கடந்த வாரம் உச்சக்கட்ட அரசியல் குழப்பம் நிலவியது. அது இந்த வாரமும் பூதாகரமாகத் தொடர்ந்தது. இந்த அரசியல் உறுதியற்ற நிலைமை ரூபாவின் பெறுமதி சர்வதேச பண அலகுகளுடன் ஒப்பிடுகையில் மேலும் வீழ்ச்சியடைவதற்குக் காரணமானது என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேசசபையின் ஒழுங்குப்படியே விவசாயிகளிடம் நெல்கொள்வனவு

## இடைத்தரகர்கள் சுரண்டல்களுக்கு கரைச்சிப் பிரதேசசபை நடவடிக்கை

**கிளிநொச்சி, ஜூலை 17**

**கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்கொள்வனவில் ஈடுபடுகின்ற இடைத்தரகர்கள் பிரதேசசபையின் ஒழுங்கு முறைகளின் கீழ் செயற்படும் முகமாக பதிவுசெய்யப்பட வேண்டும் எனப் கரைச்சிப் பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

கரைச்சிப் பிரதேசசபை அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றபோது பிரதேச சபை உறுப்பினர் மு.சிவமோகனால் கொண்டு வரப்பட்ட இந்தப் பிரேரணையே தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை காலங்களில் நெல் சந்தைபடுத்தும் சபையோ கூட்டுறவு சங்கங்களோ நெல்லை கொள்வனவு செய்யாததன் காரணமாக இடைத்தரகர்கள் தமக்கு ஏற்றவகையில் நியாயமற்ற விலைகளை நிர்ணயித்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்கின்றனர்.

இதன் காரணமாக உற்பத்தியில் ஈடுபடுகின்ற விவசாயிகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர் என கடந்த காலங்களில் விவசாயக் குழுக்கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் கொள்வனவில் இடைத்தரகர்களாக இருப்பவர்களைப் பதிவுசெய்தல் மற்றும் பிரதேசசபையின் ஒழுங்கு முறைகளின் கீழ் இயங்குதல் ஆகிய பிரேரணைகள் கரைச்சிப் பிரதேசசபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (ச-13)




சாவகச்சேரி இலஞ்சியாரணியம் மண்டுவில் கண்ணகை அம்மன் ஆலய தேர்த் திருவிழா, பக்தர்கள் சூழ அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (ச-131)

# மாடிமனையும் ஏழைக்குடிலும் கோடி பணமும் நாடிப்பணியும் ஆடிப்பிறப்பு

**கே.எஸ்.சிவஞானராஜா**

மானிடர்க்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒருநாள் என்ற வகையில் தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் ஈறாகத் தேவர்களுக்குப் பகல் பொழுதாகவும் ஆடிமாதம் தொடக்கம் மார்கழி மாதம் ஈறாகவுள்ள காலம் தேவர்களுக்கு இராப்பொழுதாகவும் அமைவதால் தைமாத முதலாம் திகதி தைப்பொங்கலாகவும் ஆடிமாதம் முதலாம் திகதி ஆடிப்பிறப்பாகவும் எம்மால் சிறப்பித்துக் கொண்டாடப் படுகின்றது. தையும் ஆடியும் மனிதம் மாண்புறும் மாதங்களாகத் திகழ்கின்றன. மானிட வாழ்வின் விடிவும், வடிவும், படிவும் இவ்விரு மாதங்களில் கிடைக்கின்றன. ஆடி அமாவாசை, ஆடிப்பிறப்பு, ஆடிக்கூழ், ஆடிச்செவ்வாய், ஆடிப்பெருக்கு, ஆடி பதினெட்டு, ஆடிப்பூரம், ஆடிக்காற்று, ஆடிவேல், ஆடிவிதை என ஆடிமாதத்தை அலங்கரிக்கும் முக்கியமான காரியங்கள் காரணத்தோடு அரங்கேறுகின்றன. இலங்கையில் ஆடிப்பிறப்பும், இந்தியாவில் ஆடிப்பெருக்கும் மிகவும் பிரபல்யமான வைபவங்களாகும். அனைவரும் சமம் என்பதான வரம் ஆடிமாதம் தந்துவிடும். மாடியும் குடிலும் கோடியும் கூழுக்கு அடி பணியும். சமரசமான ஆடிமாதப்பிறப் பன்று, தேவர்களும் மனிதர்களாகப் பூவுலகில் இறங்கிக் கூடிக்குலாவிட விரும்புவர். அதேபோல மனிதர்களும் தேவர்களாகப் பிரகாசிப்பர். இந்த அதிசயமும் ஆச்சரியமும் ஆடிப்பிறப்பன்று நிகழ்வதை உணரமுடியும். ஆடிப்பிறப்பன்று காய்ச்சப்படும் ஆடிக்கூழானது மனிதர்களுக்கு மட்டுமல்ல தேவர்களோடு பிதிர்களுக்கும் உரியது.



ஆடிக்கூழை எவரொருவர் பயபக்தியோடு மிகவும் தூய சிந்தையரோடு பரிசுத்தமாகப் பழைய முறைப்படி பாசிப்பயறு தாச்சியில் வறுத்து, திரிகையில் போட்டு ஆட்டி உடைத்து, வாசப்பருப்பாக்கி, சிவப்புப் பச்சையரிசியை ஊறவைத்து, உரலில் இட்டு உலக்கையால் இடித்து மாவாக்கி, தோண்டியில் நீர்விட்டு, வெல்லப்பனங்கட்டி போட்டு சூடாக்கி மாவையும் பருப்பையும் தேங்காய்ச்சொட்டையும் அதிலிட்டு அவியவிட்டு பதமாக்கி, பின் இறக்கி தேவர், பிதிர், சாமிக்கெல்லாம் படைத்து அடுப்பங்கரையிலும் கூரைப்புகட்டிலும் வைத்து ஊர்வன, பறப்பன யாவும் உண்ட பின் நிறைவாக எல்லோரும் ஒன்றாயிருந்து பகிர்ந்து கொள்கின்றாரோ அந்த வீட்டில் அத்தனையும் பலிக்கும். ஆடிக்கூழ் அனைவரையுமே வசீகரிக்க வல்ல பூரண உணவாகும். ஆடிமாதப் பிறப்பன்று தேவர்கள் சயனிக்கப் போகமுதல், பூவுலக வாசிகளுக்கு வரம்தரக் காத்திருப்பார்கள். ஆதலால் ஒவ்வொரு மனிதனும் அன்றைய நாளை மன்னிப்புக்கோரும் நாளாக எண்ணி, விட்ட தவறுகளுக்காக வருந்தி புதுமனிதனாக வாழ்வேன் என்று சத்தியப்பிரமாணம் எடுத்தல் வேண்டும். மது, மாது, மாமிசம், கொலை, களவு, கோபம், சண்டித்தனம், சாபம், தோஷம், போதை, கடத்தல், பொய், சூனியம் இதிலே சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இறுதி மன்னிப்பு எதற்காக என்றால் திருந்தி வாழ்வதற்கு ஒரு சந்தர்ப்பம் என்ற தோரணையாக ஆடிப்பிறப்பு அமைகின்றது.

இன்று சகல நிறுவனங்களிலும் ஊழலும், மோசடியும், லஞ்சமும், பாலியல் தொல்லைகளும் அதிகரித்த நிலையில், ஆடிப்பிறப்பு உரியவர்களுக்கு மன்னிப்புக்கு அப்பால் தண்டனையும் கொடுக்கவல்லது. பொறுமையோடு பொறுத்திருப்போம். காலம் தண்டனையை வழங்கும்.



# ஆடிப்பிறப்பை முன்னிட்டு பனங்கட்டிக்குக் கிராக்கி!

சாவகச்சேரி, ஜூலை 17

ஆடிப்பிறப்பை முன்னிட்டு சந்தைகளில் பனங்கட்டிக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஆடிப்பிறப்புக்கு கூழ் காய்ச்சுவதற்கு பாசிப் பயறும் மற்றும் பனங்கட்டியும் பயன்படுத்துவதால் மக்கள் அதிகமாகப் பனங்கட்டியைக் கொள்வனவு செய்கின்றனர். பனங்கட்டி அளவுக்கு ஏற்ற வகையில் 70 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டன.

தென்மராட்சி வடக்கு வரணிப் பகுதியில் பெருமளவு குடும்பங்களால் கைத்தொழிலாக பனங்கட்டி உற்பத்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14.9)

# ஓவியங்கள் காட்சிப்படுத்தலும் மாணவர்கள் கௌரவிப்பும்





சாவகச்சேரி, ஜூலை 17

சாவகச்சேரி ரீ.பீ.ஹன்ட் நினைவு ஓவியக்கூடத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவையொட்டிய ஓவியங்களின் காட்சிப்படுத்தலும் சிறந்த ஓவியங்களை வரைந்த மாணவர்கள் மற்றும் போட்டியாளர்கள் மதிப்பளிப்பும் நேற்று நடைபெற்றது.

ஓவியக்கூட நிறுவுநர் திருமதி யோகமணி அழகரட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.அபிராமி, கிளிநொச்சி தெற்கு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர்களான எஸ்.சிவரூபன், வி.பாலமுருகன், துணுக்காய் கல்வி வலய அழகியற்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.ராஜன், வட்டக்கச்சி மகா வித்தியாலய அதிபர் ப.ரவீந்திரநாதன், சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை போதகர் வண.ஏ.கே.செல்வநாயகம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதிகள் சேவை

உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை.
- வெளிநாடு:- 5-9 நாட்கள்
- உள்நாடு:- 24 மணித்தியாலம்

} ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெம்
077 755 4528

இல.321, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## நேரலை ஒளிபரப்பு



உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து நிகழ்வுகளையும்
உலகின் எப்பகுதியில் இருந்தும் – நேரலையாக
கண்டு மகிழுங்கள்!

SENTHAMIZHAN LIVE STREAMING

077 640 5572 / 076 234 5956

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 24 . 10 . 1966



மறைவு 13 . 07 . 2022

எமது நிறுவனத்தில் பணிபுரியும் **கேசகுமரன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் நவரெத்தினம் பரமேஷ்வரன்**
**(பரதன்)**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிறுவன உரிமையாளரும், ஊழியர்களும்,**
**டொட்லைன் கலர் லாப்**
**96, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.**
(CR 36657) (3/6)

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

- வெளிநாடு:- 5-9 நாட்கள் வரை
- உள்நாடு:- 24 மணித்தியாலம்

(CS 45569) (3/6)

**லங்கா கார்கோ (world wide Exprass)**
**315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 076 283 2397**

## Visit, Study & Work

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

- Visitor / Tourist Visa – All countries
- Minor Education – under age 17
- Skilled Migration – Express entry (PR)
- Study & Work – Canada (IELTS தேவையில்லை)
- Student Visa
  - Canada, UK, Australia & New Zealand (IELTS 6 – 6.5 தேவை)
  - France, Germany & Latvia (IELTS தேவையில்லை)

**Visa Consultant**
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. Tel: 0770385584
naltcjaffna@gmail.com

## மின்சாரம் துண்டித்து விட்டதா?
## மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?

**இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்**

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும் **J.J GROUP** 021 222 8854

(CS 19875)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

## உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலனசபை
## பொதுக்கூட்டம் 07.08.2022

மேற்படி எமது ஆலயப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் இடம்பெறும். இதன் போது ஆலய நலன் சார்பாகக் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் அல்லது பிரேரணைகள் ஏதுமிருப்பின் அவற்றை **செயலாளர், உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்** எனும் முகவரிக்கோ அல்லது நேரிலோ எதிர் வரும் (23.07.2022) சனிக்கிழமைக்கு முன்பதாக கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கவும். எழுத்து மூலமாக உரிய காலத்தினுள் பெற்ற விடயங்களே சபையில் எடுத்துக்கொள்ளப்படும்.

**செயலாளர்**
**உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்**
(CR 36662) (3/6)

## குடிதண்ணீர் வழங்கல் நிறுத்தம்

நயினாதீவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீர் சுத்திகரிப்பு ஆலையின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக குடிதண்ணீர் வழங்கலானது இன்று ஞாயிறுக்கிழமை முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை தடைப்பட்டிருக்கும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பிராந்திய முகாமையாளர் எந்திரி ஏ.ஜெகதீசன் அறிவித்துள்ளார். (ஒ-இ)

## வீடு வாடகைக்கு

உதயநகர் மேற்கு, கிளிநொச்சி (டிப்போ சந்தியில் இருந்து 3km) யில் 3 அறை, இணைந்த குளியலறையுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **074 205 3456**

## வீடு கொள்வனவுக்கு தேவை

யாழ். நகருக்கு சமீபமாக வீடு கொள்வனவுக்கு தேவை.

(CR 36661)(3/6) **077 743 1100**

## Fridge விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள Abans-Minibar (சிறியது) விற்பனைக்கு உண்டு.

**077 4435 414**

## வீட்டின் மேல்தளம் வாடகைக்கு

யாழ். சுண்டுக்குளிக்கு அண்மையாக மூன்று அல்லது நான்கு பேர் கொண்ட அரச அலுவலகங்களில் பணியாற்றும் குடும்பத்திற்கு வீட்டின் மேல் தளம் வாடகைக்கு விடப்படும். **077 4435 414**

## நீர்க்கசிவை தடுப்பதற்கான FINEX ஸ்தாபனத்தாரின் இரசாயனப் பொருட்களை

ஏக விநியோகஸ்தர்களான எங்களுடன்

விலைக்கழிவுடன்
பெற்றுக்கொள்ளலாம்.

**Nort and East Engineering**
55, Stanly Road, Jaffna, SriLanka
**077 232 3000**

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 20 . 07 . 1974



விண்ணில் 15 . 07 . 2022

## கலைமதி செல்லத்துரை

BBA (Spl) Hons, MPA, LLB (Hons), Accountant

பல்கலையில் ஒன்றானோம் பலகல்வி பயின்றோம்
படிப்போடு பகிடியும் பகிர்ந்திட்டோம் "கலைமதி"
பட்டப்பின் படிப்போடு நீ பட்டங்கள் பலவும் பெற்றிட்டாய்
பலதேசம் பறந்தாலும் பாங்கான நட்பை தொடர்ந்திட்டோம்
அனைவரது வார்த்தையிலும் வெளிப்படும் உன்னைப்பற்றிய
அணையா நினைவுகள் உன் தொழில்வாண்மை, நேர்மை
அன்பு அக்கறை அனைத்தையும் தெளிவாக்க
அனைவரையும் துன்பத்தில் ஆழ்த்தி மீளாத்துயில்கொண்டாய்
மரணம் கடந்துபோக வேண்டியதொன்று என்றாலும் - உன
பிரிவு அனைவரையும் ரணப்படுத்திவிட்டது நண்பியே
விழியோரம் கசியும் கண்ணீர்த்துளி இதயத்தை ரணமாக்கி
உள்ளத்தையும் ஒரு நொடி மௌனமாக்கிச் செல்கிறது நண்பியே

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(CT 36658) (2.7)

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும் : **நண்பர்கள் "[illegible] (1993/94)**
**யாழ்.பல்கலைக்கழக வணிக மு[illegible]**
**மற்றும் கலைப்பீடங்கள்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 08 . 1958



மறைவு 15 . 07 . 2022

## திரு.செல்வராஜா குமாரதேவன்

**(இளைப்பாறிய மத்திய நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் – வவுனியா, மன்னார்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை உவர்மலையை வதிவிடமாகவும் கொண்ட செல்வராஜா குமாரதேவன் அவர்கள் 15.07.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராஜா நித்தியலட்சுமி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், இரத்தினமாலா (ஓய்வுபெற்ற பல்மருத்துவர்- திருகோணமலை பொது மருத்துவமனை) அவர்களின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் மோகனதேவன் (வட மாகாண பணிப்பாளர் கட்டடங்கள் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மோகனப்பிரியன் (பொறியியலாளர்). Dr.ஜயவாணி (மருத்துவர் பிரித் தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.பவித்திரன் (மருத்துவர் பிரித் தானியா) அவர்களின் அன்பு மாமனாரும், யனிஷ் (பிரித்தானியா) அவர்களின் பாசமிகு பாட்டனும், அனுஷா, விக்னேஸ்வரராஜா (பொறியியலாளர் கனடா), காலஞ்சென்ற விமலேந்திரராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 18.07.2022 திங்கட்கிழமை அன்று அவரது திருமலை இல்லத்தில் நடைபெற்று பின்னர் பி.ப 04.00 மணியளவில் திருகோணமலை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்**
+94779492908, +94771699818 (இரத்தினமாலா - மனைவி)
+447491153144 (ஜயவாணி - மகள்)
+94773868576 (மோகனதேவன் - தம்பி)

28A, மக்கெய்சர் வீதி,
உவர்மலை,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ட்ரம்மின் மனைவி காலமானார்

நியூயோர்க், ஜூலை 17 அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்பின் முன்னாள் மனைவி இவானா ட்ரம்ப் தனது 73 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமாகியுள்ளார். இவர்களுக்கு டொனால்ட் ஜூனியர், இவான்கா மற்றும் எரிக் ட்ரம்ப் ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர். (ச-இ)


BEVERLEY INTERNATIONAL

**Study in UK / Canada / Spain**

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

மேலதிக தகவல்களுக்கு : 0776 929 773

பாத்திமா : 0706 697 660 | வேணுகா : 0718 517 994

**Beverley International**

Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka. Tel : 0112 576 656

Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277


## ஆதனப் பெயர் மாற்றம்

இல 26/1 கலீமாவீதி. யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 21 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் யாழ்ப்பாணம் மாநகரசபையின் வரிமதிப்பீட்டு புத்தகத்தில் சொந்தக்காரர் என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு ரசீன் முகமட் இமாம் முகதாவில் 31.08.2019 ஆம் திகதிய 1787 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் முகம்மது அமீன் அகமதா தானே இவ்வாதனத்தின் உரித்தாளர் என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ரசீன் முகமட் இமாம் முகதாவில் 07.10.2019 திகதியில் 1793 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் முகமட் அமீன் முகமட் சபீர்க்கு நன்கொடை வழங்கியிருந்தார்.

அதன் பின்னர் பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் வரையப்பட்ட 1811 இலக்க 23.10.2020 திகதிய அறுதி உறுதி மூலம் நீராவிப்பிட்டி மேற்கு முள்ளியவளையினை சேர்ந்த முகம்மது அமீன் அகமதா மற்றும் 15 C/15. மூர் வீதி. நிந்தினி. புத்தளத்தினைச் சேர்ந்த முகம்மது அமீன் முகம்மது சபீர் (மறுநாமம் முகம்மது அமீன் அலிசபீர் ) ஆகியோர் 145. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த முகம்மது சுல்தான் முகம்மது ஜமால்தீன் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளனர்.

**ஆதனவிபரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை. "பிராயடியும் புளியடியும்" நில.பர 0 குளி 13.94 ஆம் கிணறும். கழிவறையும் செய்பயிர். வான்பயிர்களும். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் J.H.R.பேரின்பநாயகம் அவர்களினால் 26.01.1979 ஆம் திகதி 2526 ஆம் இலக்கத்தில் வரையப்பட்ட நிலஅளவைப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டது.

**இதன் எல்லை,**

கிழக்கு : மயில்வாகனம் பெண் லட்சுமியம்மாவின் ஆதனம்.

வடக்கு : அசானர் ஹமீடின் ஆதனம்.

மேற்கு : குறித்த 2526 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட ஆதனம்.

தெற்கு : குறித்த 2526 ஆம் இலக்க நிலஅளவைப் படத்தில் துண்டு 6 எனச் சுட்டப்பட்ட பொதுவான பாதை ஆதனமும் துண்டு 3 எனச் சுட்டப்பட்ட ஆதனமும்.

தற்போது முகம்மது சுல்தான் முகம்மது ஜமால்தீன் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது முகம்மது சுல்தான் முகம்மது ஜமால்தீன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாநகர முதல்வர்**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம் .**

(CR 36653) (3/6)


## காணி விற்பனைக்கு

யாழ். இந்துக்கல்லூரி அருகில் பிரப்பன் குளம் வீதியில் 2 பரப்பு 2 குளி காணி விற்பனைக்கு உண்டு

077 229 0303, 070 629 0303

## தேவை

வீட்டில் தங்கியிருந்து சமையல் வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை.

077 375 3503

## விற்பனைக்கு

தென்னாங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், ரம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம் கிளை:**
**K.K.S. வீதி, இணுவில்**

## மணமகள் தேவை

1977ம் ஆண்டு பிறந்த ரோகினி நட்சத்திரம் 3ம் பாதம் லண்டனில் பிரஜா உரிமை உடைய, MBA படித்த, நிரந்தரத் தொழில், மற்றும் சொந்த வீடு உடைய இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனிற்கு பெற்றோர் 1982 க்கு பிறகு பிறந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம். (CS 19980) (3/6)

0766440742, 0773116731





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடின் அடுத்தவாரம் ஈரானுக்குப் பயணம்



மொஸ்கோ, ஜுலை 17
ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் முத்தரப்பு பேச்சுக்காக அடுத்த வாரம் ஈரான் செல்லவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா அந்த நாட்டின் பல நகரங்களை கைப் பற்றியுள்ளது.

இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆயுதம், நிதி மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றன.

அதேவேளை ரஷ்யாவுக்கு உக்ரைன் மீதான படையெடுப்பில் பயன்படுத்துவதற்கு ஈரான் ஆயுத உதவி வழங்கவுள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்தநிலையில் ரஷ்யா அதிபர் புடின் அடுத்த வாரம் ஈரான் செல்லவுள்ளார் எனவும் சிரியா விவகாரம் குறித்து ஈரான், துருக்கியுடன் நடைபெறவுள்ள முத்தரப்பு பேச்சில் புடின் பங்கேற்கவுள்ளார் என்றும் கிரெம்ளின் மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஈரான் ஆயுத உதவி வழங்குவதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ள நிலையில் புடினின் ஈரான் பயணம் சர்வதேச அரங்கில் பேசுபொருளாகியுள்ளது. (ச-இ)

# அனைத்து சொத்தும் அறக்கட்டளைக்கே!

## பில்கேட்ஸ் அறிவிப்பு



வொஷிங்டன், ஜுலை 17
உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரும் மைக்ரோசொப்ட் நிறுவநருமான பில்கேட்ஸ் தனது அனைத்து சொத்துக்களையும் அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கத் திட்டமிட்டுள்ளேன் என அறிவித்துள்ளார்.

பில்கேட்ஸ் 2000 ஆம் ஆண்டு 'பில்-மெலிண்டா' கேட்ஸ் என்ற அறக்கட்டளையை ஆரம்பித்தார். இந்த அறக்கட்டளையில் சுகாதாரம், கல்வி போன்ற பல துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாதம் தொடக்கத்தில் 20 பில்லியன் அமெரிக்க டொலரை குறித்த அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கியிருந்தார்.

இந்தநிலையில் தற்போது பில் கேட்ஸ், எதிர்காலத்தில் எனக்கும் எனது குடும்பத்துக்கும் நான் செலவழிப்பதைத் தவிர எனது அனைத்து சொத்துக்களையும் அறக்கட்டளைக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார். பில் கேட்ஸின் இந்த முடிவை பல தரப்பிலும் பாராட்டி குவிந்து வருகின்றது. (ச-இ)

## Vacancy Announcement

Shanthiham is a non-profit, local Non-Governmental Organization (NGO), that collaborates with the communities to improve their well-being, working in the Northern Region of Sri Lanka since 1988. Shanthiham has developed as an organization that provides both Counselling and Training for Mental Health and Psychosocial Support (MHPSS) for the Northern province of Sri Lanka. Shanthiham is dedicated to improving the community well-being of individuals, families and communities.

Shanthiham is looking for well-experienced, energetic, self-motivated and dedicated people to apply for 1. **Finance Manager 2. Admin / HR officer** positions. We are interested to receive applications for the above positions from suitable candidates.

**Finance Manager:** The candidate should be with a University degree in accounting or relevant professional qualifications, sound knowledge of managing Project Accounting, Financial reporting and computer Literacy Accounting package - Quick Book with a minimum of 5 years experience in an NGO/INGO in the Accounting field is needed. The Candidate should have the natural qualities of a team member and be able to handle challenging situations at the Organization and able to travel within the Northern Province to support the field offices.

**Admin/HR officer:** Applicant should have a Diploma or Degree in the respected field recognized by the University Grant Commission and not less than 5 years of experience in the above field. The Candidate should have the natural qualities of a good team player and be able to handle challenging situations at the Organization and able to travel within the Northern Province to support other field offices.

Remuneration/Duration of contract (including the employee benefits) could be negotiated based on professional qualifications and experience.

Eligible candidates are requested to apply with an updated CV to the following E-mail address with the details of the last 2 employers and their direct supervisor details on or before 24th July 2022 to the undermentioned postal / e-mail address. Only shortlisted candidates will be contacted.

"Shanthiham" Association for Health and Counselling,
No. 8, Katpahavinayagar Lane,
Off Kachcheri Nallur Road, Jaffna.
Telephone No.: 021-222-3338
Email address: hr.shanthiham@gmail.com

# சவூதி இளவரசரை சந்தித்தார் பைடன்



சவூதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சவுதி அரேபியாவின் ஜீடா நகரில் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது கச்சா எண்ணெய் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொலையில் சவூதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுக்கு நேரடித் தொடர்பு உள்ளது என அமெரிக்க உளவு அமைப்பு தெரிவித்துள்ள நிலையில் முகமது பின் சல்மான் - ஜோ பைடன் சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (ச-இ)


**வேலைவாய்ப்பு - பெண்**
ஏ.எஸ்.ஆர் நொதேர்ன் கம்பனி
Office Clerk (Computer MS Office)
Email - asrnothernvaluers@gmail.com
070 629 0303/ 077 036 0555

**சிரட்டைக்கரி அடுப்புகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் சிரட்டைக்கரி அடுப்புக்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 8852 450

**உடல் எடை குறைய வேண்டுமா?**
◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?
**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.


**தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?**
தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா**
எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?
**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**
**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**
077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 • 06 • 1949



மறைவு 16 • 07 • 2022

## சரவணமுத்து தங்கராசா (ராசு பத்தர்)

தட்டாத்தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தங்கராசா அவர்கள் நேற்று (16.07.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெகசோதி அவர்களின பாசமிகு கணவரும், Dr.நிரூபன் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), காலஞ்சென்றவர்களான கிரூபன், நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அபிராமி அவர்களின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சடாச்சரம், விஸ்வலிங்கம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹரிஸ், லயமிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
Dr.தங்கராசா நிரூபன்
(யாழ்.போதனா வைத்தியசாலை)
077 492 4865

[illegible] கே.எஸ். வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர்கள். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையை கையாளுவீர்கள். வருவாய் அதிகரிக்கும். விரும்பியவரை சந்தித்து மகிழ்வீர்கள்.

**இடபம்:** தொழிலை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். தடைப்பட்ட செயல்களை மீண்டும் தொடர்வீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும்.

**மிதுனம்:** குடும்பத்தில் இருந்து வந்த நெருக்கடி விலகும். முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த நல்ல தகவல் வீடு தேடி வரும். உங்கள் செல்வாக்கு உயரும். குழப்பங்கள் தீரும்.

**கடகம்:** சந்திராஷ்டமம் என்பதால் செயல்களில் கவனம், அமைதியும் தேவை. மற்றவரை நம்பி செய்யும் செயல் இழுபறியில் முடியும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். எதிர்பாராத சங்கடங்களை சந்திப்பீர்கள்.

**சிம்மம்:** பெரியவர்களின் ஒத்துழைப்புடன் திட்டமிட்ட செயல்களை செய்து முடிப்பீர்கள். தம்பதிக்குள் இருந்து வந்த சங்கடம் தீரும். குடும்பத்தில் அனுசரித்து செல்வீர்கள். அதிகாரி பாராட்டுவார்.

**கன்னி:** பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். உங்கள் தொழிலில் லாபம் ஏற்படும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களின் ஆதரவு உண்டு. பொறுப்புகள் உங்களைத் தேடி வரும்.

**துலாம்:** பூர்வீக சொத்து பிரச்சினை மீண்டும் தோன்றும். நிதானம் அவசியம். முயற்சிகளில் முழுமையாக ஈடுபட்டாலும் முடிவு உங்களுக்கு எதிர்மறையாகும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த எண்ணம் உண்டாகும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பு ஒன்று தள்ளிப் போகும். குடும்பத்தில் சல சலப்பு உண்டாகும். தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நண்பர்களால் அனுகூலம் காண்பீர்கள். வியாபாரத்தில் அனுகூலம் ஏற்படும்.

**தனுசு:** துணிச்சலுடன் செயல்பட்டு எண்ணிய செயலை செய்து முடிப்பீர்கள். பணியாளர்கள் ஒத்துழைப்புடன் தொழிலை விரிவு செய்வீர்கள். நிதி நிலை உயரும். போட்டியாளர்கள் விலகிச் செல்வர்.

**மகரம்:** மறைமுக எதிர்ப்பு தோன்றினாலும் அவற்றைச் சமாளிப்பீர்கள். தன்னம்பிக்கை கூடும் நாள். தம்பதியர் ஒருவருக்கு ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். நன்மை அதிகரிக்கும்.

**கும்பம்:** நேற்றைய வேலைகளை திட்டமிட்டபடி முடிப்பீர்கள். எதிர்பாராத பணம் வந்து சேரும். வியாபாரத்தில் லாபம் காண்பீர்கள். பழைய கடன்களை அடைக்க முயற்சிப்பீர்கள். எதிர்பார்த்த செயலால் லாபம் காண்பீர்கள்.

**மீனம்:** சுறுசுறுப்பாகச் செயற்பட்டு பிறருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். காணாமற் போன ஒரு பொருள் இன்று கிடைக்கும். புதிய நம்பிக்கை உண்டாகும். முயற்சி கைகூடும். உங்கள் திறமை வெளிப்படும்.

நுணாவில் ஐ.ஓ.சி.யில்

## தென்மராட்சி மக்களுக்கு எரிபொருள் விநியோகம்

சாவகச்சேரி, ஜூலை 17

நுணாவிலில் உள்ள லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் நாளை தொடக்கம் தென்மராட்சி பிரதேச கிராம அலுவலர் பிரிவு ரீதியாக எரிபொருள் பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நிலைய உரிமையாளர் வை.சிவராசா அறிவித்துள்ளார்.

முதற்கட்டமாக நாளையும், நாளை மறுதினமும் 13 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு (ஜே/288 தொடக்கம் ஜே/300 வரையான) விநியோகம் இடம்பெறுமெனவும் எரிபொருள் பெற வருபவர்கள் கட்டாயம் தமது எரிபொருள் பங்கீட்டு அட்டையை தவறாது கொண்டு வருமாறும், இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது பிரிவு கிராம அலுவலரிடம் அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.

பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு எரிபொருள் வழங்கி முடிந்ததும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். (ஒ-9)

காரைநகரில்

## எரிபொருள் விநியோக ஒழுங்குமுறை அறிவிப்பு

நவாலி, ஜூலை 17

காரைநகரில் அமைந்துள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காரைநகர் மற்றும் சங்கானை பிரதேசசெயலகத்தைச் சேர்ந்த மக்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு எரிபொருள் பெற்றுக் கொள்வது தொடர்பான நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் அட்டை வைத்திருப்பவர்கள், எரிபொருளுக்கான கோரிக்கையை யாழ். மாவட்டச் செயலகம் அறிமுகப்படுத்திய செயலியைப் பயன்படுத்தியோ கிராம அலுவலரை தொடர்பு கொள்வதன் ஊடாகவோ பதிவு செய்ய முடியும்.

பதிவு செய்தவர்களுக்கு எரிபொருள் இருப்பின் அடிப்படையில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கான திகதி, நேரம் அறிவிக்கப்படும்.

முதற்கட்ட விநியோகத்தில் முதல் நாள் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கும், இரண்டாம் நாள் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-50)

போராட்டக்காரர்களை சுட மறுத்ததால்

## பறிக்கப்பட்டது பிரிகேடியரின் பதவி

### அவர் வேறு காரணங்களுக்காகவே மீளழைப்பு என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஜூலை 17

பிரதமர் அலுவலகத்தை சூழ்ந்து அதனை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள மறுத்த, அந்தப்பகுதியின் பாதுகாப்புக்கு பொறுப்பாகச் செயற்பட்ட கட்டளைத் தளபதி பிரிகேடியர் அனில் சோமவீர பொறுப்புக்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கட்டளைத் தளபதி பொறுப்புக்களில் இருந்து நீக்கப்பட்ட அவர் இராணுவ தலைமையகத்துக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார். பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று சில மணி நேரத்துக்குள்ளேயே இந்த விடயம் பதிவாகியுள்ளது.

இதேவேளை - அனில் சோமவீர பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக வெளியாகிய செய்தி உண்மைக்கு புறம்பானது என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார். குறித்த அதிகாரி, வேறு கடமைகளுக்காக இராணுவ தலைமையகத்துக்கு இணைக்கப்பட்டுள்ளார் என்றும் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 13 ஆம் திகதி, பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பிரதமர் அலுவலகம் முன்பாக போராட்டக்காரர்கள் மிகப்பெரியளவிலான போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது அவர்கள் பிரதமர் அலுவலகத்தை தமது பொறுப்பிலும் கொண்டு வந்தனர்.

இந்தப் போராட்டத்தின் இடையே, பாதுகாப்புத் தரப்புக்கு போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டது.

எனினும் ஸ்தலத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த பிரிகேடியர் சோமவீர, பொது மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்திருந்தார். இவ்வாறான நிலையிலேயே அவர் உள்ளிட்ட அங்கு கடமைகளில் பொறுப்பாக இருந்த உயர் அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விசாரணைகளை முன்னெடுத்து, அவர்கள் கடமைகளில் இருந்து நீக்கப்பட, துப்பாக்கிச் சூடு முன்னெடுக்காமை குறித்த விடயம் காரணமா என வெளிப்படுத்தி, விடயத்தில் தலையீடு செய்யுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் முறைப்பாடளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## பழம்பெரும் திரைக்கலைஞர் பிரதாப் போத்தன் காலமானார்

சென்னை, ஜூலை 17

தமிழ் சினிமாவின் முன்னணி பழம்பெரும் நடிகரும் இயக்குநரும் எழுத்தாளருமான பிரதாப் போத்தன் 70 ஆவது வயதில் உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் காலமானார்.

'பன்னீர் புஷ்பங்கள்', 'அழியாத கோலங்கள்', 'வறுமையின் நிறம் சிவப்பு', 'நெஞ்சத்தை கிள்ளாதே', 'வாழ்வே மாயம்' உட்பட 100க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து அனைவரையும் கவர்ந்தவர்.

'வெற்றிவிழா', 'மை டியர் மார்த்தாண்டன்', 'சீவலப்பேரி பாண்டி' உள்ளிட்ட பல படங்களையும் பிரதாப் போத்தன் இயக்கியுள்ளார். அதேவேளை மலையாளம், ஹிந்தி எனப் பல்வேறு மொழிப் படங்களில் பிரதான கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். இவரது 'என் இனிய பொன் நிலாவே' பாடல் இன்றும் பல ரசிகர்களின் விருப்பப்பட்டியலில் இடம் பெறும் ஒரு முக்கியமான பாடலாகும். இவரின் மறைவுக்கு திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் எனப் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பதவி வெற்றிடம்

## நாடாளுமன்றில் நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு


கொழும்பு, ஜூலை 17

கோத்தாபய ராஜபக்ச பதவி விலகியுள்ளமையால் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ளதாக நாடாளுமன்றத்தில் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடியது. இதன்போது நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க முக்கியமான அறிவிப்புக்களை விடுத்தார். கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகல் கடிதத்தை வாசித்தார். தொடர்ந்து ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ளதால் நாடாளுமன்றத்தின் எந்தவொரு உறுப்பினரும் வேட்புமனுத் தாக்கல் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டார்.

ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் வேட்புமனு தாக்கல் செய்யுமிடத்து, 20 ஆம் திகதி வாக்கெடுப்பு இடம்பெறும். மாறாக ஒரேயொரு உறுப்பினர் மாத்திரம் வேட்புமனுத் தாக்கல் செய்யும் பட்சத்தில் 19 ஆம் திகதி சபை அமர்விலேயே குறித்த உறுப்பினரின் பெயர் வெற்றிடமாகியுள்ள ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படுவதாக என்னால் உறுதிப்படுத்தப்பட்டு அறிவிக்கப்படும், என்று தெரிவித்தார்.

இதேவேளை - நாடாளுமன்றத்தைச் சூழ இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு நிமித்தம் நாடாளுமன்றத்துக்குச்



செல்லும் இரு பிரதான வீதிகள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### தேசிய...

சிலமணித்தியாலங்களில் முடங்கிவிட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் இந்த விடயத்தை பதிவிட்டுள்ளார்.

'கோட்டா முறையின் கீழ் வாராந்தம் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்பதிவு செய்துக்கொள்வதற்கான இணையத்தளம் அறிமுகம் செய்யப்பட்டு சில மணித்தியாலங்கள் ஆகியும், பலமுறை முயற்சித்தும் உரிய இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்யமுடியவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

(அ-ஒ-இ)

### யாழ்ப்பாணம்...

நேற்றுக்காலை நடந்துள்ளது.

நேற்றுக்காலை ஆலயத்துக்கு வந்த ஒருவர் தொழிலில் முதலிடவிருந்த 10 லட்சம் ரூபாவை, பூசையில் வைத்து எடுத்துத் தருமாறு கோரியுள்ளார். பூசகரும் பணத்தை பூசையில் வைத்துவிட்டு எடுத்துக்கொடுத்தபோது, அங்கு திடீரென வந்த இருவர் பணத்தைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(அ-எ-125)

### 'நான் நடுநிலமை...

கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் நிலைப்பாடு மாறலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வு நிறைவடைந்த பின்னர் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் எந்த ஜனாதிபதி வேட்பாளரையும் ஆதரிக்காது நடுநிலைவகிப்பதென்றநிலைப்பாட்டிலே இதுவரை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி கட்சியை சேர்ந்த நானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளோம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது.

ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் எந்த வேட்பாளர்களும் தமக்கு ஆதரவளிக்குமாறு எம்மிடம் இதுவரையில் கோரவில்லை. அப்படி அவர்கள் கோரும்பட்சத்தில், எமக்கான உறுதி மொழிகளை வழங்கும் பட்சத்தில் சில வேளைகளில் எமது நிலைப்பாடு மாறலாம். அவ்வாறு இல்லாமல் வாக்களிப்பதில் எந்த பிரயோசனமும் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க மூத்த அரசியல் தலைவர், மிகவும் அனுபவம் உள்ளவர், அதில் மாற்றுக்கருத்துக்கிடையாது. அவருடன் இணைந்து செயற்படுவதில் எமக்கு பிரச்சினை கிடையாது. அவரது அமைச்சரவையில் இணைந்துகொள்ளும் எந்த எண்ணமும் இல்லை - என்றார்.

(அ-ஒ-இ)

### எரிபொருள்...

கப்படும் என யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் விநியோக ஒழுங்கு முறை தொடர்பில் தேசிய ரீதியிலான வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட முன்னரே எரிபொருள் அட்டை விநியோகத்தை நாம் ஆரம்பித்துவிட்டோம். இப்போது தேசிய ரீதியான வேலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனை நாம் புறக்கணிக்கமுடியாது. ஆனாலும், யாழ். மாவட்டத்தில் எரிபொருள் அட்டை தொடர்ந்தும் வழங்கப்பட்டு, அதன் ஊடாக விநியோக ஒழுங்கு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் - என்றார்.

(அ-ஒ-5)

### தப்பியோடிய...

போது, அந்த டிப்பர் வீதியில் நின்றிருந்தவர்களை மோதியதில் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதி வழியாக தப்பித்துச் சென்ற டிப்பர் வாகனம், நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாலுசந்தி பிள்ளையார் ஆலயத் திருவிழாவில் கூடியிருந்தவர்கள் மீது மோதித் தள்ளியதால் அந்தப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

ஆலயத்தின் சப்பறத் திருவிழா நேற்று முன்தினம் என்பதால், அதனையொட்டி இசைக்கச்சேரி இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இசைக்கச்சேரியை வீதியோரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தவர்களையே, பொலிஸாருக்கு பயந்து ஓடி வந்த டிப்பர் மோதித் தள்ளிவிட்டு, தப்பியோடியுள்ளதாகப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

மணல் கடத்தல் மற்றும் விபத்து தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ஒ-26)

### துரித நிவாரணம்...

உணவுப் பொருள்களை வழங்கும் அவசர நிவாரண வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

நேற்றுக் காலை அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானத்தை அவர் எடுத்துள்ளார்.

அடுத்த மாதம் முன்வைக்கப்படும் நிவாரண பட்ஜெட்டில் இதற்கு அதிகளவு நிதி ஒதுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கலந்துரையாடலில், உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும், செயல்முறையை வலுப்படுத்தவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் மற்றும் உரங்களை முறையாகவும் உடனடியாகவும் வழங்குவதற்கு இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. (அ-ஒ-இ)

### படைகளுக்கு...

அதிகாரங்களை வழங்குவதற்கு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ-ஒ-இ)

### எரிபொருளுக்கு...

'பாஸை பெற்றுக் கொள்வதற்கு இணையம் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும் என்றும், எதிர்காலத்தில் இந்தத் திட்டத்துக்கு அமைவாகவே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்பதால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகளில் நிற்கவேண்டாம் என்றும் அவ்வாறு நிற்போர் இராணுவத்தின் உதவியுடன் வெளியேற்றப்படுவர்' எனவும் அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாகனங்களை தேசிய அடையாள அட்டை எண்களின்படி பதிவு செய்து, வாரந்தோறும் கோட்டா அடிப்படையில் எரிபொருளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு தேசிய அடையாள அட்டை இலக்கத்துக்கு ஒரு வாகனத்தைப் பதிவு செய்ய முடியும். வாகனத்தின் செஸி இலக்கம் உள்ளிட்ட விடயங்களை இதன்போது தரவேற்றவேண்டும். இதற்கு அமைவாக 'க்யூஆர் கோட்' வழங்கப்படும். வாகன இலக்கத்தகட்டின் கடைசி இலக்கத்துக்கு அமைவாக வாரத்தில் 2 நாள்கள் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்றார்.

பதிவு செய்வதற்கு http://fuelpass.gov.lk/ இந்த முகவரியூடாக இணையத்தளத்துக்குச் செல்ல முடியும்.

(அ-ஒ-இ)

### பலமுனை போட்டி...

தேசிய மக்கள் சக்தியின் விசேட ஊடக சந்திப்பு நேற்று நண்பகல் நடைபெற்றது. இதன்போதே விஜித ஹேரத் மேற்படி தகவலை வெளியிட்டார்.

'சர்வகட்சி அரசொன்றை ஸ்தாபிப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டோம். எனினும், ஜனாதிபதி பதவிக்காக பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இதன் மூலம் சர்வகட்சி அரசமையுமா என்ற சந்தேகம் எழுகின்றது. எனினும், அந்த முயற்சியை நாம் கைவிடவில்லை. எம்மால் முடிந்த அளவில் தலையீடுகளை செய்வோம்.

அந்த முயற்சி தோல்வி அடையும் பட்சத்தில், ஜனாதிபதி பதவிக்கு எமது கட்சி தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் போட்டியிடுவார். நாட்டு மக்களால் கோரப்படும் தலைமைத்துவம் அவர்தான். எம்மால் நாட்டை மீட்க முடியும். அதற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வெற்றி கிடைக்கும் பட்சத்தில் சர்வகட்சி அரசு அமைக்கப்படும்.' என்றும் விஜித ஹேரத் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும ஆகியோரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளனர். இதற்கான வேட்புமனு எதிர்வரும் 19 ஆம் திகதி தாக்கல் செய்யப்படும்.

சரத் பொன்சேகா, அநுர பிரியதர்சன யாப்பா ஆகியோரும் ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் களமிறங்க விருப்பத்தை வெளியிட்டுள்ளனர். (அ-ஒ-இ)

### கடைசி...

சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

'புதிய ஜனாதிபதி தெரிவு தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு மற்றும் மத்திய செயற்குழு என்பன கூடி தீர்மானம் மேற்கொள்ளப்படும்' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

(அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும் வெப்பம் 84 பேர் சாவு

ஸ்பெயினில் வீசிவரும் வெப்பஅலை காரணமாக 84 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஸ்பெயினில் முன்னெப்போதுமில்லாத அளவில் அதிக வெப்பநிலை அதிகரித்துள் ளது. நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் 45 டிகிரி அளவு வெப்பநிலை பதிவாகியுள்ளது.

(ச-இ)


## பணிப்பெண் தேவை

கிளிநொச்சியில் உள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

**074 288 5023**

## மணமகன் தேவை

அரச தொழில் புரியும் BA பட்டதாரி 1982 ரேவதி கிரக பாவம் 7 விவாகரத்து மணமகளுக்கு மணமகன் தேவை.

(CS 45423)(3/6)

**077 545 2892**

## ஆலோசகர் தேவை

விவசாய பயிர்ச்செய்கை தொடர்பான ஆலோசகர் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**077 025 6640**

## மணமகள் தேவை

கனடாவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஆணுக்கு 1990-1994இல் பிறந்த பெண். இந்துகௌரவ குடும்பம், படித்த பட்டம் பெற்ற, தமிழர் கலாச்சாரம் உடைய ஆங்கிலம் பேசத் தெரிந்த பெண் ஆகக்கூடிய உயரம் 5.5``

(CS 19969) (3/6)

**தொடர்பு: 077 122 4255**

## காணி விற்பனைக்கு

யாழ் நாவற்குழியில் 90 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் (500000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்

பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
**076 490 5403, 076 491 2493,076 490 6029**


## முக்கிய அறிவித்தல்

ஒட்டகப்புலம், வயாவிளான் பகுதியில் அண்மையில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளை காணியின் உரிமையாளர்களுக்கு தெரியாமல் மோசடியாக ஆவணங்களைத் தயாரித்து ஒரு கும்பல் தமது காணிகள் போல விற்று வருகின்றனர். இது தொடர்பாக அண்மையில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் தமது முகநூலில் ஒரு விழிப்புணர்வுச் செய்தியை வெளியிட்டிருந்தது. தயவு செய்து ஒட்டகப்புலம் பகுதியில் காணிகளை வாங்க விரும்புபவர்கள் விழிப்பாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
காணி விவகாரக் குழு
ஒட்டகப்புலம், வயாவிளான்.
மின்னஞ்சல்: lacoddahappulam@gmail.com

## அறிவித்தல்

1978.07.15 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் R. பாலசுப்பிரமணியம் அத்தாட்சிப்படுத்திய முறையே 473, 474, 507 ஆம் இலக்கங்களை உடைய உறுதிக்கு உட்பட்ட ஆலாத்திவெளி தென்னம் தோட்டம் என்ற நாமமுடைய நாவற்குழி பாலத்திற்கு அருகாமையில் அமைந்த 11 ஏக்கர் 3 றூட் விஸ்தீரணம் கொண்ட ஆதனம் அதன் மூல சொந்தக்காரரான கதிரித்தம்பி இராஜரட்ணம் பெண் கமலாவிடமிருந்து 10.09.2016 ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிஸ் அ. இராஜராட்ணம் அத்தாட்சிப்படுத்திய முறையே 10129, 10130, 10131 ஆம் இலக்கங்கள் கொண்ட அறுதிச்சாதனங்களால் சீவரட்ணம் அருணனும் பெண் சிவகுமாரியும் கொள்முதல் செய்து சொந்தக்காரரும் ஆட்சியாளருமாக இருந்து வருகின்றனர்.

மோசடியை தவிர்ப்பதற்கும் பொதுமக்கள் நன்மை கருதியும் குறித்த ஆதனத்தை அல்லது அதன் பகுதியினை குறித்த எம்மைத் தவிர்ந்த வேறு எவரிடமும் கொள்வனவு எவராவது செய்தால் அல்லது உரித்து மாற்றம் செய்யின் அதற்கு நாங்கள் பொறுப்பாகமாட்டோம் என்பதுடன் தோதான நீதிமன்றில் மோசடி விற்பனை, கொள்முதல் செய்பவர்கள் மீது வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**சி.காந்தீபன்**
**கருணாலயம் சிறுவர் இல்லம்,**
**திருநெல்வேலி.**
**15.07.2022**

# பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வைத்திலிங்கம் இலட்சுமணன் (பனங்கட்டி)



தோற்றம் 28.07.1939 — மறைவு 17.07.2011

ஆண்டவன் தன்னோடு அழைத்து
ஆண்டுகள் பதிரொன்று ஆனதே ஐயா!
நீங்காத நினைவுகள் நெஞ்சில்
நிலைத்திருக்கும் வரை
நேச நினைவும் பாசப்பிணைப்பும்
என்றென்றும் அகலாது ஐயா!
எங்கள் வாழ்வை உயர்த்தி
நிறைவான வாழ்வு வாழ்ந்தீரே ஐயா

**உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

தந்தை காலடி எமது கோயில்

(CS 19981) (3/6)

குடும்பத்தினர்
இலட்சுமணன் ஹாட்வெயர்
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


வந்தார் பின்பு காந்தி
வந்தார் இந்த மானிடர்
திருந்திட பிறந்தார்

இவர் திருந்தவில்லை
மனம் வருந்தவில்லை
அந்த மேலோர்
சொன்னதை மறந்தார்
- கவிஞர் வாலி

Registered as a Newspaper

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆடி 01 ஞாயிற்றுக்கிழமை (17.07.2022) சிகரம் : 108



# கொழும்பில் நடந்தது அரசியல் புரட்சியா?

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறிய தமிழ்த்தேசியக் கட்சிகள்

அ.நிக்ஸன்

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் பௌத்த சிங்களவர் அல்லாத எவரும் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ வரமுடியாது என்பது வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று. இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. ஆனால் இந்த வாக்களிப்பை மாற்றியமைக்கும் யோசனைகளைப் பலர் முன்வைத்தாலும், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலின் போது ஈழத்தமிழ் மக்கள் சார்பில் ஒருவரை பொதுவேட்பாளராக நிறுத்தி வடக்கு, கிழக்கு மக்கள் விரும்பினால் மலையகத் தமிழ் மக்களையும் அவருக்கு வாக்களிக்கச் செய்யலாம்.

அப்படி வாக்களிப்பதன் மூலம் தமிழ்ப் பொது வேட்பாளர் வெற்றிபெறுவார் என்றில்லை. மாறாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அனைவரினதும் வாக்குகளை பிரித்துக் காண்பிப்பதன்மூலம், சிங்கள பௌத்த தேசியத்தில் இருந்து தமிழ்த்தேசியம் பிரிந்து நிற்கின்றது என்பதை வெளிப்படுத்த முடியும். ஆனால் கட்சி வேறுபாடுகள் இன்றி அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து வாக்களிக்கவேண்டும்.

ஆனால் இதுவரையும் அவ்வாறான செயற்பாடுகளில் எவருமே ஈடுபடவில்லை. இன்று கோத்தாபய ராஜபக்ச பதவிவிலகி, ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். இலங்கைத்தீவில் எவர் பதவியேற்றாலும், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்களில் எதையுமே செய்யமாட்டார்கள் என்பது எல்லோருக்கும் பொதுவாகத் தெரிந்த ஒன்று.

கோத்தாபயவுக்கு எதிரான போராட்டங்கள் கடந்த மூன்று மாதங்களாக காலிமுகத்திடலில் நடைபெற்றபோது, அந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் பெருமளவில் பங்குகொள்ளவில்லை. ஏனெனில் அதனைச் சிங்கள மக்களின் பிரச்சினையாகவே அனைவரும் கருதினர். அது உண்மையும்கூட. ஆனாலும் மலையகத் தமிழ் இளையோரும், முஸ்லிம் இளைஞர்கள் பலரும் காலிமுகத்திடல் கிளர்ச்சியில் கலந்துகொண்டனர்.

பொருளாதார நெருக்கடியால் வடக்கு, கிழக்குத் தமிழர்களும் பாதிக்கப்படுகின்றனர் என்பது உண்மைதான். ஆனால் சென்ற ஜுலை 9 ஆம் திகதி சனிக்கிழமைக்குப் பின்னரான சூழலில் இலங்கை அரசியல் யாப்பு செயலிழந்துள்ளதா?இல்லையா? என்ற ஓர் இருண்மையான நிலைமை காணப்பட்டபோது, வடக்கு, கிழக்கில் ஓர் அரசியல் புரட்சியை தமிழ்த்தேசியக் கட்சிகள் மேற்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் தமிழ்ச் சிவில் சமூக அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்களுக்குக்கூட அவ்வாறானதொரு சிந்தனை எழவில்லை. காலிமுகத்திடல் கிளர்ச்சி சிங்கள மக்களுக்குரியதாக இருந்தாலும், ஜுலை 9 ஆம் திகதிக்குப் பின்னரான சூழலில் ஈழத்தமிழர்கள் ஒன்றுகூடி எழுபது ஆண்டு கால அரசியல் போராட்டத்துக்கான நியாயப்பாட்டைச் சர்வதேச நாடுகளுக்கு விரிவாக்கம் செய்திருக்க வேண்டும்.

கோத்தாபய ராஜபக்சவைப் பதவி விலகுமாறு கோரி, தென்னிலங்கையில் நடத்தப்பட்ட போராட்டங்களை ஒரு கிளர்ச்சியின் வெளிப்பாடுகளாக மட்டுமே ஈழத்தமிழர்கள் அணுகியிருந்தால் நிச்சயம் அதனை ஜுலை 9 ஆம் திகதிக்குப் பின்னரான அடுத்துவந்த நாள்களில் முழு இலங்கைக்குமான அரசியல் புரட்சியாக மாற்றியிருக்கலாம்.

ஆகவே காலிமுகத்திடல் கிளர்ச்சியானது, ஓர் அரசியல் புரட்சி அல்ல என்ற புரிதல் இங்கு அவசியமாகிறது. புரட்சி என்றால் ஏதேனும் ஒரு கொள்கையோடு நடத்தப்பட்டிருக்க வேண்டும். இங்கே கிளர்ச்சியாளர்கள் பொருளாதார நெருக்கடி, எரிபொருள்கள் இல்லாமை போன்ற காரணங்களை முன்னிறுத்தியே, கோத்தாபயவுக்கு எதிரான கிளர்ச்சிகளை நடத்தியுள்ளனர். இந்தக் கிளர்ச்சி கடந்த சனிக்கிழமை ஜுலை 9 ஆம் திகதியன்று மேலும் ஒரு தற்காலிக வெற்றியைப் பெற்றுக்கொண்டதை மறுப்பதற்கில்லை. ஆனால், இந்தக் கிளர்ச்சியை இயக்கியவர்களால் அதனை ஓர் அரசியல் புரட்சியாக மாற்ற முடியாமல் போனதை ஈழத் தமிழர்கள் இரண்டு காரணங்கள் ஊடாக நோக்கியிருக்க வேண்டும். ஒன்று, இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பை (Unitary State Constitution) மாற்ற விரும்பாமை. அதாவது தமிழ், முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப் பங்கீட்டு (Power Sharing) முறைகளை உருவாக்க ஒத்துக்கொள்ளாமை.

இரண்டாவது , அரசியல் யாப்பில் பௌத்த சமயத்துக்கான முன்னுரிமையை அல்லது பௌத்த ஆதிக்கத்தை இழக்க விரும்பாமை.

காலிமுகத்திடல் கிளர்ச்சியில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு இந்த இரு விளக்கங்களும் அரசியல் ரீதியாகப் புரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் கிளர்ச்சிக்குப் பின்னால் நின்று இயக்கிய சில அமைப்புகள், மேற்படி இரு காரணங்களின் அடிப்படையிலேயே அந்தக் கிளர்ச்சியை அரசியல் புரட்சியாக மாற்றாமல் வெறுமனே கிளர்ச்சியாக மாத்திரம் மடைமாற்றியிருந்தார்கள் என்பது கண்கூடு.

அதாவது ராஜபக்ச குடும்பத்தைத் துரத்திவிட்டால் எல்லாமே சரியாகிவிடும் என்ற கருத்தையே சிங்கள இளைஞர்களுக்குக் கிளர்ச்சியில் பின்னே நின்று இயக்கியவர்கள் போதித்திருக்கிறார்கள். இதனால்தான் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் ஆரம்பம் முதல் ஜுலை 9 ஆம் திகதி வரையான கிளர்ச்சியில் பங்குகொள்ளவில்லை.

ஆனால் வடக்கு,கிழக்குத் தமிழ்த்தேசியக் கட்சிகள் ஜுலை 9 ஆம் திகதிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் அல்லது மட்டக்களப்பு, திருகோணமலைப் பிரதேசங்களில் உள்ள ஏதாவது ஓர் இடத்தில் ஒன்றுகூடி அரசியல் பிரகடனம் ஒன்றைச் செய்திருக்க வேண்டும்.

அதாவது ஜுலை 9 ஆம் திகதியோடு இலங்கை அரசியல் யாப்பின் நியாயாதிக்கம் தளர ஆரம்பித்திருந்தது.

அதன்போது தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்துத் தமிழ் மக்களையும் ஒன்றுகூட்டி , வடக்கு- கிழக்கு இணைந்த நிரந்தர அரசியல் தீர்வுக்கும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்துக்கும் ஏற்ப ஒரு பிரகடனத்தை வெளியிட்டிருக்க வேண்டும்.

குறிப்பிட்டுச் சொல்வதானால் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை நிறுவதற்கான அரசியல் புரட்சியை அகிம்சை வழியில் கனகச்சிதமாகச் கையாண்டிருக்க வேண்டிய அரிதிலும் அரிதான தருணமொன்றை எமது தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் கோட்டைவிட்டிருக்கின்றன. இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் நின்று கொண்டும். இலங்கை நாடாளுமன்றத்தின் மூலமும் தமிழ்த்தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதன் அடிப்படையே தமிழ்த்தேசியக் கோட்பாடு.

ஆனால் அந்த அடிப்படையை நிறுவுவதற்கான நல்ல சந்தர்ப்பத்தைத் தமிழ்த்தேசியக் கட்சிகளும் வடக்கு, கிழக்குத் தமிழ்ச் சிவில் சமூக அமைப்புகளும் பயன்படுத்தத் தவறியுள்ளன. காலிமுகத்திடல் கிளர்ச்சியாளர்கள், சென்ற ஜுலை 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை, பிரதமர் மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பவற்றைக் கைப்பற்றியதும் முழு இலங்கைத்தீவுக்கான அரசியல் புரட்சியாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தன.

அவ்வாறு அரசியல் புரட்சியாக மாறிவிடக்கூடாது என்ற நோக்கிலேதான் பௌத்த குருமார் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ஓமல்பே சோபித தேரர், பௌத்ததேசியம் மற்றும் பௌத்த அதிகாரத்தை எவராலும் அழிக்க முடியாது என்றும், அது நிலையானது எனவும் பகிரங்கமாகக் கூறியிருந்தார். பௌத்த தேசிய சக்தியை ராஜபக்ச குடும்பம் இழந்ததினாலேயே மக்கள் கிளர்ச்சி செய்து துரத்தியதாகவும் அவர் மார்தட்டியிருந்தார். ஆகவே காலிமுகத்திடல் போராட்டம் பொருளாதார நெருக்கடிக்கான கிளர்ச்சி மாத்திரமே என்பது இங்கு நிரூபணமாகின்றது.

ஆனால் ஜுலை 9ஆம் திகதிக்குப் பின்னர், நாட்டில் ஏற்பட்டிருந்த இருண்மை நிலையை அரசியல் புரட்சியாக மாற்றி,

1. முப்பது ஆண்டுகால போரின் போதும், 2009 இற்குப் பின்னரான பதின்மன்று ஆண்டுகளிலும் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவமயமாக்கல்
2. அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கான வளங்கள் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டமை

என்பன போன்ற காரணங்களே, இன்றைய பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணம் - என்பதை ஒன்றுகூடிச் சர்வதேசத்துக்குப் பகிரங்கப்படுத்திருக்க வேண்டும்.

இலங்கைத்தீவில் வடக்கு- கிழக்கு இணைந்த நிரந்தர அரசியல் தீர்வுடன் கூடிய அரசியல் யாப்பு மாற்றத்துக்கான பிரகடனத்தை ஜனநாயக முறையில் தமிழ்த்தேசியக் கட்சிகள் மேற்கொண்டிருந்தால், இன்று இலங்கைத்தீவில் தலைகீழ் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். சிங்கள ஆட்சியாளர்களின் மனச்சாட்சியும் பகிரங்கப்பட்டிருக்கும். அதாவது உண்மை என்னவென்பது உலகத்துக்குப் புரிந்திருக்கும். ஆகவே ஓர் அரிதான வாய்ப்பை அரசியல் புரட்சியாக மாற்றத் தவறிய தமிழ்த்தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் முன்னிலையில் தற்போது அம்பலப்பட்டிருக்கிறார்கள். கள்ள மௌனத்தில் தமிழ்த்தேசியக் கட்சிகள் இருந்திருக்கிறார்கள் என்பதை உலகமும் அறிந்திருக்கும்.

தேர்தலில் போட்டியிடுவதற்காகவே தமிழ்த்தேசியத்தைப் பேசுகிறார்கள் என்பதையும் ஜுலை9 ஆம் திகதிக்குப் பின்னரான அரசியல் சூழல், தமிழ் மக்கள் முன்னிலையில் தமிழ்த்தேசியக் கட்சிகளைப் புடம்போட்டுக் காண்பித்துள்ளது.

2009 இன் பின்னர் வடக்கு- கிழக்குத் தமிழர்களுக்குத் தலைமை இல்லை என்பதையே, 2022 ஜுலை 9 ஆம் திகதிக்குப் பின்னரான சூழல் கோடிகாட்டியுமிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'நரி'யைப் பரியாக்குவது?



○ நிலாந்தன்

கோத்தா ஒரு தொழில் சார் அரசியல்வாதியல்ல. வெல்ல முடியாத ஒரு யுத்தத்தை வென்ற காரணத்தாலும் மஹிந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தாலுமே அவர் ஜனாதிபதியாக வர முடிந்தது. யுத்தத்தில் வென்றமைதான் தன்னுடைய பிரதான தகைமை என்று அவர் முழுமையாக நம்பினார். ஒரு படைத்துறை ஆளுமையாகவே தன்னைக் காட்டிக் கொண்டார். வெள்ளை மேற்சட்டையில் படைத்துறை 'மெடல்களை' அணிந்தபடி காட்சியளித்த ஒரு ஜனாதிபதி அவர். தன்னை எப்பொழுதும் வித்தியாசமானவராகவே கருதினார். ஏனைய சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் தன்னை வேறுபடுத்த விரும்பினார். அவர் வேட்டியும் 'நஷனலும்' அணிவதில்லை. தலைக்கு டை பூசுவதில்லை. அதுமட்டுமல்ல தனது சகோதரர்களிடமிருந்தும் தன்னை வேறுபடுத்திக் காட்டினார். தமது குடும்பத்தின் குலச்சின்னமாகக் கருதப்பட்ட குரக்கன் நிறச்சால்வையை அவர் அணிவதில்லை. அவருடைய பதவியேற்பு வைபவத்தில் அவருடைய மூத்த சகோதரர் சமல் அந்தச் சால்வையை ஒரு பேழைக்குள் வைத்து அவருக்குப் பரிசளித்தார். ஆனால் கோத்தா அந்தச் சால்வையை அணியவில்லை.

இவ்வாறாகத் தன்னை ஒரு வித்தியாசமான ஜனாதிபதியாக காட்டிக்கொண்ட ஒருவர் வித்தியாசமான முறையிலேயே தன் பதவியை விட்டு ஓட வேண்டி வந்தது. உலகிலேயே மின்னஞ்சலில் தனது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பிய நிறைவேற்று அதிகாரமுடைய ஒரேயொரு ஜனாதிபதி கோத்தாதான். எந்த நாட்டைச் சிங்கள மக்களுக்கு வென்று கொடுத்ததாக பிரகடனப்படுத்தினாரோ அதேநாட்டில் அவருக்குப் பாதுகாப்பு இல்லை. தன் சொந்த மக்களுக்கு பயந்து ஓடி ஒளிய வேண்டிய நிலை. முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புறக்கணித்து, ஜனாஸாக்களை எரிக்குமாறு உத்தரவிட்டவர் ஒரு முஸ்லிம் நாட்டில் முதலில் தஞ்சம் அடைந்தார். இப்பொழுதும் வேறொரு முஸ்லிம் நாட்டில்தான் தஞ்சம் அடைந்துள்ளார். புத்தபகவான் கூறுவது போல மாற்றம் ஒன்றுதான் மாறாதது.

கடந்த மூன்று மாதங்களில் நிகழ்ந்த மாற்றங்களைத் தொகுத்துப்பார்த்தால், யாப்புச் செயலிழந்துவிட்டது, நாடாளுமன்றம் செயலிழந்துவிட்டது, சட்டம் ஒழுங்கு செயலிழந்துவிட்டது. யாப்பின்படி மஹிந்தவையும் கோத்தாவையும் நீக்கமுடியாது. ஆனால் மக்கள் எழுச்சிகளின் மூலம் அவர்கள் நீக்கப்பட்டுவிட்டார்கள். நாடாளுமன்றம் அதன் மக்கள் ஆணையை இழந்துவிட்டது. எந்தக் கட்சிக்கு 69 லட்சம் பேர் ஆணையை வழங்கினார்களோ, அந்தக் கட்சியின் பிரதானிகளை மக்கள் ஓடஓடத் துரத்துகிறார்கள். சட்டம் ஒழுங்கும் செயலிழந்துவிட்டது. ஊரடங்குச்சட்டம், அவசர காலச்சட்டம் என்பவை இருக்கத்தக்கதாகவே ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச கட்டடங்களை கைப்பற்றுகிறார்கள். நாட்டின் ஜனாதிபதிதான் முப்படைகளின் தளபதி. தன் படைகளை முழுமையாக அவர் நம்பியிருந்திருந்தால் நாட்டில் எங்காவது ஒரு படைத்தளத்தில் மறைவாக இருந்திருக்கலாம். அவர் நாட்டை விட்டு ஓடத் தீர்மானித்தமை என்பதில் அவர் படையினரையும் நம்பத் தயாரில்லை என்ற செய்தி உண்டு. இதுதான் இலங்கை தீவின் இப்போதுள்ள நிலைமை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இல்லை. தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படாத நிறைவேற்று அதிகாரம் உடைய ஒரு பதில் ஜனாதிபதி அவர். எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டக்காரர்களும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ராஜபக்சகளைப் பாதுகாப்பவர் என்பதனால் அவருக்கு தாமரைமொட்டுக் கட்சியின் ஆதரவு கிடைக்கும். தவிர, மேற்கு நாடுகளும் ஐ.எம்.எப் அமைப்பும் அவரை ஆர்வத்தோடு பார்க்கின்றன. ஆர்ப்பாட்டக்காரர்களின் பின்னணியில் நிற்பதாக கருதப்படும் இடதுசாரி மரபில் வந்த அமைப்புகளை மேற்கு நாடுகள் எச்சரிக்கை உணர்வோடுதான் பார்க்கின்றன. கோத்தாவை அகற்றுவதற்கான கருவிகளாக மேற்படி இடதுசாரி மரபில் வந்த அமைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் மேற்கு நாடுகள், அந்த வெற்றியின் அடுத்த கட்டமாக மேற்படி கட்சிகளும் அமைப்புகளும் அரசியலில் முதன்மை ஸ்தானத்துக்கு வருவதை ரசிக்கவில்லை. இந்தியாவும் அதை ரசிக்காது. எனவே மேற்குநாடுகளும் ரணிலைப் பாதுகாக்க விரும்பும். ராஜபக்சக்களும் ரணிலைப் பாதுகாக்க விரும்புகிறார்கள். இனிவரும் நாள்களில் ரணிலைப் பலப்படுத்துவதற்கான பேரங்களும் சூழ்ச்சிகளும் அதிகமிருக்கும். வெளியிலிருந்தும் அவருக்கு உதவிகள் பாய்ச்சப்படும். ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களும் எதிர்க்கட்சிகளும் ரணிலை அகற்ற விரும்புகின்றனர். ஆயின் அடுத்த கட்டம் என்ன?

காலாவதியான நாடாளுமன்றத்தை வைத்துக் கொண்டு ஒன்றையும் செய்ய முடியாது. ஒரு புதிய மக்களாணையை பெறுவதற்கான ஒரு தேர்தலுக்குப் போக வேண்டும். ஆனால் அது உடனடிக்கு முடியுமா? ஒரு தேர்தல் நடக்கும் வரையிலும் இடைக்கால ஏற்பாடு ஒன்று தேவை. எதிர்க்கட்சிகள் அப்படிப்பட்ட ஓர் இடைக்கால ஏற்பாட்டுக்குத் தயாரா? நாடாளுமன்றத்தில் இப்பொழுதும் தாமரைமொட்டுக் கட்சி பலமாகக் காணப்படுகிறது. எனவே ஒரு புதிய இடைக்கால ஏற்பாட்டுக்குப் போவது என்றால் தாமரைமொட்டுக் கட்சியின் ஆதரவு தேவைப்படும். அதனால் தாமரைமொட்டுக் கட்சியின்மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டிய தேவை உண்டு.

ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் மற்றும் நாடாளுமன்றம் போன்றவற்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டார்கள். எனினும் பௌத்த மகாசங்கம், சட்டத்தரணிகளின் அமைப்பு போன்றன அதற்கு ஆதரவாகக் காணப்படவில்லை. நாடாளுமன்றத்தை செயலிழக்க செய்வது என்பது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை செயலிழக்க செய்வதுதான். பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை நம்பவில்லை என்றால் ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்கு மாற்றீடாக வைத்திருக்கும் கட்டமைப்பு என்ன?

குமார் குணரட்ணம் கூறுகிறார். 'மக்கள் அதிகார மையங்களை ஏற்படுத்துவோம்' என்று. அந்த மக்கள் அதிகார மையங்கள், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை பிரதியீடு செய்யுமா? நாட்டில் இப்போதுள்ள பிரதிநிதித்துவ ஜனநாயக கட்டமைப்பு பொருத்தமானது அல்லவென்றால் பொருத்தமான ஒரு முன்மாதிரியான கட்டமைப்பை ஆர்ப்பாட்டக்காரர்கள் கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் அமைப்புகள் மத்தியில் அது தொடர்பான விழிப்பு ஏதும் இருக்கிறதா ? குமார் குணரட்ணம் கூறுகிறார் 'அது நான்காவது அதிகாரம்' என்று. 'இந்தப்பலம் உயிரோட்டமானது. நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றம் என்ற மூன்று அதிகாரத் தூண்களுக்கு மேலதிக புதிய மக்கள் போராட்டம் என்ற அதிகாரத் தூண் உருவாகியுள்ளது. இது மக்களின் இறையாண்மைப் பலம். இந்தப்பலத்துக்கு பதிலளிக்காது, வளைந்து கொடுக்காது, பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்ற போர்வையில் இதுவரை விளையாடி வந்தனர். எனினும் தற்போது மக்களின் இறையாண்மைப் பலம் நேரடியாக செயற்பாட்டுக்கு வந்துள்ளது. இந்தப் பலத்தை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் புரிந்துக்கொள்ள வேண்டும்' என்று குமார் கூறுகிறார்.

அவர் கூறுவதில் உண்மை உண்டு. நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணையை மக்கள் மீளப் பெற்று விட்டார்கள். புதிய மக்கள் அதிகாரத்தின் விளைவாகத்தான் ராஜபக்சக்கள் துரத்தப்பட்டார்கள். ஆனால் கேள்வி என்னவென்றால் இந்த மக்கள் அதிகாரத்தை பிரதிநிதித்துவ ஜனநாயகம் அல்லாத வேறு எந்த வழிகளில் பிரயோகிப்பது? அல்லது இது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதோடு சரியா? இப்பொழுது மக்கள் எழுச்சிகள் திருப்புமுனையான இடத்துக்கு வந்துவிட்டன. இந்த எழுச்சிகளின் விளைவுகளை அடுத்தடுத்த கட்டத்துக்கு தூலமான கட்டமைப்புக்களாக மாற்றத்தவறினால் இந்த எழுச்சியின் கனிகள் அனைத்தும் மேற்கு நாடுகளின் சட்டைப்பைக்குள் போய்விடும். ஏற்கனவே கடந்த ஜூலை ஒன்பதாம் திகதிக்கு முன்புவரை தன்னெழுச்சிப் போராட்டத்தின் கனிகளை ரணில் தன்னுடைய சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டு விட்டார். கடந்த மூன்று மாதகால மக்கள் எழுச்சிகள் யாவும் ஒரு மையத்தில் இருந்து நெறிப்படுத்தப்படவில்லை. மேலிருந்து கீழ்நோக்கிய ஒரு மையத் தலைமைத்துவம் அங்கே கிடையாது. அப்படி ஒரு மையத் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதும் கடினம் என்று தெரிகிறது. ஏனென்றால் "அரகலிய" எனப்படுகின்ற மக்கள் எழுச்சியில் சுமார் 70க்கும் மேற்பட்ட அமைப்புக்களின் பங்களிப்பு உண்டு. அந்த அமைப்புகள் மத்தியில் தீவிர இடதுசாரிகள் தொடக்கம் தீவிர வலதுசாரிகள் வரை எல்லாத்தரப்பும் உண்டு. லிபரல்கள் உண்டு. தன்னார்வலர்கள், புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், படைப்பாளிகள், மதகுருக்கள் என்று பலதரப்புகளும் இணைந்த கதம்பமான ஒரு சேர்க்கை அது. இந்த எல்லாத் தரப்புகளையும் ஒரு பொதுச் சித்தாந்தத்தின் கீழ் ஒருங்கிணைப்பது கடினமானது. அதுதான் அந்தக்கட்டமைப்பின் பலமும். அதுதான் அந்தக் கட்டமைப்பின் பலவீனமும். அந்த பலவீனத்தின் விளைவுகளை இனி போராட்டக்காரர்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

கடந்த மூன்று மாதகாலப் போராட்டத்தில் பொது மக்களின் நம்பிக்கைகளை வென்றெடுக்கவல்ல தலைமைகள் மேலெழவில்லை. ஆர்ப்பாட்டக்கர்ரர்கள் மத்தியில் இருந்து பேச்சாளர்கள் சிலர் வெளித்தெரிய வந்திருக்கிறார்கள். ஆனால் தலைவர்கள் என்று வர்ணிக்கத்தக்க யாரையும் காண முடியவில்லை. தலைவர்கள் இல்லாத மக்கள் எழுச்சி எதில் போய்முடியும்? நிறுவனமயப்படுத் தப்பட்ட, தெளிவான இலக்குகளைக் கொண்ட, ஒரு தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்படாத மக்கள் எழுச்சிகள் ஒன்றில் நீர்த்துப் போகும். அல்லது திசை மாற்றப்படும். அல்லது அவற்றின் கனிகளை யாராவது கவர்ந்து சென்று விடுவார்கள்.

ஒரு மையத்தின் கீழ் கட்டமைக்கப்படாத மக்கள் எழுச்சிகள் அவை என்பதனால்தான் அங்கே ஊடுருவல்கள் நிகழ்கின்றன. ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் பிரிவினைகள் தூண்டி விடப்படுகின்றன. மோதல்கள் இடம் பெறுகின்றன. அதுமட்டுமல்ல, நாடாளுமன்றத்தை முற்றுகையிடும் முடிவு யாரால் எடுக்கப்பட்டது ?என்ற கேள்வி உண்டு.

எனவே ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் இருந்து துலக்கமான தலைமைகளோ, பலமான நிறுவனக்கட்டமைப்போ உருவாகாதவரை இந்த ஆர்ப்பாட்டங்களின் முடிவில் பிரதிநிதித்துவ ஜனநாயக கட்டமைப்புகள் செயலிழக்கும்பொழுது அவற்றை மாற்றீடு செய்வது யார்? எதன்மூலம் மாற்றீடு செய்வது? பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு முக்கிய முன் நிபந்தனை ஒரு ஸ்திரமான அரசாங்கம். அரசாங்கம் ஸ்திரமிழக்கும் பொழுது பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும்.

இதில் தமிழ்த்தரப்பின் நோக்குநிலையில் இருந்து பார்த்தால், யாப்பும் நாடாளுமன்றமும் ஏறக்குறைய செயலிழந்து காணப்படும் ஒரு காலகட்டத்தில் யாப்பை தமிழ் நோக்குநிலையில் இருந்து பல்லினத் தன்மை மிக்கதாக கட்டி எழுப்ப வேண்டும் என்ற கோரிக்கைகளை விட்டுக்கொடுப்பின்றி இறுக்கமாக முன்வைக்க வேண்டிய ஒரு காலகட்டம் இது. ஓர் இடைக்கால ஏற்பாட்டில் தமிழ்த்தரப்பு பங்களிப்பதா இல்லையா என்ற விவாதங்களைவிடவும் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு பரப்பு அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சென்றவாரத் தொடர்ச்சி)

# வந்தபின் காக்கும் 'சிஸ்டமும்' வராமலே போகவுள்ள வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையமும்!

○ மு.கார்த்திகேசு

## சாத்தியவள ஆய்வுகள் (Feasibility studies)

இதன் அடுத்த கட்டமாக, திட்டத்துக்கான பூர்வாங்க சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்வதற்கு 2016/2017 காலப்பகுதிகளில் ஆகக் குறைந்தது பத்து தடவைகளாவது நெதர்லாந்துக் குழுவினர் கிளிநொச்சி மருத்துவமனை மற்றும், வடமாகாண சுகாதார அமைச்சு ஆகியவற்றுக்கு நேரடியாக வருகை தந்திருந்தனர்.

இந்த ஆய்வுகளின் பிரகாரம் வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினைக் கிளிநொச்சி மருத்துவமனையின் தற்போதைய அவசர சிகிச்சைப்பிரிவுக்கு முன்பாக அமைப்பதாகவும் அந்த அலகின் தரைத்தளத்தில் அவசர மற்றும் விபத்துச் சேவைப் பிரிவு அமைக்கப்படும் எனவும் இறுதி முடிவு எட்டப்பட்டது. மத்திய சுகாதார அமைச்சின் அப்போதைய திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் நாயகமும் (Deputy Director General Planning) நேரடிக்கள ஆய்வில் ஈடுபட்டதுடன் அவரது ஆலோசனையின் அடிப்படையிலேயே திட்டமுன்மொழிவுக்கான இறுதிவரைபும் (Final draft of the proposal) மாவட்ட சுகாதாரத்துறையினரால் தயாரிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு கள் சகலராலும் ஏற்கப்பட்டு அதற்குரிய அனுமதி 2017.05.04 திகதிய கடிதம் ஊடாக இலங்கை தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் (Department of National Planning) வழங்கப்பட்டது.

இந்தக் கடிதத்தில், இரண்டாம் கட்ட அபிவிருத்தியின் முதலாம் பகுதியான (Stage II, Phase I) வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் (Center of Excellence for Women Care) நெதர்லாந்து அரசின் உதவியுடன் 1974 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் என்றும், கட்டம் இரண்டின் மிகுதியான 2500 மில்லியன் ரூபா பெறுமதியான கட்டுமானங்கள் பாதீட்டு ஒதுக்கீட்டின் ஊடாக நிர்மாணிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும், வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் உள்ளிட்ட இரண்டாம் கட்ட அபிவிருத்திக்காக அனுமதி வழங்கப்பட்ட சில அலகுகள் இந்த மருத்துவமனையின் ஆரம்பகாலத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த மூலத் திட்டத்தில் (Master plan) இருந்திருக்கவில்லை.

மீளமைப்புச் செய்யப்பட்ட மூலத் திட்டத்தை (revised master plan) விரைவில் சமர்ப்பிக்குமாறும் அதன் அடிப்படையில் இரண்டாம் கட்ட அபிவிருத்திக்கான பாதீட்டு ஒதுக்கீட்டான 2500 மில்லியன் ரூபாவை வழங்குவது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் தேசிய திட்டமிடல் திணைக்க ளத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## முடங்கிய மூலத்திட்ட மீளாய்வுக் குழு

இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் மூலத் திட்ட மீளாய்வுக்காக நியமிக்கப்பட்ட குழு தொடர்பில் அதிருப்தி கிளப்பப்பட்டது.

இது தொடர்பாக 2018 ஆம் ஆண்டு அதே காலப்பகுதியில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எந்திரி ஒருவர் "யார் இந்த குழுவை அமைத்தார்கள்? இது எங்களது ஊர். எங்களுக்கு எதுவும் தெரியாது. எம்மைக் குழுவிலும் போடவில்லை. எம்மிடம் இதனை தாருங்கள். நாங்கள் செய்வோம்" என்று மார்தட்டினாராம்.

இறுதியில் அந்தச் செயற்பாட்டினை தாமே செய்வதாக 2018 ஆம் ஆண்டு மாசி மாதம் புதிய மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொறுப்பேற்றுக் கொண்டார். அதன்பின்னர் கிளிநொச்சி பீடத்தினரது பங்களிப்புக் குறித்து சுகாதாரப் பகுதியினர் அலட்டிக்கொள்ளவில்லை.

நான்கு வருடங்கள் கடந்த பின்னரும் இன்று வரை இந்த மூலத் திட்ட மீளாய்வு இறுதி செய்யப்படவும் இல்லை. மூல வரைபடம் மீளமைக்கப்படவும் (Revision of hospital master plan diagram) இல்லை. இதனால் மருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தி தொடங்கப்படவும் இல்லை என்பதுதான் கசப்பான உண்மை.

இது பற்றி பொறியியல் பீடத்தினர் கருத்துத் தெரிவிக்கையில் "கிளிநொச்சி மருத்துவமனையின் மூலத் திட்ட மீளாய்வு மற்றும் நெதர்லாந்து நிதி உதவியுடன் தொடங்கப்படவிருந்த வடக்குக்கான விசேட பெண் நோயியல் சிகிச்சை மையம் தொடர்பான திட்டமிடல் ஆகியவற்றின் ஆரம்பத்தில் நாம் ஈடுபட்டது உண்மை. மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகளுக்கு கட்டணம் எதுவும் பெறாமல் நாம் இணைந்து சேவை செய்யக் கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் நாம் இலவச மருத்துவம் மற்றும் இலவசக்கல்வியைப் பெற்றவர்கள். மூலத்திட்ட மீளாய்வு இன்னமும் நிறைவுசெய்யப்படவில்லை எனில் நாம் இப்போதும் அது தொடர்பில் உதவி செய்யத் தயாராகவே உள்ளோம். எவரு டனும் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் தயார்" என்றனர்.

## தற்போதைய நிலை

வழங்கப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக உலகின் தலைசிறந்த மருத்துவ தொழில்நுட்பத்துடன் கட்டி எழுப்பப்பட்டு வருகிறது வடமாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம். இதில் மகளிருக்கான அவசர விபத்துப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, பிரசவத்துக்கு முன்னர் மற்றும் பின்னரான விடுதிகள், மகப்பேற்று விடுதி, பெண் நோயியல் விடுதி, மகப்பேற்றியல் சத்திரசிகிச்சைக் கூடம், பெண் நோயியல் சத்திரசிகிச்சைக்கூடம், மத்திய தொற்றகற்றும் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, விசேட குழந்தைகள் பராமரிப்பு அலகு, செயற்கைமுறைக் கருக்கட்டல் சேவையுடன் கூடிய கருவளவாக்கல் அலகு, ஆய்வு கூடம், மருத்துவ பதிவேட்டு அறை, ஒன்றுகூடல் மண்டபம் மற்றும் கதிர்நுட்ப அலகு ஆகிய பிரதான அம்சங்கள் உள்ளன. இதில் ஏறத்தாழ 200 நோயாளர் படுக்கைகள் உள்ளடக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

இந்த மையத்தின் கட்டுமானம், கருவி உபகரணங்கள் என்பவற்றினை முறையாக இயக்குவதற்காக சுகாதாரப் பணியாளர்களுக்கான பயிற்சிகள் என்ற வகையில் ஏறத்தாழ இரண்டு பில்லியன் ரூபாவை நெதர்லாந்து அரசு செலவிடவுள்ளது.

இந்தக்கட்டடத்தொகுதியானது சூரிய ஒளிமூலம் பெறப்படும் மின்சாரத்தை உபயோகித்து இயங்கும் வகையில் இயற்கையோடு ஒன்றிய கட்டடம் என்ற எண்ணக்கருவுக்கு (Green building concept) அமைய அமைக்கப்படுவது கூடுதல் சிறப்பு.

அப்படி இயற்கையோடு ஒன்றியக் கட்டடம் ஒன்றுக்கு மின்சார இணைப்பினை வழங்குவதற்காக மரங்களை வெட்டுவது என்ற முடிவு என்ன அடிப்படையில் எடுக்கப்பட்டது? யார் எடுத்தார்கள்? அவ்வாறு மின் இணைப்பினை வழங்குவதாயின் நிலத்தடி மின்தடங்களைப் பயன்படுத்தியோ அல்லது மரங்கள் அற்ற பகுதிகளின் ஊடாகவோ மின்னிணைப்பினை வழங்குவது பற்றி ஏன் எவரும் சிந்தித்திருக்கவில்லை? காரணம், மாகாணத்தின் மிக முக்கியமான ஒரு மருத்துவத்துறைக் கட்டமைப்பு கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாகி நிறைவடையும் நிலையிலும், 'அதுபற்றி எமக்கு எதுவும் தெரியாது' என்று கைவிரிக்கும் நிலையில் தான் கிளிநொச்சி மாவட்டத்தின் தற்போதைய சுகாதாரத் துறை நிர்வாகம் உள்ளது.

2016 ஆம் ஆண்டில் குறித்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, திட்டம் நிறைவடைந்ததும் அதனை எவ்வாறு இயக்குவது என்ற திட்டமிடலும் செய்யப்பட்டிருக்கும். அவ்வாறு செய்யப்பட்டிருந்தால், அதற்கான ஆளணி உள்ளிட்ட சகல வளங்களும் வழங்கப்படும் என்று சாத்திய வள ஆய்வின்போது மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுகளால் உத்தரவாதப்படுத்தப் பட்டிருக்கும். அவ்வாறில்லாமல் வெளிநாட்டு நிதி உதவியுடன் இந்தத் திட்டம் முன்னர்ந்திருக்கச் சாத்தியமே இல்லை.

மேற்படி ஊகம் சரியே என்பது முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்துடன் உரையாடியதிலிருந்து தெரியவந்தது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மூலத் திட்ட மீளாய்வு (Revision of master plan)

மத்திய சுகாதார அமைச்சு மற்றும் இலங்கைத் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் ஆலோசனையின் பிரகாரம் 2016 மார்கழி மாதம் மருத்துவமனையின் மூலத் திட்ட மீளாய்வுச் செயற்பாடு (Revision of hospital master plan) ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டுக்காக 2017ம் ஆண்டு தை மாதம் அப்போதைய மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரால் விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இந்தக்குழுவில் கிளிநொச்சியின் முன்னாள் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள், தற்போதுள்ள கிளிநொச்சி மருத்துவமனை நிர்மாணத்தில் பங்கெடுத்திருந்த பொறியிலாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள், பதவி வழி நிர்வாகத்தினர் மற்றும் கிளிநொச்சி பொறியியல் பீடத்தைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த துறைசார் நிபுணர்களும் இணைக்கப்பட்டிருந்தனர். இதில் கிளிநொச்சி பொறியியல் பீடத்தினர் பிரதான திட்ட ஆவணங்களைக் கட்டணம் எதுவும் இன்றி உருவாக்கிக் கொடுப்பதற்கு முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும் (அரச கட்டடக் கூட்டுத்தாபனம் இவ்வாறான செயற்பாட்டுக்கு ஆகக் குறைந்தது பத்து மில்லியன் ரூபா அறவிடுவது குறிப்பிடத்தக்கது).

இதன் ஒரு அங்கமாக மத்திய சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் நாயகம் இரண்டாவது தடவையாகவும் கிளிநொச்சிக்கு வந்து பிரதான திட்ட மீளாய்வுக் குழுவினர், மருத்துவமனை நிபுணர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோருடன் இந்தத்திட்டம் குறித்து விவாதித்திருந்தார்.

துரதிர்ஷ்டவசமாக , மூலத்திட்ட மீளாய்வு நிறைவு செய்யப்பட்டு, வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையக் கட்டுமானம் தொடங்குவதற்கு முன்னதாகவே இதில் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் களத்தை விட்டு அகன்று விட்டார்கள் அல்லது அகற்றப்பட்டார்கள். வடமாகாண சுகாதார அமைச்சராக இருந்த மருத்துவர் சத்தியலிங்கம் , சிலபல அரசியல் காரணங்களால் பதவி விலக்கப்பட்டார். 'மகப்பேற்றியல் நிபுணரே இந்த புதிய திட்டத்தினைக் கொண்டுவந்தவர் .ஆனால் அவர் கிளிநொச்சி மருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தியை தடுக்கும் சதியில் அரசுடன் சேர்ந்து ஈடுபடுகிறார்' என்றும் சிலர் புரளியைக் கிளப்பிவிட்டனர். இவர்களது நடவடிக்கையால் மனமுடைந்த மகப்பேற்றியல் நிபுணரும் தமது இடமாற்றக் கட்டளையினை ஏற்றுக்கொண்டு தெல்லிப்பழைக்குச் சென்றுவிட்டார். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரோ மேற்படிப்புக்கு சென்றுவிட்டார். இந்த நிலையில் ஏற்கனவே திட்டமிட்டபடி கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கும் தருணத்தில் கிளிநொச்சியின் சில அரசியல்வாதிகளும், அவர்களது ஆட்களும் இதில் தலையீடு செய்தனர்.

'மகளிர் விசேட சிகிச்சை அலகை கிளிநொச்சி மருத்துவமனைக் காணிக்குள் கட்டப்படக்கூடாது. அவ்வாறு கட்டினால்மருத்துவமனையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தி சாத்தியப்படாது. வடக்குக்குப் பொதுவான சிகிச்சை அலகினை ஏன் கிளிநொச்சி மருத்துவமனைக்குள் கட்டவேண்டும்?' என்று இவர்கள் கேள்வி எழுப்பினர்.

'வடக்குக்கான விசேட பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று மையமானது தற்போதைய கிளிநொச்சி மருத்துவமனையின் மூல வரைபடத்தில் இல்லை. எனவே இது இங்கு அமைக்கப்படுவது பொருத்தமல்ல' என்ற வாதமும் இவர்களால் முன்வைக்கப்பட்டது. நோயாளர் நலன்புரிச் சங்கம் என்ற பெயரில் தங்களது முகவரியை உருவாக்கிக்கொண்ட சிலரும் இவர்களுடன் அப்போது சேர்ந்திருந்தனர்.

புதிதாகப் பொறுப்பேற்றிருந்த மாவட்ட சுகாதாரத்துறையினரும் "கிளிநொச்சியில் சிஸ்டம் இல்லை. நாங்கள் சிஸ்டத்தை உருவாக்குவோம்" எனக் கூறிக்கொண்டு இவர்களுக்கு ஒத்து ஊதினர். புதிய சுகாதார அமைச்சரும் அதற்கு மறுப்பு ஏதும் சொல்லவில்லை. இவர்களது இத்தகைய செயற்பாட்டினால், இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டால் அந்த நிதியை தனது சொந்த மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைக்கு மடைமாற்றும் எண்ணம் புதிதாக வந்த வடமாகாண சுகாதார அமைச்சருக்கு இருந்தது என்றும் சிலர் கூறுகிறார்கள். அவ்வாறு அவர் செய்திருந்தாலும் அதில் தவறேதும் இருந்திருக்காது.

## நகர்த்தப்பட்ட அமைவிடம்

அது அவ்வாறிருக்க, "வட மாகாணத்துக்கான விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தினுள் கட்ட அனுமதிப்பதில்லை" என்ற தமது முடிவினை புதிதாக நியமிக்கப்பட்ட, மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஊடாக நெதர்லாந்துக் குழுவுக்கு தெரியப்படுத்தியதும் அவர்களிடமிருந்து மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு கடுமையான தொனியில் பதில் வந்ததாம்.

" அதிகாரிகள் மாறியதால் ,இறுதி செய்யப்பட்ட திட்டங்களை மாற்ற நினைப்பது என்பது ஏற்க முடியாது. நெதர்லாந்து உதவியின் பிரதான அம்சமே வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் தான். இதற்கு இடையூறு ஏற்படுத்தினால் வடக்குக்கான நெதர்லாந்தின் உதவிகளை முழுமையாக மீள் பரிசீலனை செய்யவேண்டியிருக்கும் (Reconsider)" என்ற சாரப்பட இருந்ததாம் அந்தப் பதில்.

அதனைக் கண்டு ஆடிப்போனவர்கள் 'சரி , அப்படியானால் விசேட மகளிர் மையத்தை, தற்போதைய கிளிநொச்சி மருத்துவமனைக் கட்டடத்துக்கு முன்பாக அமைக்கவேண்டாம். அதிலிருந்து தொலைவில் -இரத்த வங்கிக்கு அண்மை யில்- கொண்டுபோய் கட்டிக்கொள்ளுங்கள். அவசர சிகிச்சை மற்றும் விபத்துப் பிரிவினை நாம் இரண்டாம் கட்ட அவிபிருத்தியின்போது அமைத்துக் கொள்கிறோம்' என்று வேண்டுகோள் வைத்தார்கள்.

நெதர்லாந்துக் குழுவும் திட்டத்துக்கு ஏற்படும் காலதாமதத்தினை கருத்திற் கொண்டு அந்தப் பதிலுரையினை ஏற்று, தற்போது அமைக்கப்பட்டுவரும் இடத்துக்கு குறித்த கட்டடத்தொகுதியின் அமைவிடத்தினை நகர்த்தியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வந்தபின் காக்கும்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"2016 ஆம் ஆண்டிலே கிளிநொச்சி யில் அமைக்கப்படும் வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் உட்பட்ட பல பில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டத்தினை வடக்குக்கு கொண்டுவரும்போது, மத்திய சுகாதார அமைச்சு அவற்றினை இயக்குவதற்குத் தேவையான ஆளணிக்கான அங்கீகாரம், ஆளணி உள்ளிட்ட அனைத்தினையும் தருவதாக வாக்களித்திருந்தது " என்றார் மருத்துவர் சத்தியலிங்கம். "இருப்பினும் இது தொடர்பில் பின்னர் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என தனக்குத் தெரியாது " எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே 250 கட்டில்களுடன் இயங்கும் கிளிநொச்சி மருத்துவமனையில் சேவைகளை வழங்குவதற்கான ஆளணிக்குத் தட்டுப்பாடு என்று கூறப்படும் நிலையில், அதே வளாகத்தினுள் மேலும் 200 கட்டில்களுடன் கூடிய ஒரு விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை இயக்குவதற்குத் தகுந்த திட்டமிடலும் முன்னோக்குப் பார்வையும் தேவை. இந்தத் திட்டம் முடியும் தறுவாயில் உள்ளதால், புதிதாகத் திறக்கப்படவிருக்கும் விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை இயக்குவதற்குத் தேவையான ஆளணி உள்ளிட்ட வளங்களைப் பெறுவதற்கான முன்னாயத்தங்களை மருத்துவமனை, மாவட்ட மற்றும் மாகாண சுகாதாரத்துறை நிர்வா கங்கள் ஆரம்பித்திருக்க வேண்டும். அதனால் இந்த திட்டம் குறித்த சகல விபரங்களும் அவர்களது விரல் நுனியில் இருந்திருக்க வேண்டும்.

அப்படியிருக்கையில், இந்தத் திட்டத்துடன் தொடர்புடையவர்கள் 'எமக்கு எதுவும் தெரியாது' என்று கையை விரிப்பதும், ஆளை ஆள் மாறிமாறிக் கை காட்டுவதும் ,தேவையான மேலதிக ஆளணிக்கோ அல்லது புதிதாக திறக்கப்படப்போகும் விசேட மகளிர் சிகிச்சை மையத்தினை இயக்குவதற்கோ எவ்வித தயார்படுத்தலும் நடைபெறவில்லை என்பதையே காட்டுகிறது.

எவரோ திட்டமிட்டார்கள், எவரோ அதனை மாற்றினார்கள், அந்த இரண்டு தரப்பும் இல்லாத புதியவர்கள் தற்போது 'ஏதோ நடக்கட்டும்' என்று தங்கள் வழியைப் பார்க்கிறார்கள் என்றவாறு இருக்கிறது நிலமை.

ஆறு மாதத்துக்கு அல்லது வருடத்துக்கு ஒரு தடவை சுகாதாரத்துறை நிர்வாகம் மாற்றப்படுகிறது. புதிதாக வருபவர்கள் முன்னர் இருந்தவர்களில் குற்றம் பிடிப்பதிலும், தமது பெயர்களை கல்வெட்டில் பொறிப்பதிலும் காட்டும் ஆர்வத்தினை மாவட்ட மற்றும் மாகாண சுகாதாரத் துறையின் நீண்டகால வளர்ச்சியில் காட்டியிருக்கவில்லை என்பதே கசப்பான உண்மை. அவ்வாறு காட்டியிருந்தால் ஆகக் குறைந்தது கிளிநொச்சி மருத்துவமனையின் மீளாய்வு செய்யப்பட்ட மூலத் திட்டமாவது (Revised hospital master plan) இப்போது தயாரிக்கப்பட்டிருக்கும். நல்லது நடந்தால் தாமே செய்தோம் என்று உரிமை கோரவும், தவறு நடந்தால் அதை முன்னர் இருந்தவர்கள் செய்தார்கள் என்று பழிபோடவும் தெரிந்திருப்பதுதான் சுகாதாரத் துறையில் நிர்வாகம் செய்வதற்கான அடிப்படைத் தகமையோ என எண்ண வைக்கும் அளவில் இருக்கிறது இவர்களது செயற்பாடுகள்.

**வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையம் செயற்படத் தொடங்குமா?**

தற்போது நடப்பவற்றை அவதானிக்கும்போது ஒன்று மட்டும் தெளிவாகிறது. தற்போது வடக்கின் மற்றும் கிளிநொச்சியின் சுகாதாரத்துறை நிர்வாகத்தில் நீண்டகாலத் திட்டமிடல் என்று எதுவும் கிடையாது. அன்றைய நாளை வாழ்ந்துவிட்டால் போதும் என்று பலரும் 'ஆட்டையைப்போட்டால் போதும்' என்று சிலரும் செயற்படுகையில் நீண்டகாலத் திட்டமிடலை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

எனவே வந்த பின் காக்கும் 'புதிய சிஸ்டத்தின்' கீழ் இந்தக் கட்டடம் திறக்கப்படும்போது, கிளிநொச்சி பொதுமருத்துவமனையில் தற்போது இயங்கிவரும் சில அலகுகளை அந்தப் புதிய கட்டடத் தொகுதிக்கு மாற்றக்கூடும். அதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு தற்போது தற்காலிகமான இடங்களில் இயக்கப்படும் கண் நோயியல், காது மூக்கு தொண்டை சிகிச்சை அலகு போன்றவை உள்ளக இடமாற்றம் செய்யப்படலாம்.

வடக்குக்கான விசேட மகளிர் சிகிச்சை மையக் கட்டடத் தொகுதியாக அது இயக்கப்படுவதற்கான சாத்தியங்கள் குதிரைக் கொம்புதான். இதனை தந்திரமாக மறைப்பதற்காக கிளிநொச்சி மருத்துவமனையின் தற்போதைய மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் விடுதிகளைப் புதிய கட்டடத்தொகுதிக்கு மாற்றிவிடும் உத்தியையும் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளக்கூடும். கேள்வி எழுப்புபவர்களுக்கு 'இதுதான் அது' என்றோ அல்லது 'தற்போதைய பொருளாதார நிலையில் அரசு புதிய ஆளணிகளை வழங்காது. அதனால் கட்டடத்தை உபயோகிப்பதற்கு இதைவிட வேறு வழியில்லை' என்றோ பதில் வழங்கப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை.

ஏனென்றால் "சரி. ஆளணி நியமிப்பது இருக்கட்டும். அப்படி நியமிப்பதற்கு முதற்படியாக ஆளணிகளுக்கான அனுமதி (Carder approval) அவசியம். அதனைப் பெற்றுக்கொண்டிருக்கிறீர்களா?" என்று எவரும் கேள்வி எழுப்பமாட்டார்கள் என்று சுகாதாரத் துறையினருக்கு நம்பிக்கையாகத் தெரியும்.

"புதிதாகப் பொருத்தப்படும் மருத்துவ உபகரணங்களை இயக்குவதற்கான பயிற்சியினை வழங்குவதற்கு மருத்துவமனையிலிருந்து ஆளணியினரை அனுப்ப வேண்டியிருக்கும். இந்தப் புதிய அலகுக்கு ஆளணி இல்லாவிட்டால் எவரை அனுப்புவார்கள்?" என்ற கேள்விக்கு சுகாதாரத் துறையைச் சேர்ந்த ஒருவர் சொன்னார் "இதெல்லாம் சிம்பிள். தொண்ணூறுகளில் ஜப்பான் அரசாங்கம் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மின் உயர்த்திகளை நிறுவிக் கொடுத்தது. அதன் பின்னர் மின் உயர்த்தி இயக்குநர் (Lift operator) ஒருவர் ஜப்பான் நாட்டுக்குச் சென்று அந்த உயர்த்திகளை இயக்குவது மற்றும் பராமரிப்பது குறித்த பயிற்சியினைப் பெற்று வந்தார்."

" இது நடந்து சில காலத்தின் பின் அந்த மின் உயர்த்திகளில் ஒன்று செயலிழந்து போனது. கொழும்பு தேசிய மருத்துவமனையில் இருந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் அதனைச் சீர் செய்ய முடியாமல் போனதால் ,அதனைப் பொருத்திய ஜப்பான் நிறுவனத்து டன் தொடர்பு கொண்டனர். ஜப்பானியர்கள் "இது சிறிய பிரச்சினை. இங்கு வந்து பயிற்சி எடுத்து வந்த உங்களது மின்தூக்கி இயக்குநரே அதனைச் சரி செய்ய முடியும். அவரைக் கேட்டீர்களா? "என்றதும் இலங்கையில் இருந்தவர்களுக்கு வியப்பு. அப்படி யாரும் ஜப்பான் சென்று வந்ததாக அவர்களுக்குத் தெரியாது. "யார் அவர். அவரது பெயர்?" என்ன என்றவர்களுக்கு ஜப்பானியர்கள் கூறிய பெயரைக் கேட்டதும் மயக்கம் வராத குறை. ஏனெனில் அந்தப் பெயரை உடையவர் அப்போதைய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் என்ற அதி உயர் பதவிக்கு சொந்தக்காரர். அதுபோல மத்திய மாகாண .மாவட்ட சுகாதார உயரதிகாரிகள் ஒன்றாக ஒரு வெளிநாட்டு சுற்றுலா போய்விட்டு வருவார்கள். இருந்து பாருங்கள்".

கேட்டுக்கொண்டிருந்த எனக்கு மயக்கம் வருவது போல இருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால் கிளிநொச்சி மாவட்ட பொதுமருத்துவமனையின் ஒரு விரிவாக்கமாகவே (Extension of General Hospital Kilinochchi) இந்த விசேட மகளிர் சிகிச்சை மையக் கட்டடத்தொகுதி இயக்கப்படுவதற்கு அதிக சாத்தியங்கள் உண்டு.

அதனால், புதிய கட்டடத்தொகுதியிருந்து தற்போதைய மருத்துவமனைக்கும், இங்கிருந்து அங்குமாக வெட்ட வெளி ஊடாக மழையிலும் வெயிலிலும் நோயாளர்களை காவித் திரிவார்கள்.

அப்போதைய மருத்துவமனைப் பணிப்பாளர் சனங்களுக்காக மூடிய நடைபாதை (covered way) அமைத்துத் தரும்படி நலன்விரும்பிகளுக்கு கோரிக்கை வைப்பார். அதை ஏற்று புலத்திலுள்ள பலர் நெஞ்சுருகி நிதியளிப்பார் கள். இங்குள்ள சிலர் அதில் கொஞ்சம் அள்ளி எடுப்பார்கள். வடக்கில் விசேட மருத்துவமனை வசதி தேவைப்படும் பெண்களும் கர்ப்பவதிகளும் கொழும்புக்கும் வெளிநாடுகளுக்கும் நடையாய் நடப்பார்கள்.

## என்ன தீர்வு?

இது தவிர்க்கப்படவேண்டுமானால் உரிய தரப்பினருக்கு தற்போதே தேவையான அழுத்தங்களை அனைவரும் ஒருமித்து வழங்கவேண்டும். திட்டத்தினை முன்னெடுக்கும் நெதர்லாந்து அரசிற்கு நேரடியாகவே இந்தக் கள நிலைவரத்தைத் தெரிவிக்க வேண்டும்.

மாகாணத்தினதும் மாவட்டத்தினதும் மகளிர் நலன் தொடர்பாக அக்கறைகொண்ட ஒவ்வொருவரும் இந்த வரலாற்றுக் கடமையில் ஒருங்கிணைய வேண்டும்.

**"ஞாலம் கருதினுங் கைகூடுங் காலம் கருதி இடத்தாற் செயின்"**

# ஊர்ப் புதினம்

○ இராகவன்

பஞ்சு மாமாவுக்குக் கலியாணம் முற்றாகிக் கலியாண வீடும் வசந்தியக்கா வீட்டிலதான் நடக்கப் போகுதெண்டு முடிவானப் போல . வசந்தியக்கா ஒருநாள் இளையண்ணாவைக் கூப்பிட்டு 'வாசு! (இளையண்ணாவின்ர முழுப்பெயர் வாசவன்) நீதான் கலியாண வீட்டு டெக்கிறேசனுக்குப் பொறுப்பு. பொம்பிளை வீட்டு டெக்கிறேசனைவிட எங்கடை டெக்கிறேசன் வலு எழுப்பமாயிருக்க வேணும். அதுக்கு என்னென்ன சாமான்கள் தேவையோ எல்லாத்தையும் ஒரு துண்டில எழுதித்தா! நான் நாளைக்கே வாங்கியந்து தாறன்' எண்டு சொல்ல இவனும் ஒரு லிஸ்ற் எழுதிக் குடுத்தான். அவவும் சொன்னமாதிரியே லிஸ்ற்றில இருக்கிற சகல சாமான்களையும் மறுநாளே வாங்கியந்து இவன்ர கையில குடுத்திட்டா.

அதோட இவன் இன்னொரு வேலை பாத்தான். அது என்னெண்டா ஒரு தடிச்ச நீளக்காா்ட்போா்டை எடுத்து அதில பக்கப்பாட்டில ஒரு பொம்பிளை முழங்காலில குந்தி இருந்து தீபமேந்திறது மாதிரி கீறினான். பிறகு இன்னொரு நீளக்காா்ட்போா்ட் எடுத்து அதே மாதிரி இன்னொரு பொம்பிளை முழங்காலில குந்தி இருந்து பூச்சொரியிறது மாதிரிக் கீறினான். பிறகு இரண்டிலயிருந்தும் அந்தப் பொம்பிளை உருவங்களைத் தனியா வெட்டியெடுத்தான். இப்ப ஒரு சோடிப் பொம்பிளையள் தீபமேற்றுறது மாதிரியும் ஒரு சோடிப் பொம்பிளையள் பூச்சொரியிறது மாதிரியும் அச்சுகள் கிடைச்சுது. அந்த அச்சுக்களை வசந்தியக்கா வாங்கியந்து குடுத்த கடுஞ்சிவப்பு, கடும் நீலம், கடும் பச்சை ரிஸ்யூக்களை நாலாய் மடிச்சு ,அதுக்கு மேலை வைச்சுப் பென்சிலால மெல்லமாக் கீறிப்போட்டுப் பிறகு கத்திரிக்கோலால வெட்டியெடுத்தான். அதிலை எட்டுச் சோடி தீபமேத்திற பொம்பிளையளும் எட்டுச்சோடி பூச்சொரியிற பொம்பிளையளும் வந்திச்சுது. சொல்லி வேலையில்லை. அதுகளைப் பாக்க வலுஎழுப்பமாத்தானிருந்திச்சுது. இப்ப டெக்கிறேசனுக்குத் தேவையான சாமான் சக்கட்டெல்லாம் றெடிமேற்றா எடுக்கலாம். அதுவும் குறிப்பாய் இந்த எழுத்து அலங்காரமிருக்கெல்லோ? அதுதான் , வெல்கம், நல்வரவு, நன்றி மீண்டும் வருக எண்ட மாதிரியான சொல்லுகள் , மற்றது மாப்பிளை பொம்பிளையின்ர பெயருகள் எல்லாமே

48



இப்ப றெஜிபோமில மினுங்கல் டிசைனில விதவிதமான கலருகளில வந்திருக்கு. இதுக்குள்ள நம்பருகளுமடங்கும். அதாவது விசேசம் நடக்கிற தினத்தையும் அலங்காரத்தில காட்ட வேணுமெல்லே. அதுதான். ஆனால் முந்தின காலத்தில இந்த றெடிமேற் சங்கதியொண்டுமில்லை. எல்லாம் கையாலதான் இணைக்க வேணும். இதுக்கெல்லாம் எங்கட இளையண்ணனை விட்டால் ஊருக்குள்ளை வேறை ஆளேயில்லை. இதில அவனொரு தனிக்காட்டு ராசாதான். பஞ்சுமாமாவின்ர கலியாண வீட்டு டெக்கிறேசனுக்கு வெல்கம், நல்வரவு, நன்றி மீண்டும் வருக' BANJU WEDS RANI' எண்ட எழுத்தலங்காரங்களெல்லாம் அவன் இராப்பகலாயிருந்து மினக்கெட்டு, கையாலதான் இணக்கிச் சுவர் முழுக்க நீற்றாய் நேர்பாத்து ஒட்டிமுடிச்சவன். இதுகளைவிட இன்னும் இரண்டு விசயமிருக்குது. ஒண்டு நெளியல் ரிஸ்யூ டெக்கிறேசன். நெளியல் ரிஸ்யூவை எல்லாரும் பாத்திருப்பம். விரலளவு அகலத்தில ஒவ்வொரு நிறத்திலயும் நீளமாய் இருக்கும்.

ஒரு பெரிய வட்டத்தைச் சுவரில கீறிப்போட்டு (சின்னவட்டங்களும் கீறலாம்) வட்டத்தின்ர விளம்பில பசையைப் பூசிப்போட்டு இந்த நெழியல் ரிஸ்யூவை அதுக்கேத்த மாதிரி அளவை எடுத்து ஒட்டிப்போட்டு முறுக்கி முறுக்கி கொண்டந்து வட்டத்தின்ர மையத்தில ஒட்டவேணும். இது ஒரு நுட்பமான வேலை. பொறுமையாய்ச் செய்ய வேணும். கொஞ்சம் பிசகினாலும் அசிங்கமாய்ப் போகும். இளையண்ணா வலுநுட்பமாயும் பொறுமையாயும் கண்ணுக்குக் குளிர்ச்சியாயும் அதைச் செய்வான்.


கண்ணுக்குக் குளிர்ச்சியாய் எண்டால் நிறத்தெரிவைத்தான் சொல்றன். முதல்ல மெல்லிய நீலத்தை ஒட்டினால் அடுத்ததா கடும் நீலத்தை ஒட்டுவான். இரண்டாவது வெளி அலங்காரம். அதாவது பந்தல் மற்றும் முற்ற அலங்காரம். அதுக்கு நோமல் ரிஸ்யூக்களை எடுத்து செவ்வகமா மடிச்சுக் கீழ்ப் பகுதியை தும்புத் தும்பா வெட்டிப்போட்டு மேல் பகுதியை ஒரு நீளமான நூலிலை மடிச்சு அடுக்கடுக்கா ஒட்டிப்போட்டு பிறகு தேவைக்கேத்த மாதிரிக் கட்டிவிடலாம். பஞ்சு மாமாவின்ர கலியாண வீட்டுக்கு வந்தவையெல்லாம் 'ஆர் டெக்கிறேசன்?' எண்டுதான் கேட்டவை. ஆனால் எனக்கு அதை ரசிக்கக் குடுத்து வைக்கேல்ல.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

92




அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

.......................................................

கையொப்பம்:.............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. காந்தி அமைத்த ஆச்சிரமம் 5. இரட்டை 7. யானை 8. பார்வையிட்டு அறியும் நிகழ்வு 10. பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ரசிகன் 12. வாழை மடல் 13. பணம் 14. சிசு 15. இரப்பவன் 18. ஒன்றுக்கு ஈடாக வைக்கப்படுவது 19. குளிர்மை தரும் பானம் 20. கை 21. முதல் திதி 23. வான் 24. நன்கொடை

## மேலிருந்து கீழ்

1. பழக்கதோஷம் 2. ஆற்று நீரில்/ தண்ணீரில் பயன்படுத்தப்படும் சிறுஓடம் போன்றது 3. புத்திரன் 4. வலிமை 5. துட்டகாரியம் செய்பவன் 6. ஊதல் (ஆங்கில பெயரையே பயன்படுத்துவர்) 9. காதலி மனம் கவர்ந்தவன் 11. திருமணம் 14. சொத்துப் பங்கீடு 16. கழித்தல் குறி 17. கூரிய தன்மை 18. வீட்டின் கூரையை ஒட்டி மேலே அமைக்கப்படும் களஞ்சியம் 19. ஒன்றோடு ஒன்று இடித்தல் 20. குரங்கு 22. ருசித்துப் பார்.

### சொற்சிலம்பம் போட்டி 91 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சமத்துவம் 6. கிடை 7. வாடி 8. கடை 9. உதவுதல் 11. புரட்சி 12. கவிதை 14. காடு 15. தண்டுதல் 17. நம் 18. தலைவாசல் 20. மையம் 21. சிதிலம்

**மேலிருந்து கீழ்**

1.சகிப்புத்தன்மை 2. மடை 3. துவாதசி 4. வடிவு 5. ஆடை 8. கல்வி 9. உட்படு 10. தகடு 13. தைலம் 14. கால்வாசி 16. தலை 17. நல்ல 19. சதி.

### சொற்சிலம்பம் போட்டி இல.92

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**22.07.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

### போட்டி இலக்கம் 91 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**சே.நவரட்ணராசா**
2ஆம் குறுக்குத்தெரு
பாசையூர், யாழ்ப்பாணம்

**2 ஆம் பரிசு**
**ந.செல்வராணி**
காரைநகர்

**3 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்**
வட்டுதென்மேற்கு,
வட்டுகோட்டை

**4 ஆம் பரிசு**
**ஐ.முருகையா**
மடத்தடி பலாலி வீதி,
உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**
**சி.பாலசுந்தரம்**
சண்டிலிப்பாய் வடக்கு
சண்டிலிப்பாய




Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்
செட்டிகுளம், வவுனியா

# பொருளாதார நெருக்கடியும் கோழிப்பண்ணைத்துறையும்

இப்போது சந்தையில் கோழி முட்டை ஐம்பது ரூபா வரையிலும் கோழி இறைச்சி ஆயிரத்து ஐநூறைத் தாண்டியும் விற்பனையாகிறது. சில இடங்களில் இன்னும் அதிகமாக இருக்கலாம். இந்தக் கட்டுரை மனிதனுக்கு புரதம் முதலான சத்துகளை வழங்கும் மிக முக்கியமான உணவுகளான கோழியிறைச்சி மற்றும் முட்டையைத் தரும் இலங்கையின் கோழிப் பண்ணைத் துறை நாட்டின் பொருளாதார பின்னடைவின் காரணமாக சந்திக்கும் சவால்களை ஆராய்கிறது. நான் ஒரு கால்நடை வைத்தியர் என்ற வகையில் குறிப்பாக அரச கால்நடை வைத்திய அலுவலகம் மற்றும் அரசாங்க கோழிப் பண்ணை ஒன்றின் அத்தியட்சகராக இருப்பதால் அங்கெல்லாம் கோழிப் பண்ணைகள் தொடர்பாக நான் சந்திக்கும் சவால்கள் மற்றும் அனுபவங்கள் இந்த கட்டுரைக்கு வலுச்சேர்க்கும் என நம்புகிறேன்.

**கேள்வி 1** ஏன் கோழி உற்பத்திகளின் விலை கூடுகிறது?
**விடை 1** கோழித் தீவனம், மருத்துகள் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு , போக்குவரத்து செலவு அதிகரிப்பு, மின்சாரத் தடை காரணமாக ஏற்படும் உற்பத்தி செலவு கூடுவதால் விலை அதிகரிக்கிறது.

**கேள்வி 2** ஏன் தீவனம் , மருந்துகளின் விலை கூடுகிறது?
**விடை 2** தீவன உற்பத்தி மூலப் பொருள்கள் நாட்டில் மிக மிகக் குறைவு அல்லது இல்லை. மருந்துகள் இறக்குமதியாவது குறைவு.

**கேள்வி 3** ஏன் உற்பத்தி மூலப் பொருள்கள் இல்லை? ஏன் மருந்துகள் இறக்குமதியாவது இல்லை?
**விடை 3** இறக்குமதிக்கு டொலர் இல்லை. உள்நாட்டு உற்பத்தி இல்லை.

**கேள்வி- 4** ஏன் உள்நாட்டு உற்பத்தி இல்லை/ குறைவு?
**விடை - 4** அரிசி போன்ற சில பொருள்களை மனித பாவனைக்கு பயன்படுத்துவதால் விலங்கு உணவாக பயன்படுத்த அரசு தடை விதித்துள்ளது. உரத் தட்டுப் பாட்டால் உள்நாட்டு சோளம் போன்றவற்றின் உற்பத்தியும் போதியதாக இல்லை. சோயா போன்றவற்றை உள்நாட்டில் விளைவிப்பதில்லை. மருந்துகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் குறைவு. அவற்றைக் கட்டாயம் இறக்குமதி செய்ய வேண்டும்.

**கேள்வி 5** ஏன் போக்குவரத்துக்கு செலவு கூடுகிறது? மின்சாரச் செலவு கூடுகிறது?
**விடை 5** எரிபொருள் இல்லை.

இந்தக் கேள்வி பதில்களை பார்க்கும் போது ஏன் கோழி உற்பத்திகளின் விலை அதிகரிக்கின்றன ? என உங்களுக்கு ஓரளவுக்கு விளங்கியிருக்கும் . வாருங்கள் விரிவாக விளக்குகிறேன். கடந்த சில மாதங்களாக நான் கடமை புரியும் அரச கோழிப் பண்ணைக்கு தேவையான தீவனத்தைப் பெறுவதற்காக வவுனியாவிலிருக்கும் கோழித் தீவனம் விற்கும் பல கடைகளுக்கு கேள்விப்பத்திரங்களை பெற செல்லும் போது அவதானித்த விடயங்கள் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தன.

கடந்த வருட இறுதிப் பகுதில் கொஞ்சம் கொஞ்சமாக பல கோழித் தீவன நிறுவனங்கள் தமது உற்பத்திகளை குறைக்க தொடங்கியிருந்தன. இந்த வருடம் மார்ச் மாதமளவில் சில நிறுவனங்கள் தமது உற்பத்திகளை நிறுத்தியிருந்தன. சில தமது நிறுவன கோழிக் குஞ்சுகளை வாங்கும் தமது வாடிக்கையாளருக்கு மாத்திரம் தீவனத்தை வழங்குவதையும் காண முடிந்தது. இன்று பெரும்பாலான நிறுவனங்கள் தமது தீவனத்தை நிறுத்தி விடும் நிலைக்கு வந்துள்ளன. இதனால் பல கோழித் தீவனக் கடைகள் உற்பத்தி நிறுவனங்களில் இருந்து தீவனம் பெறுவது குறைந்துள்ளது என்பதுடன் அதிக விலை கொடுத்தே சிறிதளவு தீவனத்தைப் பெற்றிருப்பதையும் காண முடிகிறது. ஏனைய பொருள்களைப் போல கோழித் தீவனத்தைப் பதுக்க முடியாது. ஏனெனில் அதில் சேர்க்கப்படும் சில மூலப் பொருள்கள் ஒரு மாதத்துக்குள் பழுதாகி விடும் என்பதால் இந்த நிலை. இல்லாது போனால் அங்கும் பதுக்கல்கள் நிகழ்ந்திருக்கும்.

இது இப்படியிருக்க மறுபக்கமாகக் கோழி வளர்ப்பாளர்கள், கோழி வளர்ப்பை பெருமளவில் கைவிட்டுள்ளதைக் காணமுடிகிறது. ஓரளவு பெரிய பண்ணைகள் மாத்திரமே கோழி வளர்ப்பை செய்கின்றன. அதுவும் எவ்வளவு காலத்துக்கோ தெரியவில்லை. நான் பணிபுரியும் வவுனியாவின் அரச கோழிப் பண்ணை அதாவது இனப் பெருக்கப் பண்ணை [ breeding farm] கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்து வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கு கால்நடை வைத்திய அலுவலகங்களூடாக குறைந்த விலைக்கு வழங்குகின்றது. நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட ஏற்பட, ஒவ்வொன்றாகப் பிரச்சினை களும் தோன்றத் தொடங்கின. அதிகரித்த கோழித்தீவன விலை காரணமாகவும் அதிகரித்த எரிபொருள் செலவு காரணமாகவும் உற்பத்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள்

○ மானிப்பாய் சுதன்



சஞ்சீவி சிறுகதை

இப்போதெல்லாம் பெற்றோல் செற்றுகளை தாண்டிப் போகையில் அங்கு நிற்கும் வரிசைகளைப் பார்க்கும்போது...

"வயிற்றுக்கும் தொண்டைக்கும் உருவமில்லா ஒரு உருண்டையும் உருளுதடி" என்ற வைரமுத்துவின் வரிகள் காதலால் இல்லாமல், பயப்பிராந்தியுடன் மனதில் பாடலாக ஓடுகின்றது.

அந்த வரிசைகளில் ஏதோ ஒன்றில் போய்நின்று கொண்டாலோ...

"காத்திருந்தால் எதிர்பார்த்திருந்தால் ஒரு நிமிசமும் வருசமடி.. " அது என்னமோ தெரியேல, கால்கடுக்க நின்றாலும் பாடல் வரிகள் ஊற்றெடுக்கின்றன.

"கண்களெல்லாம் பெற்றோல் பவுசர் வருவதுபோல் ஒரு கலக்கமும் தோன்றுதடி... இலங்கை, சொர்க்கமா நரகமா சொல்லடி உள்ளபடி...

நான் இலங்கையில் இருப்பதும் வெளிநாடுபோவதும் உன்வார்த்தையில் உள்ளதடி.."

"அண்ணை நாங்கள் நிக்கிறது கண்ணுக்குத் தெரியேலையோ? இவ்வளவு நேரமா நாங்க நிக்கிறம் .நீங்க இடையால போனால்....?" கூட்டம் சலசலக்கத் தொடங்கி என் கவியூற்றுக்கு மடைபோட....,

என் மனதிலும் கோபம் எகிறிட என்னுள்ளும் இருந்த ஒருவன் விழித்துக்கொண்டு, "விரட்டி விரட்டி அடிக்கத் தோணுது ......"எனப் பாடத் தொடங்கிவிட்டிருந்தான். மனம் சலித்துக்கொண்டது. ஆனாலும் சண்டையும் வலுக்கத் தொடங்கியது.

திடீரென குறுக்கால வந்தவர் ஹெல்மெற்றையும் மாஸ்க்கையும் கொண்டு முகத்தை மறைத்தவாறு பின்வாங்கத் தொடங்கினார்.

'என்ன ஆச்சு? இந்த இடத்தில்? கூச்சலும் குழப்பமுமாக இருந்த இடம் எப்படி அமைதியாகியது?'

அப்போதுதான் பார்த்தேன். சில முகநூல் போராளிகள் தமது அலைபேசிகளில் படம் எடுக்கத் தொடங்கியிருந்தார்கள். இப்போது விளங்கியது குறுக்கால போனவரின் தந்திரோபாயப் பின்வாங்கலின் தெளிவு.

எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முதலாளி இன்னொருவரைக் கூப்பிட்டு, மூன்றாவது பம்பியில் இருந்தும் பெற்றோலை வழங்கச் சொல்ல... அந்த மூன்றாவது பம்பிக்கு முதலாவதாக போகும் அதிர்ஷ்டசாலி யார்? என மனம் அலைபாயத் தொடங்கியது. முன்னும் பின்னும் பார்த்தேன் அநேகமாக நான் அதற்குப் பொருத்தமானவனாகத் தெரிந்தேன். நப்பாசையை மனதில் இருத்தி. அவர் விழி அசைவுக்காக வழிமேல் விழி வைத்து காத்திருந்தேன்.

குறுகுறு என நான் பார்ப்பது அந்த பெற்றோல் தம்பியை சலனப்படுத்த என்னை முறைத்துக்கொண்டான். 'அவனா? இவன்' எனப் பார்ப்பது போல் இருந்தது. நானோ இப்போ, இந்த இடத்தில் முறைக்கிறத்துக்கு உனக்கு நிறைவேற்று அதிகாரம் இருக்கு என்பதைப் போல் சிரித்தபடியே பார்த்துக்கொண்டேன். அவன் ஒருமாதிரி நெளிந்துகொண்டான்.

அவன் தனது கைபேசியால் பம்பியை போட்டொவெல்லாம் எடுத்துவிட்டு நிதானமாக, " கண்ணாடி போட்ட ஐயாவுக்கு பின்னால் நிற்கிற அக்கா வாங்கோ" என அழைக்க, அந்த அக்காவோ "வாம்மா மின்னலு" என்கின்ற மாதிரி அவனருகில் போய்ச் சேர்ந்தாள்.

என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான் என்று முணு முணுத்தது. முணுமுணுப்பு முன்னுக்கு நின்றவருக்குக் கேட்க, " என்ன ஐயா இவ்வளவு வயசாகியும் இலங்கையில் பிறந்திட்டு அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கிறீங்கள்?"

அவன் சொல்வதும் சரிதான், அதிர்ஷ்டம் இருந்தால் ஏன் இலங்கையில் பிறக்கின்றேன்? அதுவும் தமிழனாக?.அதுவும் இங்கேயே வாழ்கின்றேன்? அதைவிட எனக்குப் பின்னால் ஒரு பொம்பிளைப்பிள்ளை நிற்பதைக் கவனிக்காமல் எனக்கு அதிர்ஷ்டம் வருமென்று நான்நினைத்தது எவ்வளவு முட்டாள்தனம்?

"என்ன ஐயா கடுமையாக யோசிக்கிறியள்?"

"ஒண்டுமில்லை.... அவன் அந்தப்பிள்ளையை கூப்பிட்டது பிழையில்லை. ஆனால் கண்ணாடி போட்ட ஐயா என்று ஆரைச் சொன்னவன் எண்டுதான் தெரியேலை? " என்ற என்னை ஒரு மாதிரியாக அவன் பார்த்துக்கொண்டான்.

அவனுக்கு விளங்கவில்லை ,நாளடைவில் இலங்கையில் பலர் நிஜமாகவே சம்பந்தமே இல்லாது, இல்லாத வரிசையில் நின்று புலம்பப்போகின்றார்கள் என்று. அந்த நேரத்தில் சுகாதாரத் துறையினர் சிலவேளைகளில் இலங்கையில் ஐந்தில் ஒருவர் கடுமையான உளநோய்க்கு உட்பட்டுள்ளார்கள் என அறிவிக்கக்கூடும். தற்கொலைகள் சாதாரணமாகிவிடும். சிலவியாபாரிகள் தற்கொலை உபகரணங்களை விற்கவும் கூடும். சந்திக்கு சந்தி உளமருத்துவர்கள், உளவளத்துணையாளர்கள் பெட்டிக்கடைகளை ஆரம்பித்து இருப்பார்கள்.

"ஐயா முன்னுக்குப் போங்கோ" குரல் எதிர்காலத்தில் இருந்து என்னை மீட்டெடுக்க முன்னுக்குப் போவதற்காக முயற்சிக்க , முன்னால் நின்றவர், "ஐயா மட்காற் நெளியப்போகுது கொஞ்சம் பின்னுக்காக போங்கோ" என்று சொன்னான்.

"தம்பி இந்த இடம் புனிதமான இடம். முன்னுக்குப்போக ஊக்குவிப்பார்களேயன்றி பின்னுக்கு நகர விட மாட்டார்கள்" என்றேன். நல்ல விசர் ஒன்றிடம் மாட்டுப்பட்டதுபோல் அவன் முகம் அலுத்துக்கொண்டது.

என்னை எரிபொருள் நிரப்பு நிலையத்தின் எல்லைக்குள் விட்டு ஏனையவர்கள் உள்ளே வராதவாறு கயிறு ஒன்றை இழுத்துக் கட்டினார்கள். எனக்கோ உள்ளம் துள்ளிக்குதித்துக்கொண்டது. மனதினுள் அந்தக்கயிறு தாலிக்கயிறாகத் தோன்றியது. ஐயரின் மந்திரங்கள், மங்கல வாத்தியங்கள் முழங்கின. முகத்தில் பூரிப்பு. எனது முகத்தில் தெரிந்த மாற்றத்தைக் கண்டு முன்னால் நின்றவன் இது முழுவிசர்தான் என அறுதியாக முடிவு செய்துகொண்டான்.

ஊறறிய தாலி கட்டியவன் எப்படியும் ஏமாற்றமாட்டான் என்ற நம்பிக்கையில் கொஞ்சம் மமதையுடன் கயிற்றுக்கு வெளியால் நின்றவர்களை திரும்பிப்பார்த்தேன். "இனியும் ஏன் நிற்கிறியள் போங்கோ, கோ கோம்" என்று நக்கலாக சொல்ல வாய்வரை வந்த வார்த்தைகளை அடக்கிக்கொண்டேன். "கோ கோம்" என்று வார்த்தைகள் வந்துவிட்டால் பிறகு எரிப்புத்தான். நமக்கேன் சோலி?

பெற்றோல் பம்பி கண்ணுக்கு நன்றாகத்தெரியும் தூரத்துக்கு எனது முன்னேற்றம் அடைவுமட்டத்தை எட்டும் நிலைக்கு வந்தது. "என்னடா தம்பி மீற்றரில 450.00 என காட்டுது, லைனில் நிற்கிற நேரத்தில விலையைக் கூட்டிப்போட்டாங்களோ? இரவிலதானே கூட்டுற வங்கள். லைனில் இரவுபகல் தெரியாம நிற்கின்றமோ?"

"ஐயா உங்களுக்கு என்ன பைத்தியமோ? அது 95 ஒக்ரேன் பெற்றோல்தான் அடிக்கினம்"

"என்னது? 95 ஓ...., மோட்டச்சைக்கிளுக்கு பிரச்சினை இல்லையோ? 30 ரூபாவேற கூட"

"ஒரு பிரச்சினையும் இல்லை. சத்தமில்லாமல் நல்ல இதமா ஓடும். பயப்படாதேயுங்கோ"

அதுசரி!!! உள்ளூர் மாப்பிள்ளை தேடின பொம்பிளைக்கு லண்டன் மாப்பிள்ளையை கட்டி வைச்சா கசக்கவேபோகுது. பஞ்சத்திலையும் யாழ்ப்பாணத்தான் மோட்டச்சைக்கிளுக்கு 95 ஒக்ரேன் அடிச்சு ஓடுறதை ஆமி பார்க்கட்டும். உலக வங்கிக்காரன் கண்டாத்தான் பிரச்சினை. தாற கடனையும் தரமாட்டான். என்ன பெற்றோல் அடிச்ச தம்பி தென்னைமரத்தில தேங்காயை பின்னுக்கு பிடிச்சு முறுக்கி பிடுங்கிறதுபோல கையைத் தூக்கி வைச்சுக்கொண்டு டான்ஸ் ஆடுறான். ஒரு வேளை களைச்சுப்போய் வலிப்பு கிலிப்பு வந்திட்டுதோ?

"அதொண்டும் இல்லை ஐயா. பெற்றோல் முடிஞ்சிடுச்சாம். கோ கோம்" என்று சொல்லுகிறான். விரக்தியுடனும் கடுப்புடனும் அகன்றான் முன்நின்றவன். போறபோக்கைப்பார்த்தால் நாளைக்கு மூலம் வெளித்தள்ளி விடும். அவ்வளவு கடுப்பு முகத்தில் தெரிந்தது.

"என்னது பெற்றோல் முடிஞ்சிடுச்சா. கொஞ்சமா இருந்தா எல்லோருக்கும் கிடைக்கிறமாதிரி பங்கிட்டு அடிச்சிருக்கலாந்தானே. போத்தலுக்கையும் அதுக்கையும் இதுக்கையும் அடிச்சுப்போட்டு... இப்ப பக்கத்தில வர ... இப்படிச் சொன்னால்?"

"உங்களுக்கு இல்லை ஐயா, யார் பக்கத்தில நிண்டாலும் இப்படித்தான் சொல்லுவம்" என்றவனை..

'உன் அன்பு அவ்வளவுதானா கோபாலு? அப்போ நான் உன்னைப் பார்த்தது? நீ என்னைப் பார்த்தது எல்லாமே பொய்யா?' என்ற தோரணையில் நான் பார்க்க, அவன் முறைக்க, "இது தொடரும் கோபாலு... விடமாட்டேன் நாளைக்கும் வருவேன்" எனக் கூறியவாறே சைனாத்தயாரிப்பான என் எலக்ரோனிக் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினேன்.

சிலர் என்னை ஒருமாதிரிப் பார்த்தார்கள் ... சிரிப்பு. ... என்னை மாதிரி தன்பாட்டில் சிரிக்கும் வரிசையில் வரத்தானே போகிறார்கள்.

# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

1505–1948 வரை

**1905 செப்ரெம்பர்**
உடுவில் T.W.Crosette கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் முதலாம் வகுப்பில் முதுமாணி சிறப்புப் பட்டம் (MA first class)பெற்றார். ஆங்கிலத்தில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் இவர் பெற்றார்.

**1906 ஜனவரி 07**
பொதுவேலைத்திணைக்களத்தில் கடமையாற்றிய விஸ்வலிங்கம் காலமானார். இவர் யாழ்ப்பாணத்தில் பல கோயில்களைக் கட்டுவித்துள்ளதுடன் பொதுமக்கள் பாவனைக்கென பல பொதுக்கிணறுகளையும் வெட்டுவித்துள்ளார்.

**1906 ஜனவரி 10**
யாழ்ப்பாணம் கச்சேரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விவசாயக் கூட்டத்தில் அரச அதிர் லூயிஸ், மரவள்ளிச்செய்கை தொடர்பாக ஆய்வுக்கட்டுரையொன்றை வாசித்தார். மரவள்ளி ஒல்லாந்தராலேயே இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

**1906 ஜனவரி 22**
வாரண்ஸ் (Warrens) சேர்க்கஸ் குழுவினர் யாழ்ப்பாணம் வந்து சேர்க்கஸ் காட்சிகளை நடத்தினர்; யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற முதலாவது சேர்க்கஸ் நிகழ்ச்சி இதுவாகும்.

**1906 பெப்ரவரி 04**
சுகவீனம் காரணமாக மருத்துவர் றொக்வூட் சட்டசபை தமிழ் உறுப்பினர் பதவியிலிருந்து விலக .அவரது இடத்திற்கு சேர்.கனகசபை நியமிக்கப்பட்டார். சேர். கனகசபை பன்னாலையில் ஒரு பாடசாலையைக் கட்டியுள்ளதுடன், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இயக்குநர் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார். யாழ்ப்பாணத்துக்கு புகையிரதத்தை கொண்டு வருவதற்கும் சேர்.கனகசபை கடுமையாக உழைத்துள்ளார். சேர். முத்துக்குமாரசாமி,.சேர்.பொன் . இராமநாதன் போன்றோருக்கு அடுத்த படியாக, சேர் பட்டம் பெற்றவர் சேர்.கனகசபை.

**1906 மார்ச் 09**
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஸ்தாபகரும் கட்டடக் கலைஞருமான பசுபதிச் செட்டியார் காலமானார்.

**1906 ஏப்ரல்**
மருத்துவர் மில்ஸ் (C.T.Mills)காலமானார். இவர் யாழ்ப்பாண மருத்துவமனையின் முதலாவது சத்திரசிகிச்சை நிபுணராக கடமையாற்றிய பின் மானிப்பாய் கிறீன் மருத்துவக்கல்லூரியில் இணைந்து பல மருத்துவர்களை உருவாக்கியுள்ளார்.

**1906 ஓகஸ்ட் 04**
பேதுருப்பிள்ளை காலமானார்.யாழ்ப்பாணத்தில் முதல் முதல் பேக்கரியை ஆரம்பித்தவர் இவரே. இவரது பேக்கரி பிறீமியர் பேக்கரி எனவும் பேதுருப்பிள்ளை பேக்கரி எனவும் அழைக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கண்டி வீதி அகலமாக்கும் வரை இந்த பேக்கரி இயங்கி வந்தது.

**1907 ஓகஸ்ட்**
நல்லூர் சங்கிலியன் தோப்பு அரச மரபுரிமைச்சின்னமாக பிரிட்டிஷ் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது.

**1907 செப்ரெம்பர்**
மன்னாருக்கான புகையிரதப்பாதை திட்டத்தை பிரிட்டிஷ் அரசு அங்கீகரித்தது. இந்தத் திட்டத்தினூடாக இந்தியாவையும் மன்னாரையும் இணைக்க திட்டமிடப்பட்டிருந்தது.

**1907 ஒக்ரோபர்**
அரசாங்க அதிபர் ஜே.பி.லூயிஸ் (J.P.Lewis) முதலாவது அரசாங்க அதிபர் டைக்கின் உருவப்படத்தை பரிஸிலிருந்து எடுத்து வந்து யாழ்ப்பாணம் கச்சேரியில் காட்சிப்படுத்தினார்.

**1907 டிசெம்பர் 14**
யாழ்ப்பாண உள்ளூராட்சி சபைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது.

**1908 ஜனவரி**
மருத்துவர் மயில்வாகனம் காது ,மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சைநிபுணராகமைசூர் மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டார்.

**1908 பெப்ரவரி 02**
அருத்தோதயம் என்ற 60 வருடங்களுக்கொரு முறை இடம்பெறும் நிகழ்வு. இதில் பெருமளவு இந்துக்கள் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் கீரிமலையில் ஒன்று கூடி கலந்து கொண்டு, தீர்த்தமாடினர். சுன்னாகத்தில் தபால் நிலையம் அமைப்பதற்கு அரசு அனுமதியளித்தது.

**1908 பெப்ரவரி 30**
கோப்பாயில் சந்தை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

**1908 மார்ச் 30**
பிறீமன் (H.R.Freeman) யாழ்ப்பாண அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

**1908 ஏப்ரல்**
தம்பு பெங்களூர் உதவி கலெக்டராக நியமிக்கப்பட்டார். சுதுமலை, வண்ணார்பண்ணை ,செட்டித்தெரு பகுதிகளில் சின்னமுத்து தாக்கியது . நோயாளிகள் சங்கானை பழைய டச்சு தேவாலயத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர். மருத்துவர் ஆறுமுகம் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தார்.
ஆளுநர் ஹென்றி மக்லம் புகையிரதம் மூலம் யாழ்ப்பாணம் வந்தார். ஊர்வலமாக கோட்டை அரச மாளிகைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். மறுநாள் காலை 11.00 மணிக்கு முற்றவெளியில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் ஆளுநருக்கு வரவேற்பு உபசார நிகழ்வு இடம்பெற்றது. ஹென்ஸ்மன் வரவேற்புரை நிகழ்த்தினார். அன்றைய தினம் 'பிளேக் நோய்' பரவியமை காரணமாக ஊர்காவற்றுறை துறைமுகத்தை மூடும் தீர்மானம் ஆளுநரால் அறிவிக்கப்பட்டது.

**1908 செப்ரெம்பர் 25**
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

**1908 டிசெம்பர் 31**
கடும் மழை காற்று காரணமாக புதிதாக கட்டப்பட்ட பண்டத்தரிப்பு சந்தை சேதமடைந்தது.

**1909 மார்ச் 27**
சட்டசபை தமிழ் உறுப்பினராக பதவி வகித்தவரும் ஐரோப்பிய மருத்துவர்களின் பாராட்டைப் பெற்றவருமான மருத்துவர் றொக்வூட் காலமானார்.

**1909 ஏப்ரல் 12**
யாழ்ப்பாண மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவு மருந்தகத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. காலஞ்சென்ற மருத்துவர் றொக்வூட்டின் மருமகனான சட்டத்தரணி திருநாவுக்கரசுவின் நிதியுதவியில் இந்த மருந்தகம் அமைக்கப்பட்டது.

**1909 நவம்பர் 26**
பருத்தித்துறையைச் சேர்ந்த பிரபல கப்பல் முதலாளியும் நிலச்சுவாந்தாருமான முதலியார் நாகலிங்கம் காலமானார். இவரது சொத்துக்கள் காரணமாகவே இவருக்கு முதலியார் பட்டம் வழங்கப்பட்டிருந்தது.

(வரலாறு தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மானத்தி

○ கருணை ரவி

44

தோட்டை கனகத்திடம் வாங்காததை நினைத்து கவலைப்பட்டாள் பூங்கொடி. நித்தி கொடுத்த அந்த ஒற்றைத் தோட்டை 'கழட்டியெறி' என்று அவள் சொன்னது பூங்கொடிக்குப் பிடிக்கவில்லை. அந்த வார்த்தைகள் அவளுக்கு கவலை கொடுக்க காதில் இருக்கும் அந்த ஒற்றைத் தோட்டை தொட்டுப்பார்த்தாள். நித்தி கொண்டுவந்து தோட்டை கொடுத்த நாள் அவளுக்கு மனதில் வந்தது.

சீலை முடிச்சில் இருந்த பவுண் தோடுகளை எடுத்துப் பார்த்தாள். பவுண் தோடுகளைவிட காதில் இருக்கும் தோடு அவளுக்கு அழகாக இருந்தது. பையை அவிழ்த்தாள். அடியில் சிறிய கண்ணாடி இருந்தது. எடுத்து முகத்தைப் பார்த்தாள். முகத்தைவிட அந்த தோடுகள் அழகாக இருந்தன. ஆயிரம் சூரிய ஒளிக்கதிர்கள் பிரகாசித்தன அவளில். அந்தத்தோடுகளில் இருந்து நித்தி எழுந்து வந்தான்.

"அம்மா..."

என்றான். அவன் தொடர்ந்து

"அம்மா... அம்மா..."

என சொல்லியபடி இருப்பதாக இருந்தது. அப்படியே கண்ணாடியை கீழே வைத்தாள். காதில் இருக்கும் தோட்டை தொட்டுப் பார்த்ததும் உரத்து அந்தப் பெருஞ் சனங்களுக்குள் கத்தவேணும் போலிருந்தது. கண்ணாடியை பையின் அடியில் வைத்தாள். வைக்கும் போது கைகளில் சரையொன்று அகப்பட்டது. எடுத்தாள். அவள் ஊரைவிட்டு வெளியேறும் போது முற்றத்தில் அள்ளிய ஒருபிடி மண். மண்ணைப் பார்த்ததும் அந்தோனி, வள்ளி நாயகி, பூறாட்டி, கந்தவிக்கிழவன், நித்தி, மரியதாஸ் குடும்பம் என மண்ணில் இல்லாதவர்களை நினைத்துப் பார்த்தாள். கடற்கரையை நினைத்தாள். பறந்து வந்து மீன்களை அள்ளும் காகங்களை நினைத்தாள். இறுதியாக மண்ணைவிட்டு வர கால்களை நக்கிய நாயை நினைத்தாள்.



சஞ்சீவி
தொடர் கதை

நாயை நினைக்கும்போது ஜோசப்புவை நினைத்தாள். லிபரேசன் ஒப்பரேசன் நடவடிக்கை செய்து இராணுவத்தினர் வடமராட்சிக்குள் நுழைந்தபோது சனங்களை மந்திகை முத்துமாரியம்மன் கோயிலில் போய் இருக்கும்படி அறிவித்தார்கள். ஜோசப் கோயிலில் போய் இருக்க, கோயிலுக்கு விமானம் குண்டு போட்டுச் செத்தவர்களில் ஜோசப்புவும் ஒருவன். ஜோசப்பு செத்தவுடன் பூங்கொடி வீட்டில் தான் ஜோசப்பு வீட்டு நாய் நின்றது. நாயை அநாதையாக்கிவிட்டு வந்ததை எப்பவும் நினைப்பாள்.

விசுவமடு புளியடியில் பழைய தறப்பாள் ஒன்றை ஒரு ஓட்டோக்காரன் கொடுத்தான். அருகில் இருந்த நான்கு தடிகளை நட்டு தறப்பாளைப் போட்டு அதுக்குள் பத்து நாட்கள்தான் இருந்தாள். வட்டக்கச்சியால் இரவோடு இரவாக தருமபுரத்துக்கு இராணுவம் வந்தது. இயக்கம் சுண்டிக்குளச் சந்தியிலிருந்து சுண்டிக்குள கடற்கரை வரைக்கும் மண் அணை அமைத்தார்கள். அவள் போய் உடையார்கட்டுப் பள்ளிக்கூடத்தில் இருந்தாள். பள்ளிக்கூடத்தில் கிளிநொச்சி ஆஸ்பத்திரி இயங்கியது. ஆஸ்பத்திரி என்றபடியால் அவள் ஷெல்லுக்குப் பயப்பிடவில்லை. பனிக்குளிருக்கு நிலத்தில் சீலை விரித்துப் படுத்தவளுக்கு கட்டடம் இதமாக இருந்தது.

நிருபன் இரு மேசைகளை அடுக்கி அதில் படுத்தான். உடையார்கட்டுக்கு வந்து நான்கு நாட்களில் விசுவமடு துயிலுமில்லத்தை இராணுவம் பிடித்தது. உடையார்கட்டு குளக்கட்டில் இராணுவம் ஏறிவிட்டதென சனங்கள் கதைத்தார்கள்.

"படார்"

என்றது ஒருஷெல். அதனைத் தொடர்ந்து ஆறேழு ஷெல்கள் அடுத்தடுத்து விழ நிருபன் மேசைக்குகீழே குப்புறப் படுத்தான். ஓடுகள் குலுங்கிக் கொட்டுப்பட்டன. சில கட்டடங்கள் இடிந்து விழுந்தன. மரங்களில் இருந்த கூடுகள் பிரிந்துவிழ காகங்கள் வானத்தில் அலாதுப்பட்டன. அழுகுரல்கள் காதை அடைத்தன.

எட்டத்தில் இருந்த பெண் ஓடிவந்து பூங்கொடிக்குப் பக்கத்தில் இருந்தாள். தான் ஒரு ரீச்சர் எனவும் விசுவமடுவுக்கு இராணுவம் வந்ததும் சிதறி ஓடுகையில் பிள்ளைகளைத் தவறவிட்டதாகவும் பதறினாள்.

பிணங்கள் முழத்துக்கு முழம் சிதறிக்கிடந்தன. சிலர் குற்றுயிராகத் துடித்துக்கொண்டிருந்தார்கள். பிணங்களைக் கடந்து பூங்கொடியும் நிருபனும் ஓட அந்தப்பெண்ணும் பின்னால் வந்தாள். அந்தப்பெண் கைப்பையைமட்டும் இறுக்கிப் பிடித்தபடி வந்தாள். பூங்கொடி உரப்பையுடன் வந்தாள். நிருபன் ரேடியோவைக் கைவிடவில்லை. அவள் போய் முப்பெருந்தேவியர் கோயிலடியில் இருந்தாள். அந்த ரீச்சரும் அவளுடன் வந்தது அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

தேராவில் துயிலுமில்லத்தில் நின்ற இராணுவம் வெள்ளைக் கொடி காட்டுவதால், சனங்கள் இராணுவத்திடம் போக வயல்வெளித் தென்னங்காணிகளில் இருந்தார்கள். இயக்கம் உடையார்கட்டில் இருந்து இருட்டுமடுவரை கிடுகுகளாலும் பனையோலைகளாலும் உரப்பைகளினாலும் மறைப்புக் கட்டினார்கள். சிலசனங்கள் உடையார்கட்டிலிருந்து இராணுவத்திடம் போனார்கள். கொஞ்சச்சனங்கள் இராணுவத்திடம் போக இயக்கத்துடன் சண்டை பிடித்தார்கள். இயக்கம் விடவில்லை. சிலர் இயக்கத்துக்கு அடிக்கப் போனார்கள். சனங்கள் ஆமியிடம் போக இயக்கத்துடன் சண்டை பிடிக்கிறார்கள். சிலர் இடித்துப் பிடித்துக்கொண்டு இராணுவத்திடம் போகப் போறார்கள் என்று சனங்கள் கதைக்கத் தொடங்க, ரீச்சர் வெளிக்கிட்டாள் தானும் போகப்போவதாக. பூங்கொடி சந்தோசமாக அவளுக்கு கையசைத்து விட்டாள்.

"பூங்கொடியக்கா...."

இந்திராணி சிரித்துக்கொண்டு பூங்கொடியைப் பார்த்தாள். சிரித்த முகம். கன்னத்தில் குழிவிழுந்த சிரிப்பு. பாவாடை, சட்டை, நீட்டுத் தலைமுடி. இந்திராணி இயக்கத்திலிருந்து விலத்தி விட்டாளா? அல்லது கனகம் கொடுத்த உடுப்புகளைப் போட்டுக்கொண்டு ஊருக்குப்போக ஆயத்தமானாளா? தலையைப்பார்த்தாள் பொய்முடி என்பது தெரியவில்லை. பயந்த சுபாவம். எப்பவும் வீட்டுக்குள்ளே இருப்பாள். அடக்கமாக இருந்தவள் எப்படி துணிந்து போராளியானாள்? அவளின் மிடுக்கான தோற்றம் பூங்கொடியை வியக்க வைத்தது. அவள் இயக்கத்துக்குத் தெரியாது சனம் போல சுண்டிக்குளத்தில் இருந்து ஊருக்குப் போகத்தயாராக இருப்பதை இயக்கம் கண்டால் எனும் அச்சம் அவளிடமில்லை. சிலநேரம் இயக்கம் அவளை விட்டிருக்குமா ஊருக்குப் போகிறதுக்கு? ஆர்ப்பரிக்கும் எண்ணங்களோடு அவளை கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் பூங்கொடி. 'சின்ன வட்டனாக இருந்தவன் இப்ப உயர்ந்து விட்டான் 'என நிருபனின் கன்னத்தோடு தனது கன்னத்தை ஒற்றியவள் கைகளை அசைத்துக் கொண்டு போனாள். இயக்கத்தால் சனங்களை கட்டுப்படுத்த முடியவில்லை. தருமபுரம் பள்ளிக்கூடத்தில் இராணுவத்தின் கட்டளைப்பணியகம். கொஞ்சச் சனங்களோடு கரும்புலி ஒன்றும் உள்ளே இறங்கியது. கட்டளைப் பணியகம் கிட்டியதும் கரும்புலி வெடிக்கும். சனங்களைத் தடுக்கும் போராளிகளுக்கும் கரும்புலி உள்நுழைந்தது தெரியாது. வோக்கியில் இருந்து கட்டளை வந்தது தடுக்க முடியாது விட்டால் கால்களில் சுடும்படி. அதன்படி அந்தப்போராளி, ஒருவனுக்கு காலில் சுட்டான். அவன் குனிய சன்னம் நெஞ்சில் பாய்ந்தது. இரத்தம் கொப்பளிக்க அவன் அப்படியே இறந்தான்.

"இயக்கம் சனங்களைச் சுடுகுது..." சொல்லிக்கொண்டு, இயக்கத்துடன் வாதிட்டவர்கள், சண்டை பிடித்தவர்கள், இயக்கத்துக்கு அடிக்க கையோங்கியவர்கள் எல்லோரும் சிதறி ஓட

"டும்..."

நிலம் அதிர்ந்தது. இயக்கத்தின் கட்டுப்பாட்டை மீறி ஆமியிடம் ஓடின சனங்களைத் தேராவில் பாலத்தில் இருந்த இராணுவத்தினர் சுட்டனர். கரும்புலி தருமபுரத்தில் வெடித்தது என சனங்கள் கதைக்க பூங்கொடி வெந்தாள் யார் பிள்ளையோ என.

"பூங்கொடியக்கா..."

நக்கீரன் பூங்கொடியைக் கண்டு ஓடிவந்தான். அவனும் தேராவில் மட்டும் போய் திரும்பி ஓடிவந்தான். "அக்கா கரும்புலியா வெடிச்சது கனகமக்காவின்ரை இந்திராணி"

(வருவாள்)



# வெறுமையில் ஒடுங்கும் விடியல்

ஆனையூர்க்கவிராயர்

வாழ்வில் மயானத்தில்
தொலைக்கும் மதியீனம்
கௌவிய மானிட மனங்களை
அதிகாரவெறி சிறைப்பிடிக்கும்போது
ஒருதேசம்
அக்கினிக்குழம்பு தழுவும்
பூக்களைப் போல
புழுதியாய் பறக்கும்

அழிவின் சந்நிதியில்
புதையல் தேடும் அறியாமையின்
வெற்றுக் கனவுகள்
பசி, பட்டினி என்று இல்லாமை
என்னும் பொல்லாமையின்
வருடலில் மக்கள் வாழ்வை
இருளில் புதைக்கும்

ஆணவ மிடுக்கில்
சிக்குண்ட அதிகார
உச்சியின் கடிவாளம்
இல்லாத ஆலோசனைகளை
புறக்குடத்து நீராக்கிய
முடிவுகள்– அகம்பாவத்தில்
தோய்ந்த தீர்மானங்கள்– இன்று
நாடெங்கும் எதுவுமே
இல்லை... இல்லை.. என்ற
சொல்லாய் எதிரொலிக்கும்

கோரத்தாண்டவமாடும்
குருட்டுச் சிந்தனையின்
குளியலில் கருவான
முடமான திட்டங்கள்
குடிமனைகள் தோறும்
பட்டினிச் சாவை பரிசளிக்க
வீதியெங்கும் வீர உலாவரும்

தேசமாந்தரின்
உழைக்கும் ஒவ்வொரு கணமும்
வீதிகளில் வரிசைகளில் வீணே
தொலைந்து போக பொருளாதாரம்
பாதாளம் நோக்கி வெறுமையின் கைதியாக
ஈடேற முடியாத இலட்சியங்களின்
உறவுகளாகி நரக வாழ்வுச் சகதியில்
மிதக்கும் பூஞ்சருகுகளான
மானிட ஜென்மங்கள்!

வீட்டுக்கு வறுமையெனில்
ஒருவேளை விடியல் பிறக்கும்
நாட்டுக்கே வறுமையென்றால்
நாசகாரச் செயல்களின்
நர்த்தன பூமியாய்
நாட்டையே மாற்றும் நெட்டூரம்
இன்று மக்கள் மனங்களில்
நெருப்பு விதைகளாய் கொதிக்கும்
உணர்ச்சிப் பெருக்கு நாளை
புயல் வேகத்தில் புலப்படும்

கொரோனாவின் படை எடுப்புக்கு
ஈடுகொடுத்தாலும் இன்று
கொடிய வறுமையின்
அடிமைகளாய் மக்கள்
இன, மத பேதங்கள் கரைய
நாடெங்கும் பொல்லாப் பெருந்துயர்
தீக்குழம்பாய் ஊற்றெடுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கோகுலராகவன்

# பொன்மணி எங்கே?



பொன்மணி ஒரு ஈழத்துத் திரைப்படம்.
எனக்கு பன்னிரெண்டு வயதிருக்கும் போது. இந்த திரைப்படத்தை ரூபவாஹினியில் பார்த்தேன்.
இலங்கைத் திரைப்படங்கள் அனேகமாகவற்றை ரூபவாஹினியில் பார்க்க கிடைத்தது நல்ல வாய்ப்புத்தான்.
நான் முதல் பார்த்த இலங்கை தமிழ்த்திரைப்படம் பொன்மணிதான். படத்தில் வசன உச்சரிப்பு யாழ்ப்பாண தமிழில் ஒரு மாதிரியாகவே இருந்தது.
"பொன்மணி தனியவே இருக்கிறாய்? இரு வெளிய போட்டு வாறன்"
நாயகன் நாயகியிடம் சொல்லும் காட்சிதான் இது. ஏன் இவ்வாறு சொல்லுகிறார்? ஏன் வெளியே போகிறார்?
எதுவும் காட்சியில் கண்டு பிடிக்க முடியாது. அதைவிட அந்த மொழி உச்சரிப்பு தாங்க முடியவில்லை. படம் பார்த்த சிலநாட்கள் வீட்டில் இந்த உரையாடல் நடக்கும். என் அண்ணன்களில் ஒருத்தன்.
"ராகவன் தனியவே இருக்கிறாய்? இரு தோட்டத்துக்கு போய்வாறன்"
அதே மாதிரி பேசுவான். சிரிப்போம்.
படத்தின் இயக்குநர் யாழ்ப்பாண அடையாளமாக இதைக் காட்ட முனைந்தது அதிகப்பிரசங்கித்தனமாகவே தோன்றுகிறது. ஆனால் இதையே தெனாலி படத்திலும் கமல் பண்ணி மூக்கு உடைபட்டார். கமல் பேசும்போது சிரிப்பாக இருந்தது . எந்தப் பிரதேச பாஷையை அவர் பேசுகிறார் என புரியவில்லை.
இலங்கை வானொலி நாடகங்கள் தூய தமிழையே உபயோகித்தன. கூத்துக்களும் அவ்வாறே நடிக்கப்பட்டன . வாடைக்காற்று திரைப்படத்தில் இந்த மாதிரியான தொனி இல்லை .
கே.எஸ்.பாலச்சந்திரன் "நான் அதை விக்கப்போறதில்லை"
என்று அருமையாக வசனம் பேசுவார். சாதாரண யாழ்ப்பாண பேச்சு வழக்கு இப்படி இருக்கும் என்று எனக்கு தோன்றவில்லை. அந்த வசனத்தை நாங்கள் திரும்ப பேசும்போது உருவாக்கியே பேச வேண்டும். ஆகவே யாழ்ப்பாணத் தமிழ் அவ்வளவு இழுவை கொண்டதல்ல. பொன்மணி படத்தின் பல குறைகளுள் அதுவும் ஒன்று. கதை காவலூர் இராசதுரை. கதை நல்ல கதைதான். கதைச்சுருக்கம் இதுவே.




"உயர்சாதி பெண் தன்னைவிட குறைவான சாதி உடைய ஆணை காதலித்து ஓடிப்போய்விட உயர்சாதி அவளைக் கொன்று விடுகின்றது.
இந்தக் கதையை 'சவசவ' என்று இழுத்து அடித்து காட்டுகிறார்கள். நாயகியின் சவ ஊர்வலம் படத்தின் முடிவில் 10 நிமிடத்துக்கு மேலாக போய்க்கொண்டிருக்க பார்வையாளர் வெறுமனே அதைப்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். "என்னடா சங்காரம்" என்ற மாதிரி.
நாயகியின் அண்ணனாக வரும் குழந்தை ம. சண்முகலிங்கம் ஒரு காட்சியில் நடந்து கொண்டேயிருப்பார் . ஏன் நடக்கிறார் என்று பார்வையாளனுக்கு ஒன்றுமே புரியாது. இயக்குனருக்குத்தான் வெளிச்சம்.
திரைப்படத்தின் ஒரு காட்சி அடுத்த காட்சியுடன் தொடர்புள்ளதாக இருந்தாக வேண்டும். இதில் எந்தத் தொடர்பும் இல்லை.
இயக்குநர் தர்மசேன பத்திராஜ ,சிங்கள சினிமாவில் மிகப் புகழ் பெற்றவர். பொன்மணி திரைப்படத்தை ஏன் இவ்வாறு சொதப்பினார் என்று புரியவில்லை. யாழ்ப்பாணத்தில் ஒரு வாரம் கூட தியேட்டர்களில் பொன்மணி தாக்குப்பிடிக்கவில்லை என்கின்றன இதன் பதிவுகள்.
தமிழ் நடிகர்கள். சிங்கள இயக்குநர் என்ற மொழிப்பரிமாற்றம் படம் சோடையாகிப்போக , காரணமாக இருந்திருக்கலாம். இதே கதையமைப்புடன் வந்த பாரதிராஜாவின் 'அலைகள் ஓய்வதில்லை' சக்கை போடு போட்டது
அண்ணனாக நடித்த தியாகராஜன் பெரிய நடிகரானார்.
பொன்மணி அணி ஒரு கலைத்திரைப்படத்தினை உருவாக்க நினைத்தது தப்பில்லை. ஆனால் அதற்கான ஆயத்தங்களை சரியாக முன்னெடுக்கவில்லை. செங்கை ஆழியானின் வாடைக்காற்று வணிக ரீதியில் தோற்றாலும், அது திரைப்படமாக அதிகம் பேசப்பட்டது. படத்தின் நிர்வாகத் தயாரிப்பாளராகவும் செயற்பட்ட காவலூர் இராசதுரை சொல்கிறார் "என்னை நம்பி தயாரிப்பாளர் பணம் தந்தார். நான் இயக்குநரை நம்பி கதையையும் பணத்தையும் கொடுத்தேன். நடிகர்கள் இயக்குநரின் புகழுக்கு பயந்து நடித்தனர். படம் இந்தநிலையை அடைந்தது.
படம் இரசிக்கும் படியாக இல்லை என்பதே அன்றைய இரசிகர்களின் பதிவு.
படத்தில் நடித்த நடிகர்கள் யாரென்றால் யாழ்ப்பாணத்தின் மிகுதி இல்லாத புத்தி ஜீவிகள் அனைவரும். பேராசிரியர் கைலாசபதி,திருமதி கைலாசபதி,டொக்டர் நந்தி,பேராசிரியர் மௌனகுரு ,குழந்தை சண்முகலிங்கம் இன்னும் பலர். இவ்வளவு பேரும் இயக்குநரிடம் படத்தின் தொய்வு பற்றி ஒரு வார்த்தை பேசாமல் நடித்து முடித்து விட்டது வியப்புத்தான் . அந்தக்கால யாழ்ப்பாண உயர்சாதி கட்டமைப்பு திரைப்படத்தை தோற்கடித்ததாகவும் ஒரு பதிவு இருக்கிறது.
ஆனால் காலமாற்றம் திரைப்படத்தை பேச வைத்திருக்க வேண்டுமே? பொன்மணிக்கு அவ்வாறு நடக்கவில்லை.
"அவள் அப்படித்தான்" திரைப்படத்துக்கு இதுதான் நிகழ்ந்தது. வெளியா[illegible] கவனிக்கப்படாவிட்டாலும் ,தமிழ் சினிமா தர வரிசையில் பத்து திரைப்ப[illegible] இப்போதும் முன்னணியில் "அவள் அப்படித்தான்" திரைப்படம் நிற்கிறது.

(கதைப்பம்)

# திரள்கிறது வெண்ணெய்.. ஆனால்..?



○ ந.பரமேஸ்வரன்

தற்போது சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக வெண்ணெய் திரண்டு வருகிறதா என்று யோசிக்க வேண்டியுள்ளது.
2009 மே 18 ஆம் திகதி 40,000 க்கும் மேற்பட்ட அப்பாவித்தமிழர்களின் பலியெடுப்புடன் ஈழத்தமிழர்களின் உரிமைப்போராட்டம் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்ற பிரசாரத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக தமிழ் மக்களின் விடிவு பற்றியே கனவிலும் நனவிலும் சிந்தித்து கொண்டிருக்கும் சிவாஜிலிங்கம் ,அனந்தி போன்றோர் வடக்கு மாகாணசபையில் ' இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை' என்ற தீர்மானத்தை நிறைவேற்ற 'பசி நோக்காது கண் துஞ்சாது' உழைத்தனர்.
குறிப்பாக 2001 ஆம் ஆண்டு வரை சிறிலங்கா இராணுவத்தின் கைக்கூலியாக செயற்பட்டு மாதாந்தம் 16,000 ரூபா சம்பளம் பெற்று வந்த ரெலோ உறுப்பினரான சிவாஜிலிங்கம் மாகாணசபையின் நடுவே அமர்ந்து இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்ற தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு சக உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தார். ஆனால் அனந்தி ,சிவாஜிலிங்கம் போன்றோரின் கோரிக்கையை விக்கினேஸ்வரன் நிராகரித்தார்; எனினும் பின்னர் தானே அந்தத் தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றி ஐ.நா. வுக்கு அனுப்பி வைத்தார்.
'சைக்கிள்' ஓட்ட வீரர்களும் வடக்கு ,கிழக்கு முழுவதும் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டு கையெழுத்துக்களை திரட்டி ஐ.நா. வுக்கு அனுப்பி வைத்தனர்.
இந்த இரண்டு தீர்மானங்களும் ஐ.நா. செயலரின் அல்லது ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் பார்வையில் அகப்பட்டதா என்பது வேறு விடயம். இந்த இரண்டு தீர்மானங்களும் ஐ.நா. செயலரின் பார்வையில் அல்லது ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் பார்வையில் அகப்பட்டிருந்தால் அவர் பதில் (acknowledgement) அனுப்பியிருப்பர். அவ்வாறு ஏதும் அனுப்பப்பட்டிருந்தால் அதை வைத்தே ஊடக மாநாடு நடத்தியிருப்பார்கள்.
சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டுமெனவும் சிலர் கோரிக்கை விடுத்தனர். புலம்பெயர் தமிழர்களின் பணத்தில் ஜெனிவா சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சிலர் ஐ.நா.மனித உரிமைகள் மாநாட்டில் கலந்து கொள்ள வருபவர்களை சந்தித்து அவர்களிடம் இனப்படுகொலை தீர்மானத்தை முன்வைத்தனர்.
[illegible] இனப்படுகொலை [illegible] இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் ஜெனிவா செல்லும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் தாங்கள் சந்திக்கும் வெளிநாட்டு பிரமுகர்களிடம் கோரிக்கை விடுத்தனர்; இதேவேளை இலங்கை அரசாங்கம் , இறைமையுள்ள ஒரு நாட்டின் மீது ஐ.நா. தலையிட முடியாது எனவும் தாங்கள் உள்ளக விசாரணை நடத்துவதாகவும் தெரிவித்தது. உள்ளக விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.
நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் கலப்பு விசாரணையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பரிந்துரை செய்தது. ஆனால் இலங்கை அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ராஜபக்சக்களை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டுமென தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் சிலர் பிரசாரம் செய்தனர்.
ராஜபக்சக்களை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த முற்பட்டால் நிச்சயமாக சீனாவும், ரஷ்யாவும் தமது வீட்டோ அதிகாரத்தை பாவித்து அதனை தடுக்கும் என்பதுதான் யதார்த்தம்.
இவை யாவும் ஒருபுறமிருக்க இப்போது பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் சேர். எட். டேவி (Ed Davey) கோத்தாபய மீதும் அவரது சகாக்கள் மீதும் பிடியாணை பிறப்பிக்க வேண்டுமென பிரிட்டிஷ் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். கடந்த புதன்கிழமை பிரிட்டிஷ் நாடாளுமன்றில் House of Commons இவர் ஆற்றிய உரையிலேயே இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.
இலங்கையில் இராணுவ செலவினங்களுக்கு பெருந்தொகையான நிதி ஒதுக்கீடு மற்றும் பொலிஸாருக்கு அதிகளவு அதிகாரம் போன்ற விடயங்களையே டேவி தனது உரையில் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் மேலும் தனதுரையில் பிரிட்டிஷ் அரசு தனது சர்வதேசப் பங்காளிகளுடன் இணைந்து அரசியல் பொருளாதார தீர்வுப்பொதி ஒன்றை முன்வைக்க வேண்டுமெனவும் இந்தப்பொதி தமிழ், முஸ்லிம் மக்களின் மனித உரிமைகள் போன்றவற்றைப் பாதுக்கப்பதாக அமைய வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ்ஸும் தற்போது இலங்கையில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களுக்குரிய மூல காரணம் கண்டறியப்படுவது அவசியம் என தெரிவித்துள்ளார்.
இப்போது தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் செய்ய வேண்டியது இனப்பிரச்சினைத்தீர்வுக்கு சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டிலும் ஆதரவு திரட்டும் பணியை மேற்கொள்வதே. இப்போது வெண்ணெய் திரண்டு கொண்டிருக்கிறது. தமிழ் தேசிய அரசியல்வாதிகள் உரிய இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டு இந்த பொன்னான சந்தர்ப்பத்தை பயன்படுத்துவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org